Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

விலை : ரூபா 25.00

என்றும் உங்களுடன்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016



# இந்துசமயத்திற்கு தனியான பல்கலைக்கழகம் - யாழ்.மாவட்ட அரச அதிபர் கோரிக்கை



இந்து மதத்திற்கு என தனியான பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் வேண்டுமென யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கூறினார்.

நாட்டில் பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களுக்கென, தனியான உயர்கல்விப்பீடங்கள் உண்டு. அங்கே சமயம், மற்றும் கலாச்சாரம் மொழி சார்ந்த பட்டப்படிப்புக்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால் இந்துக்களுக்கு என்று ஒரு தனியான உயர்கல்விப்பீடம் கிடையாது. இது தொடர்பாக இந்துசமய விவகார அமைச்சர் டி.எம் சுவாமிநாதனின் கவனத்திற்கும் கொண்டு செல்ல இருப்பதாக வேதநாயகன் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பெரிய பெரிய தனியார் இந்துமதக் கோவில்கள், பெருந்தொகை நிதியை வைத்திருக்கின்றன. எனவே, இந்த கோவில்கள் முன்வந்தால், இந்துசமயத்திற்கென தனியான பல்கலைக்கழகம் அமைக்கலாம் என வேதநாயகன் நம்பிக்கை தெரிவித்தார்.

☞ பார்க்க பக்கம் 2

## உள்ளே...

03. நிறுத்தப்பட்டது சங்கிலிய மன்னனின் சிலை வைப்பு

07. திருமலையில் தமிழ் பல்கலைக்கழகம் - மறைக்கப்பட்ட உண்மைகள்

02. குற்றக்கூண்டில் விக்கினேஸ்வரன்

தினச்செய்தி
என்றும் உங்களுடன்

T.P : 021 224 2636
Fax : 021 2242139
Web : www.thinacheithi.com / lk

## திரு. சீ.வி. விக்கினேஸ்வரனை குற்றவாளிக் கூண்டில் ஏற்றுங்கள்

தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தை உருவாக்கும் முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர் திரு.சீ. வி. விக்கினேஸ்வரனை குற்றவாளிக் கூண்டில் ஏற்றி விசாரணை செய்ய வேண்டும்.

திரு. விக்கினேஸ்வரன் மாகாணசபைத் தேர்தலிலே தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளராக போட்டியிட்டு வென்றவர். அதையடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டணி இவருக்கு வடமாகாணசபை முதலமைச்சர் பதவியை வழங்கியது. வழங்கப்பட்ட பதவியை வைத்துக்கொண்டு, வடமாகாண அபிவிருத்தி வேலைகளை செய்வார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இன்றுவரை வடமாகாணத்தில் அபிவிருத்தியில் ஒரு சிறு துரும்பைக்கூட இவர் கிள்ளிப் போடவில்லை. நீண்ட இரண்டு வருடங்கள்... இவர் முதலமைச்சர் பதவியேற்று கழிந்துவிட்டன. இவர் ஒரு சுத்த வெற்றுவேட்டு. முதலமைச்சர் பதவிக்கே லாயக்கு இல்லை என இப்பொழுது தெரியவந்துள்ளது.

மாகாணசபை பதவிக்காலம் ஐந்து வருடங்களாகும். அந்தப் பதவிக் காலத்தில் இரண்டு வருடங்கள் வெறுமனே கழித்த திரு.விக்கினேஸ்வரனைத் தொடர்ந்தும் இந்தப் பதவியில் வைத்திருப்பது, இலங்கை தமிழரசுக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டணியும் விடும் பெரும் பிழையாகும்.

கூரையில் ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவர், இவரா வானத்தைக் கீறி நட்சத்திரத்தைக் கொண்டுவந்து தருவார், என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

இவை எல்லாவற்றிற்கும் மேலாக தமிழ் மக்களின் அன்பிற்கும், அபிலாஷைகளுக்கும் பாத்திரமான இலங்கை தமிழரசுக் கட்சியையும், தமிழ்த் தேசியக் கூட்டணியையும் இரண்டாகப் பிரிக்கும் சகுனி மாமா வேலையில் இவர் ஈடுபட்டுள்ளார்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு என்றே தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. இரா. சம்பந்தன் தலைமையில் மொத்தமாக `பதினாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் [திரு.சம்பந்தன் உட்பட] உள்ளனர். அதேபோல திரு.விக்கினேஸ்வரனையும், [அவர் உட்பட] 30 மாகாணசபை உறுப்பினர்களையும் வடமாகாண மக்கள் தெரிவு செய்தார்கள்.

திரு. விக்கினேஸ்வரன் வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டு, வடக்கைக் கட்டியெழுப்புவார் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், முதலமைச்சரான திரு. விக்கினேஸ்வரன் ஆரம்பம் முதல் இன்றுவரை எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை.

இன்று குழப்பமான, 'தமிழ் மக்கள் பேரவை', என்ற அமைப்பை உருவாக்கியுள்ளார். உச்ச நீதிமன்ற நீதியரசராக இருந்த மனிதர், இன்று எம் அனைவரின் எதிர்பார்ப்புக்கும் மாறாக சாமானிய அரசியல்வாதியைப் போலவே நடந்து கொள்கின்றார்.

வருங்காலத்தில் தன்னையும், தனது பதவியையும் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சி, மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் அனுமதியைப் பெறாது இவ்வாறு ஒரு புதிய அமைப்பை உருவாக்கியுள்ளார்.

நீதியரசராக இருந்த மனிதருக்கு, தான் செய்வது குற்றம் என்று தெரியவில்லையா?

நக்கீரர் வாழ்ந்த, தமிழ்ப் பரம்பரையில் தான் தமிழராகிய நாமும் வாழ்ந்து வருகின்றோம். "நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே," அனுமதியின்றி ஒரு புதிய அமைப்பை உருவாக்கியது குற்றம்.

இந்த விடயம் சம்பந்தமாக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவரான திரு.இரா.சம்பந்தன் உடனடியாக திரு. சீ.வி.விக்கினேஸ்வரனை முதலமைச்சர் பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்ய வேண்டும். இவரிடம் எழுத்துமூலமான விளக்கம் கோரவேண்டும்.

திகதி நிர்ணயித்து, அந்த திகதிக்குள் இவரது விளக்கம் வேண்டும். அந்த விளக்கத்தை ஆராய்ந்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழரின் தர்மத்தை நிலைநாட்ட வேண்டும். இதுவே தமிழ்த் தேசியக் கூட்டணியும், திரு. இரா சம்பந்தனும் செய்யவேண்டிய தலையாய கடமையாகும்.

தர்மத்தின் வாழ்வுதனை சூதுகௌவும். ஆனால் தர்மம் என்றோ ஒரு நாள் வெல்லும்..

(01ஆம் பக்கத்தொடர்ச்சி)

# இந்துசமயத்திற்கு...

உதாரணத்திற்கு, நல்லூர் கந்த சுவாமி கோவிலை எடுத்துக் கொள்வோம். இது ஒரு தனிநபர் கோவில். இந்தக் கோவில் நிர்வாகம் நினைத்தால் தனியாக இந்து சமய பல்கலைக்கழகம் நிர்மாணித்து நடாத்த முடியும் என்று யாழ். மாவட்ட அதிபர் வேதநாயகன் கூறினார்.

யாழ்.மாவட்ட அதிபர் வேதநாயகன் மேலும் தெரிவிக்கையில்–

"யாழ் குடாநாட்டில், கோவில்களை நிர்மாணிப்பதிலும், ஆடம்பரமான திருவிழாக்களைச் செய்து பணத்தை வீண்விரயமாக்குவதிலேயே இங்குள்ளவர்கள் குறியாக உள்ளனர்.

மாறாக சமூக சேவைகளுக்கு எவ்வித உதவிகளையும் செய்ய முன்வருவதில்லை. எனவே இந்த ஆடம்பரமான திருவிழாக்கள் மற்றும் ஏனைய கேளிக்கை கூத்துக்கள் என்பவற்றைக் குறைத்து, இந்துசமயத்தை வளர்க்கும் வகையிலும், எமது கலாசாரத்தைப் பேணிப் பாதுகாக்கவும் கோவில்களின் நிர்வாகங்கள் முன்வர வேண்டும்," எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் இது தொடர்பாக 'தினச்செய்தி'க்கு மேலும் கூறியவை வருமாறு.

காலம்சென்ற செல்வி.தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவிலை நிர்வகித்து அதனூடாக பல்வேறு சமூகப்பணிகளை ஆற்றி வந்ததோடு, கோவில் நிர்வாகத்தையும் திறம்பட நடாத்தி வந்தார். அவரது மறைவிற்குப் பின்னரும் தற்போது அந்தப்பணி சிறப்பாகவே இடம்பெற்று வருகிறது.

குறிப்பாக துர்க்கா மகளிர் இல்லம் என்ற விடுதியை உருவாக்கி, வறுமைப்பட்ட பெண் பிள்ளைகளை அங்கு உள்வாங்கி, அவர்களுக்கான கல்வி வசதிகளை கோவில் வருமானத்திலேயே செய்து கொடுத்தவர் காலம் சென்ற தங்கம்மா அப்பாக்குட்டி.

எனவே, அவரின் முன்மாதிரியைக் கருத்தில்கொண்டு, ஏனைய கோவில் நிர்வாகங்களும் செயற்பட முன்வர வேண்டும். அதுமட்டுமன்றி வெள்ளிக்கிழமைகளில் நண்பகல் பூசை முடிந்ததன் பிற்பாடு மக்களுக்கு வாழ்க்கை முறையை உணர்த்தும் பயனுள்ள, ஆகக் குறைந்தது 30 நிமிடங்கள் முதல் ஒரு மணித்தியாலங்கள் வரை பிரசங்கங்கள் நடாத்த முன்வர வேண்டும் என வேதநாயகன் தெரிவித்தார்.

மேலும் யாழ். குடாநாட்டில் கோவில்கள் சம்பந்தமான நிலைபற்றி அரசாங்க, அதிபருடன் கூடவே இருந்த யாழ்ப்பாணம் இந்து சமய கலாசார உத்தியோகத்தர் திரு. எஸ்.உதயபாலனிடம் 'தினச்செய்தி' வினவியபோது அவர் வருமாறு குறிப்பிட்டார்:

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் 2004 ஆம் ஆண்டு புனரமைப்பு என்ற போர்வையில் உடைக்கப்பட்டு, 11 வருடங்கள் இழுபறியான வேலைகளின் பின்னர், 2015 ஆம் ஆண்டே கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அதுவரை, ஆலயத்தின் நிர்வாகசபை எவ்வித பொறுப்பையும் ஏற்கவில்லை. நிர்வாகசபை பொறுப்பையும் ஏற்கவில்லை. மாறாக நிர்வாகசபை தன்னிச்சையாக செயற்பட்டுக் கொண்டிருந்தது. இறுதியாக 2015 ஆம் ஆண்டு நிர்வாக சபையையும், தர்மகர்த்தா சபையையும் கூட்டி பிரதேச செயலாளர் தலைமையில் கூட்டம் நடாத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தின் பின், புதிய நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது. புதிய நிர்வாகசபை, பழைய நிர்வாக சபையினரால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கும், வேலையாட்களுக்கும் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்கவில்லை. இதனால் அரசாங்கத்தின் மூலம் கிடைத்த பணம் தடைசெய்யப்பட்டது.

இதன்மூலம் கட்டுமானப் பணிகளும் தடை செய்யப்பட்டது. அத்துடன் இந்த பழைய நிர்வாகம் 10 வருடங்களாக மாற்றமடையாமலேயே இருந்தது. சரியான கணக்கு வழக்குகளும் ஒப்படைக்கவில்லை. கணக்குகளும் சரியாகக் காட்டப்படவில்லை.

இதேபோன்று, உப்புமடம் சந்திரசேகர விநாயகர் ஆலயம், அதில் சிறி ஐயா பூசகராகக் கடமையாற்றி வருகின்றார். அந்த கோவில் தனது என்கிறார். நிர்வாகம் என்ற ஒன்று அங்கு இல்லை. நாங்கள் நிர்வாகம் ஒன்றை பிரதேச தலைவரின் தலைமையில் கூட்டம் கூடி உருவாக்க முயற்சி செய்தோம். ஆனால், அந்தப் பூசகர் எமது முயற்சிக்கு எதிராக உடனடியாக நீதிமன்றத்தில் வழக்கைப் போட்டுள்ளார். இந்த வழக்கு 2013 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகின்றது.

அதேபோன்று நீர்வேலி வாய்க்கால்தரவை முத்து விநாயகர் கோவிலிலும் வெளிப்படைத் தன்மையான நிர்வாக நடவடிக்கை இல்லை. அங்கு நிர்வாகம் செய்பவரே பூசகர்தான். இதனை மாற்றி நிர்வாகம் தெரிவு செய்யப்பட வேண்டும், என நடராஜா என்பவர் முறைப்பாடு செய்துள்ளார்.

இப்பொழுது பூசை செய்ய வந்த பூசகர்கள் கோவில்களை தங்களுடையது எனக் கூறுகின்றனர். கோவில்கள் தங்களுடையது எனக் கூறும் பூசகர்கள், தங்களுடையது எனக் கூறும் கோவில்களுக்கான ஆதாரங்களைக் காட்ட மறுக்கின்றார்கள்.

அத்துடன் கோவில் களுக்கான கணக்கை காட்டச் சொல்லிக் கேட்டால் அவற்றையும் காட்டுவதில்லை. எனவே இது தொடர்பாக கோப்பாய் பிரதேச செயலருக்கும் கடிதம் அனுப்பியுள்ளோம். ஆனால் பதில் இல்லை. எந்தவொரு தொடர்பும் இல்லை என்றார்.

இதுபோன்றே கல்வியங்காடு சட்டநாதர் சிவன் கோவிலிலும் பிரச்சினைகள் உள்ளன. அங்கு கோவில் நகைகள் இருவரிடம் உள்ளது. நிர்வாகம் ஊடாக அவற்றைப் பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரும் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

பருத்தித்துறை புலோலி வடக்கிலுள்ள பன்னையம்பதி பிள்ளையார் கோவிலிலும் குழப்பங்கள் உள்ளன. கோவிலுக்குச் சொந்தமான ஐந்து நிலங்களைக் காணவில்லை. கோவிலில் பூசை செய்பவரோ பதில் தருகின்றார் இல்லை என்று தெரியவருகின்றது.

அத்துடன் கொக்குவில் சிவசுப்பிரமணிய ஆலய நிர்வாக சபைக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையில் போக்குவரத்துப் பாதைகள் தொடர்பாக குழப்பங்கள் உள்ளன.

கல்வியங்காட்டிலுள்ள பொதுக் கோவிலான இலங்கை நாயகி அம்மன் கோவிலிலும் பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. அங்கு பரிபாலன சபை என்ற நிர்வாகம் உள்ளது. ஆனால் பரிபாலனசபையை புறந்தள்ளி, பூசாரியின் மருமகன் தனியாக செயற்படுகின்றார் என பரிபாலனசபை முறைப்பாடு செய்துள்ளது. கோவிலுக்கு வரும் நிதிகளைக் குறித்த பூசாரியின் மருமகன் தானே எடுத்துக்கொள்வதாக பரிபாலனசபையினர் தொடர்ந்து முறைப்பாடு செய்துவருகின்றனர். நிர்வாகத்தைச் சீராக நடாத்துவதற்கு, அவர் தடையாக இருப்பதாக தெரியவருகின்றது. குறித்த நிர்வாக சபையில் உயர்அரச அதிகாரி இருந்தும்கூட இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கண்டபாடாகத் தெரியவில்லை.

மல்லாகம் சாலம்பை முருகமூர்த்தி கோவில் நிர்வாகசபையில் இருப்பவர்கள் தாமே தனியாக செயற்படுகின்றனர். கோவிலில் பிரதிஸ்டை செய்யக் கொண்டு வந்த சிலைகள் எல்லாம் உடைத்துவிட்டதாகவும் அங்கு பிரச்சினைகள் உள்ளன.

அதேபோன்று, நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலிலும் நிர்வாகப் பிரச்சினைதான் தலைவிரித்தாடுகின்றது.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திலும் உண்டியல் உடைத்து எண்ணுவதில் பிரச்சினை எழுவதாகக் கூறுகின்றார்கள்.

யாழ் குடாநாட்டில் கோவில்களில் உள்ள குழப்பங்கள், பிரச்சினைகள் தொடர்பாக 80 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் எம்மிடம் வந்துள்ளன. பெரும்பாலும் கோவில் நிதி, நிர்வாகம் தொடர்பாகவே பிரச்சினைகள் மேற்கிளம்புகின்றன. சமூகத்தை வழிநடாத்தும் இக்கோவில்களிலேயே பிரச்சினை எனில் என்ன செய்வது.

மேலும் இலங்கையில் இந்து விவகாரத்திணைக்களத்தில் 6068 கோவில்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளன.

யாழ்.மாவட்டத்தில் மாத்திரம் 1529 கோவில்கள் பதிவில் உள்ளன. அதைவிட கிளிநொச்சியில் 200, முல்லைத்தீவில் 234, மன்னாரில் 120, வவுனியாவில் 352, அம்பாறையில் 192, மட்டக்களப்பில் 864, மற்றும் திருகோணமலை 280–(இங்கு மாத்திரம்தான் சனி பகவானுக்கு கோவில் உண்டு.) கோவில்கள் பதியப்பட்டு உள்ளன.

மக்கள் தமது துன்பங்களையும், துயரங்களையும் இறைவனிடம் சொல்லி தமது மனப்பாரத்தைக் குறைப்பதற்காக கோவில்களுக்குச் சென்றால், மக்களைவிட தெய்வங்களுக்கு மனிதர்களால் அதைவிடப் பிரச்சினை எனில், தெய்வங்கள் எங்கு சென்று தலையை முட்டி முறையிடுவது.

இந்து ஆலயப் பிரச்சினைகள் தொடர்கதையாகத்தான் நீளுமா? இதற்கு முடிவே இல்லையா?

– ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்.

# சங்கிலிய மன்னனின் சிலை வைப்பது நிறுத்தி வைக்கப்பட்டது


யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியில் சில காலமாக நிலவி வந்த சங்கிலி மன்னன் சிலையமைத்தல் பிரச்சினை முடிவுக்கு வந்தது.

கோப்பாயில் உள்ள தேசிய கல்வியியற் கல்லூரியின் (Jaffna, National College of Education) 'தமிழ் மன்றம்' யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி அரசனான சங்கிலிய மன்னனின் சிலையை கல்லூரி வளாகத்தின் முன் வைக்க வேண்டும் எனத் தீர்மானித்து, அதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டது. நிதி சேகரிக்கப்பட்டு சிலை செய்யும் வேலையும் ஆரம்பிக்கப்பட்டதாக தெரிகின்றது.

இந்நிலையில் சங்கிலிய மன்னனின் சிலையை வைக்கக் கூடாது என எதிர்ப்புக்கள் எழுந்தன. இந்த கடுமையான எதிர்ப்பினால் அந்த சிலை வைக்கும் முயற்சி கைவிடப்பட்டதாக தெரிகின்றது.

அது சம்பந்தமாக தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கத்தை 'தினச்செய்தி' சந்தித்து சங்கிலிய மன்னனின் சிலை வைக்கும் விடயம் சம்பந்தமாகக் கேட்ட பொழுது அது கைவிடப் பட்டு விட்டது எனக் கூறினார்.

பதினாறரை (16$\frac{1}{2}$) ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட தேசியற் கல்வியியற் கல்லூரியில்




அவ்வப்பொழுது சிலை அமைத்து அழகு படுத்துவது வழக்கம் என்றும், ஆனால் தற்பொழுது இந்து மன்னறத்தின் கோரிக்கையை நிறைவேற்ற முடியாதுள்ளது எனவும் பீடாதிபதியான எஸ். அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

தற்சமயம் யாழ்ப்பாணம் தேசியக் கல்வியற் கல்லூரியில் மூன்று வருடங்களுக்கான கற்பித்தலுக்கான தேசிய டிப்புளோமா வழங்கப்படுவதாகக் கூறினார்.

1985 ஆம் ஆண்டு இந்தக் கல்லூரி




ஆரம்பிக்கப்பட்டது. கோப்பாய் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்தக் கல்வியியற் கல்லூரிக்கான நிலத்தை முன்னாள் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வீ. தர்மலிங்கமும், அவரது மகன்களும் இலவசமாக வழங்கினார்கள் என்றும் தெரிகின்றது.

2017 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தக் கல்லூரியில் தொழில்சார் கல்விக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பிக்க இருப்பதாகவும், இந்த பட்டப்படிப்பு நான்கு வருட காலம் நடைபெறும் என்றும், இந்த நான்கு வருட பட்டதாரி பயிற்சியை முழுமையாக முடிப்பவர்கள் பிற்காலத்தில் பாடசாலைகளில் கல்வி கற்பிக்க வேண்டும் என்றும் அமிர்தலிங்கம் கூறினார்.

தற்சமயம் 2014 ஆம் ஆண்டு சேர்ந்த 187 மாணவர்கள் கற்பித்தலில் தேசிய டிப்புளோமா பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்கள் எனவும், அதேநேரம் 2013 ஆம் ஆண்டு சேர்ந்த 195 மாணவர்கள் தற்சமயம் பாடசாலைகளில் உட்பயிற்சியாளர்களாக இருக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

மேலும், 2013 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை, தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்று முடிந்துவிட்டதாகவும், அதில் விஞ்ஞானம் 250 மாணவர்களும், கணிதம் 200 மாணவர்களும், நடனம் 100 மாணவர்களும், மற்றும் சங்கீதத்திற்கு 100 மாணவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றினார்கள் எனவும் கூறினார்.


அதுமட்டுமன்றி மத்தியஅரசாங்கம் கல்விக்கோட்டத்தை நவீனமயமாக்குவதற்கும், மற்றும் அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்குமாக ரூபா ஐம்பது மில்லியன் ஒதுக்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களுக்கு செல்லமுடியாதவர்கள், தேசிய கல்வியியற் கல்லூரியில் சேர்வதற்கு விண்ணப்பித்து தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் தேசியக் கல்வியியற் கல்லூரியில் தங்கி படிப்பதற்கு விடுதியும், உணவுகளும் வழங்கப்படுகின்றன. இவர்களின் உண வுக்காக மாதாந்தம் தலா ரூபா 3000 ஒதுக்கப்படுகின்றது. உட்பயிற் சியாளர்களுக்கு மாதாந்தம் தலா 4000 ஒதுக்கப்படுகின்றது.

இந்தக் கல்லூரியில் ஆரம்பக் கல்வி, விஞ்ஞானம் மற்றும் கணிதம் (தமிழ் மொழியிலும், ஆங்கில மொழியிலும்), சங்கீதம், நடனம், சித்திரம் மற்றும் பிரதான ஆங்கிலம், நாடகமும் அரங்கியலும், நூலக சாஸ்திரம் ஆகிய பாடங்கள் போதிக்கப்படுகின்றன.

ஆனால் தற்சமயம் இந்தப் பாடங்கள் முழுவதும் இக்கல்லூரியில் போதிக்கப்படவில்லை என்று தெரியவருகின்றது.



எதிர்வரும் காலங்களில் கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் நடைமுறையிலுள்ள அனைத்துப் பாடங்களும் அங்கேயே போதிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக பீடாதிபதி அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

தினச்செய்தி தொடர்பான
விமர்சனங்கள், ஆக்கங்கள்
வரவேற்கப்படுகின்றன.
*தொடர்புகளுக்கு :*
தில்லைகட்டி லேன்,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
தொலைபேசி : 021 7539300
தொலைநகல் : 021 7539300
இணையம் : thinacheithi@gmail.com

# அரசகேசரியின் பதில்கள்



கேள்வி: *தமிழ்மக்கள்பேரவை உருவாக்கம் கூட்டமைப்பிற்குள் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது போல் தெரிகிறதே?*

பதில்: உருவாக்கியவர்களை உடனடியாக குற்றவாளிகளாக காணவேண்டும்

**வ.பூபாலசிங்கம், வவுனியா**



கேள்வி: *தமது ஜனாதிபதி பதவிக்காலம் முடிவுற்றதும் பிரதமர் பதவிக்காக தேர்தலில் போட்டியிட உள்ளதாக ஜனாதிபதி மைத்திரி சூசகமாகத் தெரிவித்துள்ளாரே?*

பதில்: வரவேற்கத்தக்கது.

**ம. சுந்தரலிங்கம் , தெல்லிப்பளை**

கேள்வி: *வலிவடக்கில்700 ஏக்கர் காணியை எவ்வித ஆரவாரமுமின்றி அரசு விடுவித்துள்ளதே...? இந்த காணி விடுவிப்பு தொடருமா? அல்லது இதனுடன் முற்றுப் பெறுமா?*

பதில்: இந்தக் காணிகள் அனைத்தும் தமிழ் மக்களுக்கு சொந்தமானதே. எனவே ஆரவாரம் சந்தடிகள் எதுவும் இல்லாமல் இராணுவத்திடமும் கடற்படை, விமானப்படை ஆகியவற்றிடமுள்ள 6500 ஏக்கர்நிலமும் விடப்பட வேண்டும். இந்த முப்படைகளும் அரசுக்கு சொந்தமான காணிகளில் போய் கூடாரங்களை அமைத்துக் கொள்ளலாம்.

**வி. நாகேந்திரம்,விசுவமடு**

கேள்வி: *சமஷ்டி என்ற பேச்சிற்கே இடமில்லையென அரசாங்கம் மீளவும் தெரிவித்துள்ளமை பற்றி?*

பதில்: சமசஷ்டி என்பது ஒரு விதமான அரசியலமைப்பு. இந்த அரசியல் அமைப்பை சரியா? தவறா? என புரிந்துகொள்ளாமல் வீணே கூச்சலிடுவது அநாகரிகமான செயலாகும்.

**சி. கிருபாகரன், கொக்குவில்**


கேள்வி: *வடக்கிலுள்ள சில இனவாதசக்திகள் கூட்டமைப்பிற்கு எதிராக செயற்படத்தொடங்கியுள்ளதாக அமைச்சர் ராஜித கூறியிருப்பது குறித்து ....?*

பதில்: சரியாகவே கூறியுள்ளார். நூற்றுக்கு நூறுவீதம் உண்மை.

**க.கணேசலிங்கம், சுழிபுரம்.**

கேள்வி: *தனிக்கட்சி ஆரம்பிப்பாரா மஹிந்த?*

பதில்: ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். தண்ணீரில் மூழ்குகின்றவன் மிதக்கும் வைக்கோலையும் பிடித்து கரைசேர முயற்சிப்பான்.



**வ.தயாளன், மல்லாகம்.**

கேள்வி: *சங்கக்கார, மஹேலவின் ஓய்வுடன் இலங்கை கிரிக்கெட் அணி தரம்தாழ்ந்து செல்கிறதா?*

பதில்: எந்தவொரு விடயமும் அது அரசியலாக இருக்கலாம் கிரிக்கெட்டாக இருக்கலாம் தனிநபர்களை நம்பி இருக்கக்கூடாது. இன்றைய சூழ்நிலையில் எமது வீரர்களுக்கு போதியளவு பயிற்சி அளிக்கப்படவில்லை என்பதே உண்மை. எமது நாட்டிலேயே சிறந்த பயிற்சியாளர்கள் உள்ளார்கள். அவர்களை வைத்து எமது வீரர்களுக்கு சிறந்த பயிற்சி வழங்க வேண்டும்.

**ஆ.கமலினி, ஆனைக்கோட்டை.**

கேள்வி: *பசங்க 2எப்படி?*

பதில்: பசங்க 3 வந்த பிற்பாடு என்பதிலைக் கூறுகின்றேன்.

**சி.மயூரன், மானிப்பாய்.**

கேள்வி: *தமிழ்மக்கள் பேரவையில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழு அழைப்பு விடுத்துள்ளதே?*

பதில்: இணைந்து நாசமாகப் போங்கள் என்று ஏற்பாட்டுக்குழு சொல்கிறதா?

**செ.குணரத்தினம், நல்லூர்.**



# சொன்னார்கள் சொன்னார்கள்...

புத்திஜீவிகள் எனும் போர்வையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசியல் கற்பிக்க சிலர் முனைகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் புத்திஜீவிகளுக்கு இடமில்லை தொண்டர்களுக்கு மாத்திரமே இடமுண்டு இதனை அரசியல் கற்பிக்க முனைகின்ற தமிழ்க் கட்சிகளின் புத்திஜீவிகள் உணர வேண்டும். கட்சியினை நேசிக்கின்றவர்களினால் மாத்திரமே கட்சியை வளர்க்க முடியும்

**கிழக்கு மாகாண விவசாய, மீன்பிடி, கால்நடை, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் ச.துரைராஜசிங்கம்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனுமதியின்றி, தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் பங்கெடுத்தது குறித்து, நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனிடம் விளக்கம் கேட்க வேண்டும்

தமிழ் மக் கள் பேரவையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி இணைந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை



**மாவை சேனாதிராசா**

தமிழ் மக்கள் பேரவையானது பரந்துபட்ட அளவில் மக்கள் பங்குகொள்ளும் அமைப்பாகவே உருவாக்கப்பட்டிருக்கின்றது. இவ் அமைப்பானது மக்களின் அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொண்டு தீர்வை ஏற்படுத்துகின்ற நோக்கத்தின் அடிப்படையிலேயே தற்போது உருவாக்கப்பட்டிருக்கின்றது. இந்த அமைப்பில் நாங்கள் மிகத் தெளிவான நிலைப்பாட்டிலேயே இணைந்து கொண்டிருக்கின்றோம்

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காகவோ அல்லது மாற்றுத் தலைமையை ஏற்படுத்துவதற்காகவோ தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்படவில்லை. மாறாக, கூட்டமைப்புக்கு துணையாகவும் தீர்வுத் திட்டமொன்றை முன் வைப்பதற்காகவுமே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.



**சித்தார்த்தன் எம்.பி**

விடுதலைக்காக போராடுகின்ற ஒரு இனம் தன்னுடைய தேசிய இலக்கை அடைவதற்காக தமிழ் மக்கள் பேரவை போன்ற அமைப்புக்களை உருவாக்குவதில் எந்தவிதமான தடைகளும் இல்லை. அதை சந்தேகம்கொண்டு பார்க்கத் தேவையில்லை

'கடந்த கால அரசாங்கத்தினால் ஏமாற்றப்பட்டு வந்த தமிழ் மக்களின் ஆதரவுடன் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டும், பிரச்சினைக்கு இதுவரையில் தீர்வு கிடைக்காமையினால் மக்கள் அதிருப்தியில் இருக்கின்றனர்.

வடக்கு – கிழக்கு இணைந்த தீர்வு கிடைக்குமா, இலங்கை அரசு ஒற்றையாட்சி என்ற முறைமையில் இருந்து வெளியில் வந்து சமஷ்டி முறையில் தீர்வினை பெற்றுக் கொடுக்குமா என்ற சந்தேகங்கள் மக்களிடம் இருக்கின்றன.



இவை உட்பட காணி, பொலிஸ், நிதி உள்ளிட்ட மாகாணசபை அதிகாரங்கள் தொடர்பிலும் மக்கள் மத்தியில் சந்தேகம் உருவாகி வரும் நிலையில், இவ்வாறான அமைப்புக்கள் உருவாவதை தடுக்க முடியாது. இதனை நாம் வரலாற்றில் இருந்து உணர்ந்து கொள்ள முடியும். எனவே இதனை தவறான கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடாது'

**சிவஞானம் சிறீதரன் எம்.பி**

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மிகவும் ஒற்றுமையுடனும் புரிந்துணர்வுடனும் அரசாங்கம் செயற்பட்டு வரும்போது வடக்கில் உள்ள சில இனவாத சக்திகள் கூட்டமைப்புக்கு எதிராக செயற்பட ஆரம்பித்துள்ளன.



ஒரு அமைப்பை உருவாக்கிக் கொண்டு வடக்கில் சில இனவாத சக்திகள் நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் குழப்புவதற்கு முயற்சிக்கின்றன.

இந்த இனவாத சக்திகளின் செயற்பாடுகளினால் நாட்டின் நல்லிணக்க செயற்பாடுகள் பாதிக்கப்படும் அபாயம் காணப்படுகின்றது

**அமைச்சர் ராஜித சேனாரட்ன**

ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ள சகல தரப்பினருக்கும் இடையில் உடன்பாடு காணப்படுகிறது. எனினும் சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை.

அதே வேளை, 1972 அரசி யலமைப்பு போன்று உருவாக்கப் படவுள்ள புதிய அரசியலமைப்பு மக்கள் மீது திணிக்கப்பட மாட்டாது.



அரசியலமைப்பு மாற்றம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, பொதுசன வாக்கெடுப்பின் மூலமே இது நடைமுறைப்படுத்தப்படும்.

புதிய அரசியலமைப்பின் ஊடாக மாகாணசபை முறையை ஒழிக்கும் திட்டம் கிடையாது.

அனைத்து கட்சிகள், சிறுபான்மை கட்சிகள், சிவில் அமைப்புகள் பொதுமக்கள் அடங்கலாக சகல தரப்பினரதும் கருத்துக்களைப்பெற்றே புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்படும்

**பிரதி அமைச்சர் அஜித் பெரேரா.**

கடவுள் ஒன்றே. ஆனால் மனிதர்கள்தான் அவர்களது கற்பனைக்கு ஏற்ப பல ரூபங்களில் கடவுளை சிலை வடிக்கின்றனர்.


**கே.ரி. இராஜசிங்கம்.**




பழைய இடதுசாரிகளே

# மக்கள் விடுதலை முன்னணி மீது முதற் கல்லை எறிந்தவர்கள்

ஜே.வி.பியின் வரலாறு - 3



இராமலிங்கம் சந்திரசேகர்
மத்திய குழு உறுப்பினர்
மக்கள் விடுதலை முன்னணி.

1967ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கலதேவ பகுதியில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் 1967–68 காலப்பகுதியில் கட்சி இளைஞர்கள் மத்தியில் மிக வேகமாக வியாபித்தது. விஷேடமாக பல்கலைக்கழக மாணவர்களிடமும் கிராமத்து இளைஞர்களிடமும் கட்சியின் கருத்துக்கள் வேகமாக பரவின. அப்போது நாட்டில் தோன்றியிருந்த சமூக, பொருளாதார நிலைமைகளும் இளம் தலைமுறையினர் முகம் கொடுத்த பிரச்சினைகளால், இவர்கள், ஆளும் தரப்பினர் மீது நம்பிக்கையிழந்திருந்தனர். அதன் காரணமாக அவர்கள் ஜே.வி.பியைச் சூழ அணிதிரண்டனர்.

இவ்வாறு புதிய அரசியல் இயக்கமாக ஜே.வி.பி வளர்ந்தபோது சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொண்டனர். தமது அமைப்பு ஆரம்பத்திலேயே முகம் கொடுத்த இப்பிரச்சினையானது புதிய அரசியல் இயக்கத்தால் தாங்கிக்கொள்ள இயலாததாக இருந்த போதிலும் ஜே.வி.பியின் பயணம் முன்னோக்கிச் சென்றது. அதன் மூலமாக கட்சி வலுவடைந்தது. 1967–70களில் மக்கள் விடுதலை முன்னணி பல்வேறு இடர்பாடுகளைச் சந்தித்தது. அவைகள்:-

01. எதிரிகளின் காட்டிக் கொடுப்பும் அவதூறுகளும்.

02. அமைப்பினுள் தோன்றிய சந்தர்ப்பவாதம்

03. அரச அடக்குமுறை.

04. அமைப்பினுள் ஏற்பட்ட உள்ளக சுய விமர்சனம்.

இந்நெருக்கடிகள் மக்கள் விடுதலை முன்னணிக்கு பாரிய பாதிப்பினை ஏற்படுத்தியதுடன் 1971 போராட்டத்திற்கும் அவைகள் காரணமாக அமைந்திருந்தன.

உலகில் ஏனைய நாடுகளில் இடம்பெற்றது போன்றல்ல, புதிய பாட்டாளி வர்க்க புரட்சிகர இயக்கமான மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக முதலாவது சேற்றை வாரி இறைத்தவர்கள் போலி இடதுசாரிகளாகும். 1965இல் மக்கள் விடுதலை முன்னணி உருவாவதற்கான காரணம், இலங்கையில் பழைய இடதுசாரிகள் இடதுசாரியத்தைக் காட்டிக்கொடுத்தும் கைவிட்டும் வலதுசாரியத்தை நோக்கிச் சென்றதை நாம் முன்னரும் குறிப்பிட்டிருந்தோம். அதன் காரணமாக பழைய இடதுசாரிகளைக் கைவிட்டு புதிய இடதுசாரிய புரட்சிகர இயக்கமான மக்கள் விடுதலை முன்னணியை சூழ இளைஞர்கள் அணிதிரண்டனர். தமது இளைஞர் அணி கரைந்து போகும் போது, அவர்கள் தங்களது பழைய இடதுசாரித் தலைவர்களிடம் தங்களது கருத்தியில் குறைபாடுகளை நேரடியாகக் கேள்விகளாக தொடுத்தபோது, பழைய இடதுசாரித் தலைவர்கள் எண்ணத்தில் ஏதோவொன்று நடக்கிறதென அவர்கள் உணர்ந்தனர். அப்போது அவர்கள் தமது குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குப் பதிலாக மக்கள் விடுதலை முன்னணியை வேட்டையாடுவதற்கான திட்டத்தை வகுத்தனர். மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து தமக்கு தகவல்களைப் திரட்டுவதற்காக இரகசிய ஒற்றர்களை அனுப்பினர். மக்கள் விடுதலை முன்னணியின் தோற்றம் பழைய இடதுசாரிகளுக்கு சவாலாக அமைந்ததனால் அதற்கெதிராக முதற் கல்லை எறிந்தவர்கள் பழைய இடதுசாரிகளாகும்.

**கம்யூனிஸ்ட் கட்சியின் ஒற்றர்கள்!**

அதன் அடிப்படையில் 1969களில இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையான அத்த (உண்மை) மக்கள் விடுதலை முன்னணி மீது முதலாவது காட்டிக்கொடுப்பையும் முதலாவது அவதூறு இயக்கத்தையும் கட்டவிழ்த்துவிட்டது. ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு எதிராக இளைஞர்களை உள்ளீர்க்கும் சீ.ஐ.ஏ சதி எனும் தலைப்புச் செய்தியின் கீழ் இக்காட்டிக் கொடுப்பை மேற்கொண்டது மட்டுமல்லாமல் மக்கள் விடுதலை முன்னணிக்கு சீஐஏ லேபலையும் ஒட்டினர். கம்யூனிஸ்ட் கட்சி இக்காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தகவல்களைத் திரட்டுவதற்கு ஒற்றர்களையும் பயன்படுத்தியது. இந்த ஒற்றர்களில் ஒருவர் மக்கள் விடுதலை முன்னணியுடன் தொடர்பு கொண்டு 1969 நடுப்பகுதியில் தனமல்வில பகுதியில் நடைபெற்ற கல்வி முகாமில் கலந்து கொண்டிருந்தார். 1968இன் பின்னர் அடிப்படை வகுப்புக்களை பூர்த்தி செய்த மற்றும் அமைப்பினுள் செயற்பட்டவர்கள் மேலதிக மார்க்ஸிச கல்வியை பெற்றுக் கொடுப்பதற்காகத் தொடர்ச்சியாக 7 நாட்களாக கற்பிக்கப்படும் கல்வி முகாம நடத்தப்பட்டது. இந்த முகாம் மிகவும் குறைந்த வசதிகளுடன் மிகவும் கஷ்டமான நிலைமையின் கீழ் நடாத்தப்பட்டது. 1969இல நடைபெற்ற தனமல்வில கல்வி முகாமில் கலந்துகொண்ட கம்யூனிஸ்ட் கட்சியின் ஒற்றர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் புதிய புரட்சிகர கட்சி இயங்குவதாகவும் அது தமது இருப்பிற்கு பாரிய அச்சுறத்தலெனவும் புரிந்துகொண்ட கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மக்கள் விடுதலை முன்னணியின் பிறப்பை முளையிலேயே கிள்ளியெறிவது பற்றி சிந்தித்தனர். மக்கள் விடுதலை முன்னணி மீது சீஐஏ லேபலை ஒட்டியதும் அது அப்போது ஆட்சிபீடமேறியிருந்த ஐக்கிய முன்னணிக்கு ஆபத்தெனவும் கருதியதன் காரணமாக முதலாளித்துவ இயந்திரத்திடம் காட்டிக் கொடுத்ததன் காரணமாகவும் அடக்குமுறைக்கு ஏதுவான சூழலை உருவாக்கினர்.

இதனிடையே மக்கள் விடுதலை முன்னணி முகம்கொடுத்த மற்றைய நெருக்கடியானது இயக்கத்தினுள் தோன்றிய குழுவாதப் போக்காகும். 1969இல் ஆரம்பித்து இந்தக் குழு 3 பிரிவினராக மக்கள் விடுதலை முன்னணியில் இனங்காணக்கூடியதாயிருந்தது.

01. தர்மசேகரா குழு

02. டீ.ஏ குணசேகர குழு எனப்படும் கோட்டே குழு

03. சரத் விஜேசிங்க குழு எனப்படும் பேராதெனிய குழு

இவைகளில் கட்சிக்கு பாரிய பாதிப்பினை ஏற்படுத்தியதில் தர்மசேகரா குழுவே முன்னிலை வகித்தது.

அரசியல் அமைப்பு என்பது கொள்கை கோட்பாடுகளை சூழ யாப்பிற்கு அமைவாக ஒன்றுகூடும் பிரிவாகும். ஆனால், குழு என்பது கொள்கைக்காக அல்ல ஒரு தனி நபரின் கீழ் திரண்டிருக்கும் பகுதியினராகும். அவர்கள் கட்சியின் பொதுவான அமைப்பு முறைகளுக்கு ஏற்ப ஸ்தாபனப்படுவதற்குப் பதிலாக கட்சியினுள் தனியான குழுவாக செயற்படுகின்றவர்களாகும். இது ஓர் அரசியல் கட்சிக்கு பாதகமான நிலைமையாகும். குழுவாதமென்பது மனித உடலில் ஏற்படும் புற்று நோயைப் போன்றதாகும். 1969இல் நிலவிய குழுவாதமானது அதைக் கட்சியினுள் ஏற்பட்ட குழுவாக அல்ல வெளியில் தோன்றிய ஒன்றாகவே புரிந்து கொள்ள வேண்டும். வித்தியலங்கார பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கத்தின் தலைவராக இருந்த தர்மசேகரா கட்சியில் இணைந்து கொண்டபோது குழுவாகவே இணைந்து கொண்டுள்ளார். பேராதெனிய பல்கலைக்கழகத்தில் இருந்த சரத் விஜேசிங்கவும் குழுவாகவே இணைந்து கொண்டார். மற்றைய குழு கோட்டே டீ.ஏ குணசேகர குழுவாகும்.

மக்கள் விடுதலை முன்னணியின் ஆரம்பத்தில் இருந்த அதன் இலகுவான அமைப்பு முறையும் மறுபுறத்தில் மக்களிடம் துரிதமாக விரிவடைந்தபோது அதற்குத் தேவையான அமைப்பாளர்களையும் தலைவர்களையும் உருவாக்கும் அவசர தேவையின் காரணமாகத் திறமைகளை வெளிப்படுத்தியவர்களையும் தலைமைத்துவத்திற்கு ஆற்றலை வெளிப்படுத்தியவர்களையும் கட்சிக்குள் உள்வாங்க நேரிட்டது. ஆனால் அவர்கள் கட்சியினுள் செயற்படும் போது தமது குழுவாதப் போக்குகளை கைவிட்டு செயற்படுவதற்குப் பதிலாக குழுக்களாகாவே செயற்பட ஆரம்பித்தனர். இந்தப் பிரச்சினையின்போது கோட்டே குழுவினரை ஓரளவு கட்டுபாட்டிற்குள் கொண்டுவர முடிந்துள்ளது. பேராதெனிய குழுவான சரத் விஜேசிங்க பின்னர் குழுவாதத்தைக் கைவிட்டு கட்சியினுள் ஐக்கியமாகச் செயற்பட்டார். ஆனால் தர்மசேகரா குழுவை அவ்வாறு கொண்டுவர முடியாது போயுள்ளது. அதன் காரணமாக 1969களில் தர்மசேகரா குழுவை கட்சியிலிருந்து வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் பின்னர் தர்மசேகர குழு ஜே.வி.பிக்கு எதிராகச் செயற்பட்டதுடன், 1970இல் ஆட்சிபீடமேறிய ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஜே.வி.பியை அடக்குமுறை செய்வதற்கான சதியைக் கட்டவிழ்த்துவிட்டது 1971ஆம் ஆண்டில் அவர்கள் மாவோவாத இளைஞர் முன்னணி எனும் பெயரிலும் தாயகத்தைப் பாதுகாக்கும் சங்கம் எனும் பெயரிலும் செயற்பட்டனர்.

**தர்மசேகராவின் துரோகச் செயல்**

தர்மசேகரா குழுவினர் கட்சிக்கு எதிராகவும் தோழர் ரோகண விஜேவீராவுக்கு எதிராகவும் மேற்கொண்ட சதிகள் மற்றும் காட்டிக்கொடுப்புகள் பல அடங்கியிருந்தன. அதில், தர்மசேகரா குழுவினரின் என்.ஏ நந்தசிறி என்பவர் தோழர் ரோகண விஜேவீர பற்றிய தகவல்களை இரகசிய பொலிசாருக்கு வழங்கியமை. அதேபோன்று ஹம்புராகல ஜயசேகராவும் பண்டாரகம ரொசண்டல் பெரேராவும், தோழர் ரோகண விஜேவீராவை கொலை செய்வதற்காக முட்டை வியாபாரியாக வேடம்பூண்டு கதிர்காமத்தில் தோழர் சிறிபாலவின் வீட்டிற்கும் சென்றுள்ளாாகள். அதே போன்று தர்மசேகராவின் ஆதரவாளரான பிக்கு ஒருவரான கெடேபொல சுமதிபால தேரர் மூலமாக கட்சியைப் பற்றிய சகல தகவல்களையும் இலங்கரத்னாவுக்கு காட்டிக் கொடுத்திருந்ததோடு இவைகளை இலங்காரத்னா 1970களில் அப்போது இராஜாங்க அமைச்சராக இருந்த ஜே.ஆர் ஜயவர்தனவுக்கு பெற்றுக் கொடுத்திருந்தார். இவ்வாறு தர்மசேகரா குழு கட்சிக்கு எதிராக எதிரிகளிடம் கட்சியை காட்டிக் கொடுத்து எதிர்ப்புரட்சிவாத பணியை ஆற்றினர். அதே வேளை தாம் ரெடிகல் வாதியாக இருப்பது போன்ற மாயையை ஏற்படுத்தினார்.

1969 நடுப்பகுதியில் 1970களின் ஆரம்பத்தில் இடம்பெற்ற தர்மசேகரா குழுவினரின் காட்டிக் கொடுப்பானது மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிரான அரசின் அடக்குமுறையின் ஆரம்பத்தை கோடிட்டுக் காட்டியது. 1970 ஆரம்பத்தில் தோற்றம் பெற்ற அடக்குமுறை நிலைமைகளை பற்றிக் கலந்துரையாடுவதற்கு முன்னர். 1968–69 ஆம் ஆண்டுகளில் மக்கள் விடுதலை முன்னணியின் பயணத்தைப் பற்றிய விஷேட போக்குகளை எமது கவனத்தில் கொண்டாக வேண்டும்.

பாட்டாளி வர்க்க புரட்சிகரமான இயக்கமாக மக்கள் விடுதலை முன்னணி உருவாவதற்கான காரணம், அன்று நிலவிய சமூக, பொருளாதார, அரசியல் சூழல் காரணமாகவும், மக்களின் அன்றாட வாழ்வு நிலைமையில் மாற்றம் வேண்டும். என்பதற்காகவும் இடதுசாரித்துவ கோட்பாட்டில் முரண்பட்டுக் கொண்டவர்களின் ஐக்கியமின்மை காரணமாகவும், பெரும் இடைவெளி நிலவியதாலும் பாட்டாளி வர்க்கம் நட்டாற்றில் கைவிடப்பட்ட நிலைமை ஏற்பட்டதாலும் புதியதோர் அமைப்பிற்குத் தேவை ஏற்பட்டிருந்தது. அந்த இடைவெளியை நிரப்புவதற்கான எண்ணத்தைக் கொண்டிருந்த இளைஞர்களால் மிகக் கடினமானதோர் நிலைமையில் பெயரிடப்படாத இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

**மக்கள் விடுதலை முன்னணி எனும் பெயர் உருவானது எப்படி?**

*(அடுத்த இதழில் பார்ப்போம்)*

## மாஓ சேதுங்



சரியான கருத்துக்கள் எங்கிருந்து வருகின்றன? அவை வானத்திலிருந்து விழுகின்றனவா? இல்லை. அவை மனதில் இயல்பாகவே உள்ளனவா? இல்லை. அவை சமூக நடைமுறையிலிருந்து, அதிலிருந்து மட்டுமே, வருகின்றன. அவை மூவகையான சமூக நடை முறைகளிலிருந்து வருகின்றன: உற்பத்திக்கான போராட்டம், வர்க்கப் போராட்டம், விஞ்ஞானப் பரிசோதனை. மனிதனுடைய சமூக இருப்பே அவனது சிந்தனையைத் தீர்மானிக்கிறது. முன்னேறிய வர்க்கத்திற்குரிய தனிச்சிறப்பான சரியான கருத்துக்கள் வெகுசனங்களாற் பற்றிக் கொள்ளப்பட்டதும் அக் கருத்துக்கள் சமூகத்தையும் உலகையும் மாற்றும் ஒரு பொருண்மையான சக்தியாகின்றன.

# திருமலையில் தமிழ் பல்கலைக்கழக இயக்கம் மறைக்கப்பட்ட உண்மைகள்

## முன்னுரை

மலையகத் தமிழர்களின் குடியுரிமை பறிப்பு சட்டமூல விவகாரத்தில் இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலத்துடன் முரண்பட்டு, இ.த.கா கட்சியில் இருந்து, பிரிந்தவர்களான எஸ்.ஜே.வி. செல்வநாயகம், கு.வன்னியசிங்கம், டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன் ஆகியோர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் 1949இல் ஸ்தாபித்ததே தமிழரசுக் கட்சியாகும். தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடப் பிரதேசங்களான வடக்கு, கிழக்கு மாகணங்களை தமிழ் மக்களின் தாயகப் பிரதேசமாக அடையாளப்படுத்தி, சமஷ்டி அரசியலமைப்பின் அடிப்படையிலான பிரதேச சுயாட்சி கோரிக்கையை முன்வைத்து செயற்பட்ட பெருமை தமிழரசுக் கட்சியையே சாரும். தமிழரசுக் கட்சியின் சுயாட்சி கோரிக்கையை வலுப்படுத்தும் நோக்கில் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் பிரதானமான அடிப்படைத் தேவைகளை சுயமாக பூர்த்தி செய்யும் செயற்திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. அதன் ஆரம்பமே தமிழர் தாயகத்தின் உயர்கல்வித் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கிலான தமிழ் பல்கலைக்கழக இயக்கம் 1954இல் தமிழரசுக் கட்சியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த இயக்கத்தை வளர்த்தெடுத்து தமிழ் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவிடும் பொறுப்பு பேராசிரியர்களான ஏ.டபிள்யூ மயில்வாகனம், ஏ.சின்னத்தம்பி ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.


“இலங்கைத் தமிழ் மக்களின் கல்வி, அறிவியல், கலாசார வேட்கைகளை நிறைவேற்றும் ஒப்புயர்வற்ற மத்திய நிலையமாக தமிழ் பல்கலைக்கழகம் ஒன்றின் தேவையை நாம் உணர்கின்றோம். தமிழ் பல்கலைக்கழக கால்கோள் விழா இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்கள் தங்களிடத்தில் தாமே கொண்டுள்ள நம்பிக்கையை காட்டும் பெருஞ்செயலாகும். தமிழ் பேசும் மக்கள் இவ் அரும்பெரும் பணியை செய்வதற்கு முன்வந்தமை ஒன்றுபட்டு உறுதிபூண்ட ஓரின மக்கள் தாங்களே தங்களுக்கு ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவ முடியும் என்பதை மெய்ப்பிக்கிறது.”

இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து அன்றைய ஆட்சியாளரான யூ.என்.பி யின் தலைவரான டீ.எஸ். சேனநாயக்கா தமிழர்களின் தாயகப் பிரதேசமான வடக்கு, கிழக்கில், அல்லை, கந்தளாய், பதவியா, அம்பாறை, கல்லோயா போன்ற பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றறங்களை அமுல்படுத்தி தமிழர்களின் இனப் பரம்பலை கேள்விக்கு உள்ளாக்கினார். 1956ல் எஸ். டபிள்யு.ஆர்.டி பண்டாரநயக்கா தலைமையிலான அரசு அமுலுக்கு கொண்டுவந்த சிங்களம் மட்டும் அரசகரும மொழி சட்ட மூலம் தமிழ் மக்களை தமது எதிர்காலம் தொடர்பில் அச்சுறுத்திய சந்தர்ப்பத்தில், தமிழ் மக்களை தமிழ்த் தேசிய அடிப்படையில் அணிதிரட்டி மேற்கூறப்பட்ட கருத்தியலை முன்வைத்து,

மூன்று தசாப்தகால மிதவாத அரசியலின் ஜனநாயக போராட்டங்களும், மூன்று தசாப்தத்திற்கும் மேற்பட்டகால தீவிரவாத அரசியலின் ஆயுதப் போராட்டங்களும் பாரிய பின்னடைவுக்குள்ளாகிய இன்றைய நிலையில், தமிழ் மக்களின் நியாயமானதும், நீண்டகால எதிர்பார்ப்புகளையும் வென்றெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதே த.ப.க.இயக்கத்தின் வரலாற்று சுருக்க கட்டுரையின் இலக்காகும். தமிழ் பல்கலைக் கழகம் ஒன்றினை நிறுவி தமிழர்களின் அரசியல் உரிமைகளை வலுப்படுத்திட வேண்டும் என்ற உயர்நோக்கில் திருகோணமலை பாரம்பரிய தமிழர்கள் ஒருவகை தியாகமாக வழங்கிய நிலங்களை, பேரினவாதிகளின் கைக்கூலிகளாக செயற்பட்டு தமிழர் தாயகத்தின் தனித்துவத்தை காட்டிக் கொடுக்கும் காக்கை வன்னியர்களான சொந்த இனத் துரோகிகளின் கையாடலுக்கு இலக்காகி சீரழிவுக்குள்ளாகி இருக்கும் த.ப.க.இயக்கத்திற்கு உரித்தான நிலங்களையும், சொத்துக்களையும் மீட்டெடுத்து திருகோணமலை மண்ணில் தமிழ் பல்கலைக்கழகம் ஒன்றினை நிறுவிடும் முயற்சியை உடனடியாக ஆரம்பித்திட பிரதேச வேறுபாடுகளை களைந்து தமிழ் மக்கள் மத்தியிலான புத்திஜீவிகளும் முற்போக்காளர்களும் முன்வர வேண்டும்.

### தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தின் நோக்கமும் வளர்ச்சியும்!

1954ல் தமிழரசுக் கட்சியின் வழிகாட்டலில், பேராசிரியர்கள்



தமிழ்ப்
பல்கலைக் கழகம்
திருகோணமலை
கட்டடக் கல் நாட்டு விழா,
சித்திரை மாதம் 27ம் நாள்
(10-5-59)
நிகழ்ச்சி நிரல்.

ஏ.டபிள்யூ.மயில்வாகனம், ஏ.சின்னத்தம்பி ஆகியோர் தலைமையில் வடபுல பாரம்பரியத்தைச் சேர்ந்த கொழும்பு வாழ் பிரபுத்துவ செல்வந்த சமூகங்களை சார்ந்தவர்களையும், அதிஉயர் அரச பதவி வகித்த தமிழர்களை செயற்பாட்டு உறுப்பினர்களாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதுதான் தமிழ் பல்கலைக்கழக இயக்கமாகும்.

த.ப.க.இயக்கம் தோற்றுவிக்கப்பட்டதன் நோக்கம் இலங்கை வாழ் தமிழ் மக்களின் சுயாதீனத்தை பறை சாற்றும் முகமாக தமிழ் மாணவர்களுக்கு அனைத்து துறைகளையும் உள்ளடக்கியதான தமிழ் பல்கலைக்கழகம் ஒன்றினை உருவாக்கி இலங்கை தமிழ் மக்களின் ஒன்றிணைந்த அரசியல் பலத்தை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

அன்றைய காலகட்டத்தில் பல்கலைக்கழக உயர்கல்விப் பாக்கியம், மேட்டுக்குடி குடும்பங்களைச் சார்ந்தோரினதும், அதிஉயர் அரச பதவிகள் வகித்தோரினது குடிமக்களான தமிழர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டது.

உயர்கல்வி நிறுவனமான தமிழ் பல்கலைக்கழகத்திற்கான நிலக்கொள்வனவு என்ற அடிப்படையில் மேற்படி நிலங்களை ஆகக்குறைந்த விலையில் கொள்வனவு செய்வதற்கு தமிழரசுக் கட்சியின் ஒப்புதலுடன் த.ப.க. இயக்கத்தின் உயர்மட்டம் முனைப்புடன் செயற்பட்டது. இதற்கு ஏற்புடையதாக கொழும்பு வாழ் மேட்டுக்குடி சமூகத்தினருக்கும், அதிஉயர் அரச பதவிகளில் அமர்ந்திருந்த தமிழர்களுக்கும் சலாம் போடுபவர்களும், வாரிசுகளுக்கும், ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருந்த மாணவர்களுக்குமே சாத்தியமான ஒன்றாகக் காணப்பட்டது.

இவ்வாறான சூழலில் தமிழ் பல்கலைக்கழக இயக்கம் தோற்றுவிக்கப்பட்டமையானது, அனைத்து தமிழ்மக்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பை பெற்றதுடன் பெருத்த எதிர்பார்ப்புகளையும் ஏற்படுத்தியிருந்தது. இப்பாரிய பணியை நிறைவேற்றி முடிக்க நாடு தழுவிய ரீதியில் பரந்து வாழ்ந்த தமிழ் மக்களிடத்தில் நிதி சேகரிக்கப்பட்டது. அரச, தனியார் துறைகளில் பணியாற்றிய பெரும்பான்மையான தமிழ் ஊழியர்கள் த.ப.க.இயக்கத்தில் சந்தாதாரர்களாக சேர்ந்து நீண்டகாலம் சந்தா செலுத்தியதன் மூலமாக த.ப.க.இயக்கத்தின் தேவைக்கும் அதிகமான பணத்தைக் குவிக்க உதவினர்.

தமிழர் தாயகத்தின் தலைநகர் என்ற வகையில் தமிழ் பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு பொருத்தமான பிரதேசமாக திருகோணமலை தெரிவுசெய்யப்பட்டது. பல்கலைக்கழகத்திற்கு ஏற்புடையதான நிலங்களாக திருகோணமலை உள்துறைமுக வீதியில் 5 ஏக்கர் நிலமும், நகரை அண்மித்ததான உப்புவெளியில் 83 ஏக்கர் நிலமும் திருகோணமலை பூர்வீகக் தமிழரசுக் கட்சியின் நெருங்கிய பிரமுகர்களுமான திருகோணமலை குட்டி பிரபுக்கள் மூலமாக மேற்படி நிலச் சொந்தக்காரர்களை அணுகினர். உயர்கல்வி நிறுவனமான தமிழ் பல்கலைக்கழகம் ஒன்றினை திருகோணமலை மண்ணில் நிறுவி தமிழர்களின் வரலாற்று உரிமையை நிலைநிறுத்திட உதவிடுமுகமாக மேற்படி நிலங்களை ஆகக்குறைந்த விலையில் த.ப.க.இயக்கத்திற்கு வழங்க முன்வர வேண்டுமென நிலச்சொந்தக்காரர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. தமிழ் பல்கலைக்கழகம் நிறுவப்படாத பட்சத்தில், நிலத்துக்காக பெற்றுக்கொண்ட பணத்தையும் அதற்கான வங்கி வட்டியையும் த.ப.க. இயக்கத்திற்கு மீளச்செலுத்தி தமது நிலங்களை திரும்ப பெற்றுக்கொள்ள முடியும் என்ற வாக்குறுதியும் கூடவே வழங்கப்பட்டது நம்பத்தகுந்த வாக்குறுதி செயலளவில் திருமதி.காசிப்பிள்ளை என்பவரது உப்புவெளி நிலக்கொள்வனவில் மட்டுமே சட்டரீதியாக உறுதி செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. திருமதி.காசிப்பிள்ளை த.ப.க. இயக்கத்தின் நம்பிக்கை பொறுப்பாளர்சபை உறுப்பினரும் அவ்வியக்கத்தின் திருகோணமலை பிரதேசசபை பிரதிநிதியுமான கிறிஷ்ணதாசனின் நெருங்கிய உறவினர் என்பதனாலேயே அவருக்கு மேற்படி உறுதிமொழி சட்டபூர்வமாக செயற்படுத்தப்பட்டது.

(தொடர்ச்சி 22 இல்...)

# பிரபாகரனும் - பாலசிங்கமும் நீண்டகால உறவுக்கு அத்திவாரம்



1977 ஆம் ஆண்டு யூலை 21 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆறுக்கு ஐந்து என்ற பெரும்பான்மையுடன் மொத்தமாக 140 இடங்களில் வெற்றி பெற்றது.

அதையடுத்து, பிரதம மந்திரியாக பதவியேற்ற ஜே.ஆர். ஜெயவர்த்தன தன்னை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதற்கான தீர்மானம் 22 செப்ரெம்பர் 1977 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு, 4 பெப்ரவரி 1978 ஆம் ஆண்டு தன்னை புதிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பிரகடனப்படுத்தி பதவியேற்றுக் கொண்டார்.

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது, புதிய அரசியல் சட்டம் ஒன்றை உருவாக்குவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்து, அதற்கான மக்களுடைய ஆணையைப் பெற்றார். அதன் பிரகாரம் 1972ஆம் ஆண்டு குடியரசு அரசியல் சட்டத்தை மாற்றியமைப்பதற்கு மசோதா ஒன்றை அறிமுகப்படுத்தினார்கள்.

20 ஒக்ரோபர் 1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றம் அந்த தீர்மானத்தை நிறைவேற்றிற்று. அந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, அன்றைய சபாநாயகர் ஆனந்த திஸ்ஸ டி அல்வில் அரசியல் சட்டத்திருத்தங்களைக் கொண்டுவர தெரிவுக்குழு ஒன்றை நியமித்தார்.

அந்தத் தெரிவுக் குழுவிலே ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் முக்கிய உறுப்பினர்களாக காமினி திஸநாயக்க, லலித் அத்துலத்முதலி, றொனி டி மெல், கே. டபிள்யூ தேவநாயகம் மற்றும் நைனா மரக்கார் ஆகியோர் அங்கம் வகித்தனர். ஜே.ஆர். ஜெயவர்த்தன நிறைவேற்று ஜனாதிபதியாக தன்னை பிரகடனப்படுத்திக் கொண்ட பின்னர், கட்சியின் அடுத்த நிலையில் இருந்த ரணசிங்க பிறேமதாஸ பிரதம மந்திரியாக பதவியேற்றுக் கொண்டார். அவரும் அந்தத் தெரிவுக் குழுவிலே அங்கம் வகித்தார்.

அந்தத் தெரிவுக்குழு சமர்ப்பித்த தீர்மானங்களை நாடாளுமன்றம் 31 ஒக்ரோபர் 1978 ஆம் ஆண்டு அங்கீகரித்து, புதிய அரசியல் சட்டமாக நிறைவேற்றிற்று, இலங்கையை ஜனநாயக சோசலிச குடியரசு நாடாக பிரகடனப்படுத்திற்று. அந்த அரசியல் சாசனம் 7 செப்ரெம்பர் 1978 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்தது.

இந்த அரசியல் சட்டத்தை வரைந்தவர்கள் டாக்டர். ஏ. ரீ. வில்சன் (இவர் தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே. வீ. செல்வநாயகத்தின் மருமகனாவார்.) மற்றும் டாக்டர் சரத்கூரே, மார்க் பெர்னாண்டோ. அத்துடன் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் சகோதரரான எச். டபிள்யூ. ஜெயவர்த்தன ஆகியோர் அடங்குவர்.

அந்தக் காலத்தில் தான் உமா மகேஸ்வரனுக்கும் பிரபாகரனுக்கும் இடையில் பிரச்சினைகள் தீவிரமடைந்தது. இருவர் மத்தியிலும் ஏற்பட்ட பிரச்சினையை தீர்வுக்கு கொண்டுவர லண்டனிலுள்ள இலங்கையரான மாக்சீயக் கொள்கைகளில் ஈடுபாடுடைய அன்ரன் ஸ்ரனிஸ்சிலோஸ் பாலசிங்கத்தையும், அவரது மனைவியான அடேல் ஆன் இருவரையும் சென்னைக்கு அழைத்துவர முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

அன்ரன் பாலசிங்கம் ஆரம்பத்தில் கொழும்பிலுள்ள 'வீரகேசரி' பத்திரிகையின் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தார். அந்தக் காலத்தில்தான் எஸ். ரீ. சிவநாயகம் என்ற பிரபல பத்திரிகையாளர் இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர்களுடனான கருத்து வேறுபாட்டினால் கட்சியின் வாரப் பத்திரிகையான 'சுதந்திரன்' பத்திரிகையிலிருந்து விலகி இருந்தார். அப்பொழுது 'வீரகேசரி' நிர்வாகம் அவரை அழைத்து வீரகேசரியின் இணையாசிரியர் பதவியை வழங்கியது.

சிவநாயகத்துடன் பணிபுரிந்த அவரது உதவியாளரான கே.கே. இரத்தினசிங்கம் 'சுதந்திரன்' பத்திரிகையில் இருந்து விலகி, பிரிட்டிஸ் கவுன்சிலில் தமிழில் மொழிபெயரப்பாளராக பதவி ஏற்றார். சில காலமாக சிவநாயகம் வீரகேசரியின் இணையாசிரியராக இருக்கும் பொழுது, குணசேனாஸ் என்ற பிரபல புத்தகசாலை உரிமையாளர்கள் ஏற்கனவே ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளை நடாத்தி வந்தார்கள். 1965 ஆம் ஆண்டளவில் அவர்கள் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க முடிவெடுத்து சிவநாயகத்தை பிரதம ஆசிரியராகவருமாறு அழைப்பு விடுத்தனர்.

அதையடுத்து, சிவநாயகம் அந்த அழைப்பை ஏற்று, 'தினபதி' என்ற தினசரிப் பத்திரிகைக்கும், 'சிந்தாமணி' என்ற வாரப்பத்திரிகைக்கும் ஆசிரியர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

அவ்வாறு அந்தப் பதவியை ஏற்றுக் கொண்ட அவரது நம்பிக்கைக்குப் பொறுப்பான பிரிட்டிஸ் கவுன்சிலிங்கில் பணிபுரிந்து கொண்டிருந்த இரத்தினசிங்கத்தை அழைத்து 'தினபதி' பத்திரிகைக்கு செய்தி ஆசிரியருக்கான பதவியை வழங்கினார். அந்த நேரத்தில் இரத்தினசிங்கம் விலகியதும் தமக்கு ஒரு அனுபவம் வாய்ந்த ஆங்கில, தமிழ் மொழி பெயர்ப்பாளர் ஒருவரை சிபாரிசு செய்யும் பிரிட்டிஸ் கவுன்சில் சிவநாயகத்திடம் கேட்டார்கள்.

இவ்வாறு ஒரு வேண்டுகோளை பிரிட்டிஸ் கவுன்சில் கேட்டுள்ளார்கள் என்பதை அறிந்த அன்ரன் பாலசிங்கம் தன்னைச் சிபாரிசு செய்யுமாறு அவரது நண்பர் இரத்தினசிங்கத்திடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.



— அரசகேசரி —

அதையடுத்து, அன்ரன் பாலசிங்கம் (அப்பொழு அவரை ஸ்ரனிஸ் சிலோஸ் என்றே அழைப்பார்கள்.) பிரிட்டிஸ் கவுன்சிலின் ஆங்கில தமிழ் மொழிபெயரப்பாளராக நியமிக்கப்பட்டார். அங்கே அன்ரன் தொடர்ந்து ஐந்து வருடகாலமாக கடமையாற்றினார்.

அக்காலத்தில் பிரிட்டிஸ் கவுன்சிலில் கரவெட்டியைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் தட்டச்சாளராக இருந்தார். அவரை ஸ்ரனிஸ் சிலோஸ் பாலசிங்கம் திருமணம் செய்து கொண்டார். அதையடுத்து,இருவரும் பிரித்தானியா சென்றார்கள். பிரித்தானிய சென்ற காலத்தில் கரவெட்டியைச் சேர்ந்த திருமதி. பாலசிங்கம் கடுமையான நீரிழிவு நோய்க்கு ஆளானார். அப்பொழுது சிறுநீரகப் பாதிப்பால், தினசரி சிறுநீர் சுத்திகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த வேலைக்கு அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த இளம்தாதிப் பெண்ணான அடேல் ஆன் நியமிக்கப்பட்டார்.

திருமதி. பாலசிங்கத்தின் உடல் நிலை மோசம் அடைந்துகொண்டே வந்தது. அப்பொழுது பாலசிங்கத்திற்கும், அடேல் ஆனுக்கும் இடையில் ஒரு நல்ல பரஸ்பர புரிந்துணர்வு ஏற்பட்டு வளர்ந்துவந்தது.

அப்பொழுது கரவெட்டியைச் சேர்ந்த திருமதி. பாலசிங்கம் காலமானார். பாலசிங்கம் அடேல் ஆனைத் திருமணம் செய்துகொண்டார்.

அக்காலத்தில் பாலசிங்கம் லண்டனில் சவுத் பாங் பொல்ரெக்னிக்கில் (South Bank Polytechnic) பட்டப்படிப்பு ஒன்றை மேற்கொள்ள சேர்ந்துகொண்டார். பாலசிங்கத்தை தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்திற்கு அதன் லண்டன் பிரதிநிதியான கிருஸ்ணன், பேச்சாளரான ஆர்.வி. இராமச்சந்திரன் (அன்ரன் ராஜா) மூலம் அறிமுகப்படுத்தப்பட்டார்.

அக்காலத்தில் அவர் முதன் முதலில் விடுதலைப் புலிகளின் தத்துவ விளக்கத்தை ஆங்கிலத்தில் 1979 ஆம் ஆண்டு வெளியிட்டார். அதையடுத்து 'ஒரு சோசலிச ஈழத்தை நோக்கி' என்ற தமிழ்மொழி மூலமான புத்தகத்தையும் வெளியிட்டார். தமிழ்மொழி மூலம் வந்த அந்தப் புத்தகம் யாழ்ப்பாணத்தில் பிரபலம் பெற்றது. அதன்பின், பாலசிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்தியில் மிகவும் செல்வாக்கு உடையவராக இருந்தார்.

எனவே அவரை விடுதலைப் புலிகளுக்கு அரசியல் வகுப்பு நாடாத்த சென்னைக்கு வருமாறு கிருஸ்ணன் அழைத்தார். அந்த அழைப்பை ஏற்று சென்னை வர பாலசிங்கம் சம்மதித்தார்.

அப்பொழுது உமா மகேஸ்வரனுக்கும், விவகாரத்துப் பெற்ற பெண்ணான ஊர்மிளா தேவிக்கும் இடையிலான பாலியல் தொடர்புப் பிரச்சினை உச்சகட்டத்தை அடைந்திருந்தது. அந்தக் காலத்தில் பிரபாகரன் ஊர்மிளாதேவியின் பெயரை எப்பொழுதுமே உச்சரித்தது கிடையாது. ஒருமுறை ஊர்மிளா தேவி பிரபாகரனை சந்தித்துப் பேச முயற்சித்த போது, அவருடன் பேச மறுத்த பிரபாகரன் கோபத்துடன் காறி உமிழ்ந்துவிட்டுச் சென்றார். உமா மகேஸ்வரனுடன் கள்ளத்தொடர்பு வைத்திருந்த ஊர்மிளா பிற்காலத்தில் வவுனியாவிலுள்ள காந்தீய பண்ணையில் வசித்து வந்தார். இறுதியில் அவருக்குப் புற்றுநோய் ஏற்பட்டுக் காலமானார்.

அந்தக் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் சென்னையில் வாழ்வதையே பாதுகாப்பு என்று எண்ணினார்கள். அடேலும், பாலசிங்கமும் லண்டனிலிருந்து சென்னை மீனம்பாக்கம் விமானநிலையத்தில் வந்து இறங்கிய போது, கிருஸ்ணன் அவர்களை சந்தித்து சென்னையில் ஒரு விடுதியில் தங்க வைத்தார்.

பாலசிங்கத்தை சென்னைக்கு வருமாறு பிரபாகரனே அழைத்திருந்தார். முதன்முதலாக பாலசிங்கத்தை பிரபாகரன் சந்தித்தது பற்றி அடேல் ஆன் எழுதிய புத்தகமான "The will to Freedom" இல் குறிப்பிடுகையில், "நாங்கள் சென்னைக்கு வந்து பிரபாகரனின் வருகைக்காக அன்று பகல் முழுவதும் காத்திருந்தோம். ஆனால் அவர் வரவேஇல்லை. விடுதலைப் புலிகளின் தலைவர்களை சந்திக்கும் பொழுது என்ன எதிர்பார்ப்பு என்றும் எனக்குத் தெரியவில்லை," என்றும் எழுதியிருந்தார்.

பிரபாகரன் தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான உதவியாளரான பேபி சுப்பிரமணியத்துடன் நள்ளிரவு பாலசிங்கத்தை சந்திக்க அவர் இருந்த விடுதிக்கு வந்தார். அவர் வெள்ளை நிற புஸ் சேட் ஒன்று அணிந்திருந்தார் என்றும், அந்த சேட் காற்சட்டைக்கு வெளியே நின்றதாகவும், இடுப்பில் பிஸ்ரல் வைத்திருந்ததாகவும், அதனை அந்த சேட் மறைத்திருந்ததாகவும் அடேல் எழுதியிருந்தார்.

இருவரின் முதல் சந்திப்புப் பற்றிக் குறிப்பிடுகையில், இருவரும் ஒருவரை ஒருவர் கண்களால் கூர்ந்து அவதானித்தனர். அது ஒரு பரஸ்பர அப்பியாசமாக

(தொடர்ச்சி 23 இல்......)

# லங்கா ராணி

*(கடந்தவார தொடர்ச்சி.....)*

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த நாகலிங்கம் சிறிது அமைதிக்குப் பின் கேட்டார்.

"சரி நீங்களே சொல்லுங்கோ ஒரு தமிழன் இந்த நாட்டின் பிரதமராக வர முடியுமா?"

கொழும்பு வியாபாரி யோசனையில் ஆழ்ந்துவிட்டு "ஏன் ஏலாது காசு வேணும் ஒவ்வொருத்தனுக்கும் ஒரு சாராயப் போத்தல், பொம்பிளைக்கு ஒரு சேலை, இது கொடுக்க உங்களுக்குப் பணம் இருந்தால் நீங்களும் வரலாம். காசுதான் வேணும்."

நாகலிங்கம் கேட்டார். "நான் ஒரு போத்தல் கொடுக்கிறன். ஒரு சிங்களவனும் ஒரு போத்தல் கொடுக்கிறான். யாருக்கு ஓட்டுப் போடுவாங்கள், சிங்களவனுக்குத் தான்."

கொழும்பு வியாபாரி யோசனை கூறுவதுபோல "அப்ப நீங்கள் இரண்டு, இரண்டு கொடுங்கோ."

நாகலிங்கம் சொன்னார்."அப்படி, அப்படியே கூட்டிக்கொண்டு போகச் சொல்லுறியளோ. எங்கை போய் முடியும்? அது சரி இதுக்கெல்லாம் யாரிட்ட பணம் இருக்குது." சிறிது நேர அமைதிக்குப் பின் நாகலிங்கம் தொடர்ந்தார். "அமெரிக்கனைத்தான் போய்ப் பிடிக்கவேணும். அவனும் இந்த நாட்களில நேரடியாக வரமாட்டான். வேற யாரையும் பிடிச்சுவிட்டுத் தான். அவன் ஏன் சும்மா தரப் போறான்?" நாகலிங்கம் நிறுத்திவிட்டுக் கொழும்பு வியாபாரியின் முகத்தை உற்று நோக்கினார். "எல்லாத்தையும் முதலில் எழுத்தில வாங்கிப் போடுவன். நான் காசைக் கொடுத்துப் பிரதமராக வர அவன் வந்து எனக்கு மேலே இருப்பான். இந்தச் சட்டத்தைப் போடு அந்தச் சட்டத்தைப் போடு என்று கூறுவான். இதுக்கு சனம் ஒத்து வரவா போகுது. இறுக்கிப் பிடிக்க வேணும். இது என்னவாக முடியும் சொல்லுங்கோ பார்ப்பம், வெளிநாட்டு மூலதனத்தை எடுத்து உள்நாட்டில் மகாராஜாவாக வாறதாகத்தான் முடியும்."

"அப்படிச் சொல்லாதையுங்கோ" கொழும்பு வியாபாரி சொன்னார். "அவர்கள் உதவி செய்யத்தான் வாறாங்கள்."

"என்ன உதவி பாருங்கோ, இவ்வளவு நாளும் எங்க போயிருந்தவை. இங்கைதானே நாங்கள் இருந்தனாங்கள்" நாகலிங்கம் நிறுத்தினார். அமைதி நிலவியது கொழும்பு வியாபாரி எதுவும் கூற முன்வரவில்லை. நாகலிங்கம் தொடர்ந்தார். இந்த விஷயங்கள் நீதி, நியாயம் என்கிற பேச்சுக்கு இடமில்லைப் பாருங்கோ. எனி என்ன அவன் ஆட்களை இங்கை வைத்துக் கொண்டு ஆட்டிப்படைக்கிறான். அவன்ரை பணத்தை அச்சடிச்சு எல்லாத்தையும் விலைக்கு வாங்கிப் போடுவான்."

இப்படித் தொடங்கின விடயத்தைவிட்டு நாகலிங்கம். வேறு பக்கமாக கதையைக் கொண்டு போய்க் கொண்டிருந்தார். அதில் கொழும்பு வியாபாரிக்கு அதிக நாட்டமில்லாமற் போகவே அவர்,

"இப்ப இந்த உல்லாசப் பிரயாணிகள் வருகினம். ஹோட்டல்கள் கட்டுகினம். அங்கை வந்து தங்கி றான்கள், எவ்வளவு காசு பாருங்கோ, வெளிநாட்டுச் செலவாணியல்லா"

"மெய் மெய், அவங்கள்தான் எங்கடை ஆட்கள் யாரும் அவங்கடை நாடுகளுக்கு உல்லாசப் பிரயாணிகளாகப் போகினமே? இதில் ஒரு பெரிய விளையாட்டு இருக்குது பாருங்கோ. ஏவறை விளையாட்டு"

"என்ன விளையாட்டு?"

"ஏவறைவாதிகள்"




"சொல்லுங்கோ"

நாகலிங்கம் சற்று நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தார்.

"மேற்கத்திய நாடுகளில் பல பிரச்சினைகள், பல மொழிகள், முதலாளி தொழிலாளி பிரச்சினைகள். இப்படி எத்தனையோ பிரச்சினைகள். இதுகளுக்கு மேலாக எல்லாரையும் ஒன்றுபடுத்த, அவங்கள் எங்களைக் கீழ்த்தரமாகப் பார்த்துத் தங்களை விட ஆட்கள் இல்லை என்கிறதும் உலகம் முழுவதும் தங்கடை காலுக்குக் கீழே கிடக்கிறது என்கிற எண்ணங்களை நிலைக்க வைக்கிறத்துக்குச் சகல வழிகளிலும் செயற்பட்டுக் கொண்டு நிற்கிறான்கள். இப்படியே இந்த எண்ணத்தில் ஊறிப் போனவங்களுக்கு இந்த நாடுகளுக்கு வந்திட்டுப் போக வேண்டுமென்கிற ஆசை வருந்தானே. அதுதான் வருகினம். எனி அவர்கள் வந்தவுடன், இதுகள் எங்கடை ஆட்களுக்கு எங்க விளங்கப் போகுதே? அவைக்கு எல்லா எடுபிடிகளுமாக நாங்கள் நின்று செய்தவுடன் மன ஆறுதல்கள் பாருங்கோ. இது நாங்கள் நிரம்ப சாப்பிட்டபிறகு ஏவறை விடுவம். அதுமாதிரித்தான். தங்கடை காலுக்குக் கீழே நாங்கள் இருக்கிறம். தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை, இங்கை இருக்கிறவங்கள் நாகரீகம் அற்றவன்கள், இவன்களுக்கு எல்லாம் நாங்கள் பெரியவன்கள் என்று நினைக்க நினைக்க அவையளுக்கு ஒரு மூட்டு வாராது பாருங்கோ. இப்படி ஒருக்கா வந்திட்டுப் போனா ஏவறை விட்டது மாதிரி." நாகலிங்கம் நிறுத்திவிட்டு மீண்டும் தொடர்ந்தார்.

"நாங்கள் இதில் கண்மூடித்தனமாக இருந்தால் எங்க கொண்டு போய் விடும் சொல்லுங்கபார்ப்பம்." நாகலிங்கம் கொழும்பு வியாபாரியை உற்று நோக்கினார். அவர் நாகலிங்கம் அடுத்து என்ன கூறப்போகிறார் என்பதையே எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்.

"பிறகும் எங்களை வெள்ளைக்காரனுக்கு விசிறி விசுக்கிற நிலைமைக்குத்தான் கொண்டுபோய் விடும்."

நாகலிங்கத்தின் ஆழ்ந்த கருத்துக்கள் இளைஞர்களையும் கவர்ந்திழுத்தது. குமார், சரவணனின் முகத்தைப் பார்த்தான். அதுவரைக்கும் நாகலிங்கத்தின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சரவணன் குமாரை நிமிர்ந்து பார்த்தான். நாகலிங்கம் எப்பொழுதும் தென்பகுதியில் காலத்தையோட்டியிருந்தபடியால் அவருடைய கடைக்கு வரும் பலருடைய கதைகளையும் நாட்டு நடப்புக்களையும், பத்திரிகைச் செய்திகளையும் நன்கு தெரிந்து வைத்திருந்தார்.

"இதுகள் உங்களுக்கு விளங்குகிறது இல்லைப் பாருங்கோ. வெள்ளைக்காரன் ஏன் பாருங்கோ இங்கை வந்தவன். தன்னுடைய பொருட்களை விற்கிறதுக்கும் இங்குள்ள பொருட்களை மலிவாகக் கொண்டு போறதுக்கும்தானே. உங்களுக்குத் தெரியுமே. வெள்ளைக்காரன் எங்கடை பருத்தியில் செய்த துணியைக்கொண்டு வந்து தந்துபோட்டு இங்கையிருந்து தங்கத்தையும் இரத்தினத்தையும் ஏத்திக்கொண்டு போனவன். நாடும் என்ன அவன்களுக்கு கீழேதானே இருந்தது."

கொழும்பு வியாபாரி இடை மறித்துக் கூறினார்,"இப்பதான் சுதந்திரம் கிடைச்சுட்டுதே"

நாகலிங்கம் மெதுவாக ஒவ்வொரு சொல்லாகத் தொடர்ந்தார்.

"சுதந்திரம், சும்மா விடுங்கோ... நாங்கள் தான் இதைச் சுதந்திரம் என்று கூறிக்கொண்டு இருக்கிறம். அவனுக்கு நல்லாத் தெரியும் இங்கை என்ன நடக்குதெண்டு முந்தி உள்ளுக்க இருந்து செய்து கொண்டிருந்தவன் இப்ப வெளியில் நின்று செய்கிறான். அவன் தான் தீர்மானிக்கிறான் பாருங்கோ. எங்கடை பொருட்களுக்குக் குறைவாகவும் அவங்கடை இயந்திரங்களுக்குக் கண்விண் தெரியாமல் விலையைக் கூட்டுகிறான். எங்கடை காசின்ர பெறுமதியை அவன்தான் நிர்ணயிக்கிறான்."

கொழும்பு வியாபாரி கூறினார், "வெள்ளைக்காரன் இருந்த போது இந்தப் பிரச்சினைகள் இருக்கவில்லை பாருங்கோ. அவன் காலத்தில் இருந்த மாதிரி ஆங்கிலம் தொடர்ந்து இருந்திருக்குமெண்டால் இதுகள் ஒன்றும் வந்திருக்காது."

"ஆங்கிலம் தான் இந்த ஒற்றுமையைக் கட்டிக் காக்க வேணுமெண்டால் அந்த ஒற்றுமை என்னத்துக்கு. நீங்கள் ஒரு தமிழன். ஏன் ஆங்கிலத்தைத் தூக்கிப் பிடிக்க வேணும். இதைத்தானே சிங்களவர் சொல்கினம், நாங்கள் சிங்களவர் எங்களுக்கு என்னத்துக்கு ஆங்கி லம் எண்டு. நீங்கள் எவ்வளவு தான் ஆங்கிலத்தைப் படியுங்கோ. படிச்சுப்போட்டுப் போய் வெள்ளைக்காரனோட கதையுங்கோ. அட நீ தமிழன் ஆங்கிலத்தைத் தெரிந்து வைத்திருக்கிறாய். சரி நானும் உன்ர மொழியைத் தெரிந்து வைத்திருக்க வேண்டுமென்று நினைக்கமாட்டான். கறுப்பா நீ ஆங்கிலத்தைப் படிச்சு நாகரீகம் அடைந்துவிட்டாய் என்றுதான் சொல்லுவான்" என்று நாகலிங்கம் கூற உடனே கொழும்பு வியாபாரி,

"அதுக்காக ஆங்கிலத்தை விட ஏலாது பாருங்கோ. ஆங்கிலம் தெரிஞ்சா உலகத்தில் எங்கு வேணுமெண்டாலும் போகலாம்..."

"அது சரி படிக்கலாம் பாருங்கோ. மற்றவனோட தொடர்பு கொள்கிறதுக்காக ஒரு மொழியைப் படிக்கிறது நல்லது. அதுக்காக ஆங்கிலத்தை மாத் திரம் தெரிஞ்சு வைச்சுக் கொண்டு ஆங்கிலத்திலேயே பேசிக்கொண்டு ஆங்கிலேயரைப் போல் நடந்து கொண்டு தங்களையே குழி வெட்டிப் புதைத்துக் கொண்டு இருக்கிறது பிழை பாருங்கோ. நாங்கள் ஆங்கிலம் ஆங்கிலம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறதாலதான் ஆங்கிலம் அப்படியே இருக்குது. இல்லை நாங்கள் தமிழ்தான் என்று சொன்னால் தமிழ் அப்படி வந்திருக்கும் பாருங்கோ. பிறகு எங்களோடை தொடர்புகொள்ள வாறவங்கள் தமிழைப் படிச்சுக் கொண்டு வருவாங்கள்.

"என்ன ஆங்கிலம் வேண்டாமென்றே சொல்லுறியள்"

'இல்லை ஆங்கிலத்தை வேண்டாமெண்டு சொல்லவில்லை. ஆனால் அதைப் படிக்கிறமாதிரிப் படிக்கவேணும். இது எங்கை பிழையெண்டால் பாருங்கோ, நாங்கள் ஆங்கிலத்தைப் படிக்கிற பொழுது ஆங்கிலேயரையும் ஆங்கில கலாசாரத்தையும், வெள்ளைக்காரனால் ஏலாதது ஒன்றுமில்லை என்றதையும் சேர்த்து விழுங்கிப் போடுகிறோம். இதுக்குப்பிறகு தமிழ் தமிழன் என்றால் வெட்கமாக இருக்குது. எங்கள் மீது நம்பிக்கை வைக்கிறதுக்கு ஏலாமல் இருக்குது.

இந்த ஜே.ஆர்.எல்லாத்தையும் தீர்த்து வைப்பார் என்று சொல்லுகிறது எங்களை நாங்களே ஏமாத்துகிறது பாருங்கோ. என்னத்தைத்தான் ஜே.ஆரிடம் கட்சி பணக்காரரின் கட்சி பாருங்கோ. இந்த நாட்டு அரசியல் ஒரு குப்பை அரசியலாகப் போயிட்டுது. எதையாவது சொல்லிப்பதவிக்கு வரவேண்டுமென்பது தான் ஆசை. தமிழர்களுடைய ஆதரவு தேவைப்பட்டுது. எல்லோரும் சமம்தான் என்றான்கள். பிரச்சினை தீர்த்து வைக்கிறம் என்றான்கள். இவன்கள் முதலாளிகளின்ரை ஆட்கள், சிங்கள மக்களின்ற பிரச்சினைகளை என்ன வேணுமென்டாலும் செய் என்று விட்டு விடுவார்கள். முதலாளிகள் யாராவது பொதுசனத்தின்ரை நன்மைக்காகச் செயற்படுகின்றவர்கள் இருக்கிறாங்களோ?

நாகலிங்கத்தின் கருத்துக்களை கொழும்பு வியாபாரி ஏற்றுக் கொண்டதாக இல்லையென்றாலும் கடந்தகால சம்பவங்களும் தன்னைப் போலல்லாமல் நாகலிங்கத்தார் எவ்வித பாதிப்புமில்லாமல் கப்பலில் வந்துகொண்டிருப்பதும் அவருக்குத் தன்மேலேயே ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தியது. அத்துடன் அங்கு இருந்துகொண்டு பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த இளைஞர்களின் போக்கும் நாகலிங்கத்தை ஆமோதிப்பதாகவே அமைந்திருந்தது. தயங்கிய வண்ணமே தொடங்கினார் கொழும்பு வியாபாரி,

"ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவைப் பற்றி உங்களுக்குத் தெரியாது போலிருக்கு. அவர் தான் சொல்லியிருக்கிறாரே, எல்லாம் தீர்த்து வைப்பன் எண்டு."

சும்மா விடுங்கோ புல்லையும் பூண்டையும் விதைச்சவன் நெல்லை எதிர்பார்க்க முடியுமோ? அதுகளைச் சொன்னால் கட்சி அரசியல் என்று சொல்லுவீங்கள். இப்படியான பொறுப்பற்ற அரசியல் வாதிகளால் தான் நாடு இப்படிப் போய் மீளமுடியாத நிலையைத் தாண்டிவிட்டுது. இந்தப் போர் வேணுமெண்டால், போர்: சமாதானம் வேணு மெண்டால், சமாதானம்: என்ற

அருளர்

*(தொடர்ச்சி 19 இல்......)*

# வில்பத்துவில் நடப்பது என்ன? றிசாத் – ஆனந்ததேரர் விவாதம்

கடந்த காலங்களில் வில்பத்து தொடர்பில் இடம்பெற்று வரும் வாதப் பிரதிவாதங்களின் பஹியங்களை ஆனந்த சாகர தேரரினால் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு அமைச்சர் ரிசாத் பதியுதீன் அவர்கள் பதிலளித்திருந்தார். இறுதியில் இவ்விரு தரப்பிலிருந்தும் பகிரங்க விவாதம் ஒன்றுக்கு தயார் என்ற சவால் விடுக்கப்பட்டது. இதனடிப்படையில் "ஹிரு" தொலைக்காட்சி அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி அதன் "சலகுண" எனும் நிகழ்ச்சியில் வர்த்தக, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ரிசாத் பதியுதீனும், ஜாதிக சங்க சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் பஹியங்களை ஆனந்த சாகர தேரரும் இந்த விவாதத்தில் கலந்து கொண்டனர். இந்த விவாதம் கடந்த திங்கட்கிழமை இரவு "ஹிரு" தொலைக்காட்சியில் நேரடி நிகழ்ச்சியாக ஒளிபரப்பானது.

இதன் போது இரு தரப்பினரும் முன்வைத்த கருத்துக்களின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.

**பஹியங்களை ஆனந்த சாகர தேரர்**–வில்பத்து என்பது தேசிய வனாந்தரம் மாத்திரமல்ல. வில்பத்து என்பது பல வனங்களின் கூட்டாகும். சுற்றுச் சூழல் அமைப்பு. கல்லாறு வனாந்தரம் மூன்று பிரிவுகளாக பிரிகிறது. வில்பத்து வடக்கு பாதுகாப்பு பிரதேசத்தில் இது ஆரம்பமாகின்றது. அடுத்து தப்போவ பாதுகாப்பு பிரதேசம் உள்ளது. வீரக்கொடிச் சோலை மற்றும் எளுவன்குளம் என்று வனாந்தரத்தின் கூட்டே இந்த வில்பத்து வனாந்தரம். இந்த வனாந்தரத்தில் சுமார் 2500 ஏக்கருக்கும் அதிகமான 3000 ஏக்கரளவில் மிகவும் மோசமான முறையில் அழிக்கப்பட்டுள்ளது. இதுதான் இந்தப் பிரச்சினைக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. எளுவன்குளத்தில் இருந்து முள்ளிக்குளம் வரையில் வீதி அமைக்கப்பட்டுள்ளது. உண்மையில் அங்கு ஒரு வீதி இருக்கவில்லை. எவராவது இங்கு வீதி இருந்தது என்று வாதிட்டால் அது தவறு. அங்கு சிறிய ஒற்றையடி வீதியே இருந்துள்ளது. இது பழைய மன்னார் வீதி என்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அது உண்மையல்ல. (வில்பத்து தேசிய வனத்தின் மத்தியாக வெட்டப்பட்டு அமைக்கப்பட்ட வீதி என்று தேரர் வரைபடம் ஒன்றை காட்சிப்படுத்துகிறார்) இவ்வாறுதான் தேசிய வனாந்தரத்தை வெட்டி பாதை அமைத்து புதிய குடியேற்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே தேசிய வனங்களை மிகவும் மோசமான முறையில் அழித்தே இந்த குடியேற்றம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசங்களில் முன்னைய காலங்களில் மக்கள் வாழ்ந்ததாகவோ, கிராமங்கள் இருந்ததாகவோ எந்த வித சான்றுகளும் இல்லை. மறிச்சிக்கட்டு மேற்புறத்தில் சிறிய கிராமம் ஒன்று இருந்துள்ளது. இது பற் றியே இங்கு பேசப்படுகின்றது. எனி னும் இது இந்த கல்லாறு வனத்துடன் சம்பந்தப்பட்டதல்ல. அது அதற்கு வெளியே இருக்கும் ஒன்று.


**ஹிரு தொலைக்காட்சி** – அமைச்சர் அவர்களே இங்கு கூறப்படும் பிரதான குற்றச்சாட்டுத்தான் தேசிய வனாந்தரத்தை அழித்தே இந்த குடியேற்றம் அமைக்கப்பட்டுள்ளது என்பது. இந்த குற்றச்சாட்டுக்கு பதில் வழங்கி உங்கள் கருத்துக்களை முன்வையுங்கள்.

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** –மதிப்பிற்குரிய தேரர் அவர்களே! உண்மையில் இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தை எமக்கு ஏற்படுத்தித் தந்த ஹிரு தொலைக்காட்சிக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு எனக்கு எதிராக மிகவும் கடுமையான மோசமான குற்றச்சாட்டுக்களை மதிப்புக்குரிய தேரர் அவர்கள் விகாரமஹாதேவி பூங்காவில் வைத்து முன்வைத்துள்ளார்கள். நான் அவைகள் பொய்யானவை எனத் தெரிவித்தேன். அவ்வாறு அவர்கள் தெரிவித்த விடயங்கள் உண்மையானவையாக இருப்பின் அவற்றை நிரூபிக்குமாறு கேட்டேன். இவ்வாறு நான் கேட்டது அவருடன் உள்ள கோபத்தினாலல்ல. நான் மக்களின் வாக்குகளினால் பாராளுமன்றத்திற்குத் தெரிவான ஒரு மக்கள் பிரதிநிதி. அது மட்டுமன்றி. நான் ஒரு இஸ்லாமியன். தினமும் ஐந்து வேளை தொழும் ஒருவன். இவ்வாறான என்னை நோக்கி மதிப்புக்குரிய தேரர் அவர்கள் முன்வைத்த மிகவும் பாரதூரமான மூன்று குற்றச்சாட்டுக்கள் என்னால் தாங்கிக் கொள்ள முடியாதவை. போதைப் பொருள் வியாபாரம் செய்வதாகத் தெரிவித்தார். இது எங்கள் சமயத்தில் மிகவும் மோசமான பாவச் செயல். அந்தப் பொருளை நான் இன்றுவரையில் கண்ணால் கண்டதுமில்லை. எனவே இவ்வாறான குற்றச்சாட்டினை முன்வைத்த நாள் முதல் இன்று வரையிலும் நான் மாத்திரமல்ல, என்குடும்பத்தார், என் தாய் தந்தை உட்பட நாம் அனைவரும் மிகவும் மன வேதனையில் இருக்கின்றோம். எனவேதான், இந்த விடயத்தை வந்து தெளிவுபடுத்துமாறு நான் அன்றைய தினமே மதிப்புக்குரிய தேரருக்கு அழைப்பு விடுத்தேன்.

அடுத்து வில்பத்து தேசிய வனாந்தரத்தை நான் அழித்துள்ளதாகத் தெரிவித்து அப்பாவி இளைஞர்களை வீதிக்குக் கொண்டு வந்து விகாரமஹாதேவி பூங்காவில் வைத்து சத்தம் போட்டு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அந்த அப்பாவி இளைஞர்கள் அங்கு வில்பத்து தேசிய வனாந்தரத்தை நான் நாசமாக்கிவிட்டதாக சத்தம் போட்டார்கள். எனது பெயரைப் பாவித்தே அவர்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தில் வைத்துத்தான், அவர் இந்த போதைப் பொருள் வர்த்தக கதையைத் தெரிவித்திருந்தார். அடுத்து இன்னொரு விடயத்தையும் அவர் தெரிவித்தார். அதாவது இங்கு முஸ்லிம் மக்களைக் குடியேற்றுவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஆகும். இது எமது சமூகத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்ட மிகவும் பாரதூரமான குற்றச்சாட்டாகும். எனவேதான் நான் மதிப்புக்குரிய தேரருக்கு "வாருங்கள் நாம் பேசுவோம்" என்று அழைப்பு விடுத்தேன்.

இது ஒரு விவாதமல்ல. பாடசாலை மாணவர்களைப் போல யார் ஜெயிப்பது யார் தோற்பது என்ற ஒரு விவாதத்திற்கு அல்ல நான் இங்கு வந்தது. நான் இதற்கு முன்னர் இவ்வாறு மதிப்புக்குரிய தேரர்களுடன் விவாதத்தில் கலந்து கொள்ளவில்லை. என்மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மிகவும் பாரதூரமானது என்பதால்தான் நான் மதிப்புக்குரிய தேரருக்கு அழைப்பு விடுத்தேன். எனது அழைப்பை ஏற்று வருகை தந்ததற்காக மதிப்புக்குரிய தேரருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிங்களம் எனது தாய் மொழியல்ல. நான் மன்னாரில் பிறந்து வளர்ந்தவன். கல்வி கற்கும் போது பாடசாலையில் சிங்களம் கற்கவில்லை. வைபவங்களில், பல்கலைக்கழகத்தில் சிங்கள நண்பர்களோடு கதைத்து கதைத்துத்தான் சிங்களத்தை பழகிக் கொண்டவன் நான். எனினும் இவ்விடத்தில் சிங்கள மொழியில்தான் பேச வேண்டும். எனவே முதலில் மதிப்பிற்குரிய தேரரிடமும், இதனைப் பார்த்துக்கொண்டிருக்கின்ற மக்களிடமும், எனது சிங்கள வார்த்தைப் பிரயோகங்களிலும், மதிப்பிற்குரிய தேரருடனான எனது நடவடிக்கைகளிலும் ஏதேனும் தவறுகள் இருப்பின் மன்னித்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.



இனி விடயத்திற்கு வருகின்றேன். இங்கு மதிப்புக்குரிய தேரர் வில்பத்து தொடர்பில் நீண்ட விளக்கத்தை வழங்கினார். வில்பத்து என்பது வனாந்தரம் மட்டுமல்ல, பல வனங்களின் கூட்டே வில்பத்து என்று அவர் கூறினார். எனினும் வில்பத்து வனாந்தரம் அழிக்கப்பட்டுள்ளது என்றே இவ்வளவு காலமும் மதிப்புக்குரிய தேரர் அவர்கள் கூறிக் கொண்டிருந்தார். தற்போது, வில்பத்து என்பது அதனைச் சூழவுள்ள பிரதேசங்கள் அடங்கிய கூட்டு என்று அவர் கூறுகின்றார். மதிப்புக்குரிய தேரர், பிரபலமான சிங்களப் பத்திரிகை ஒன்றில் வெளியான "வில்பத்து அழிப்புக்கு பௌத்த தேரர்களின் எதிர்ப்பு" என்ற தலைப்பிலான செய்தியில், வில்பத்துவில் இடம்பெறும் மோசமான அழிப்பை உடன் நிறுத்த வேண்டும் என்று இந்த மதிப்புக்குரிய தேரர் தெரிவித்ததாக செய்தி வெளியானது. அன்று விகாரமஹாதேவி பூங்காவுக்கு வந்த அப்பாவி இளைஞர்கள், வில்பத்து தேசிய வனாந்தரத்தை றிசாத் பதியுதீன் அழித்து நாசமாக்குகின்றார் என்றும், வில்பத்து தேசிய வனத்தில் முஸ்லிம் மக்களைக் குடியேற்றி தேசிய வனம் அழிக்கப்படுகின்றது என்றும் நினைத்துக்கொண்டு வந்திருந்தார்கள். இவ்வாறு கூறித்தான் இளைஞர்கள் சமூக வலைத்தளங்களின் ஊடாக அழைக்கப்பட்டுள்ளனர். சமூக வலைத்தளங்கள் ஊடாக இவ்வளவு பெரிய ஒரு கூட்டம் இதுவரை காலமும் கூட்டப்படவில்லை. இவ்வாறு வில்பத்து அழிக்கப்படுகின்றது, அங்கு முஸ்லிம் மக்கள் குடியேற்றப்படுகின்றார்கள், முஸ்லிம் அரசியல்வாதிகள் முன்னின்று இதனைச் செய்கிறார்கள், எமது வளங்கள் நாசமாக்கப்படுகின்றது என்ற மிக அப்பட்டமான பொய்களைக் கூறி முதற்தடவையாக இளைஞர்களை சமூக வலைத்தளத்தின் ஊடாக இந்த மதிப்புக்குரிய தேரர் அல்லது அவரது அமைப்பால் அழைக்க முடிந்திருக்கின்றது.

**ஹிரு தொலைக்காட்சி** – அமைச்சர் அவர்களே, இந்த விடயத்தின் ஆரம்பம் முதல் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் தரப்பினர் மிகத் தெளிவாகக் கூறிய விடயம் என்னவெனில் வில்பத்து தேசிய வனம் என்ற காரணத்திற்காக மாத்திரம் இது வரையறுக்கப்படவில்லை என்று.

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – இல்லை...இல்லை...

**ஹிரு தொலைக்காட்சி** – இது தொடர்பில் சுற்றாடலியலாளர்கள் கூறியிருந்த கருத்துக்களை இப்போது செவிமடுக்கலாம். அந்தக் காட்சியினைப் பார்ப்போம்.

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** –இல்லை... ஒவ்வொருவரினதும் காரணங்களைக் கேட்பதற்கல்ல நான் இங்கு வந்தது. எனக்கும் மதிப்புக்குரிய தேரர் அவர்களுக்கும் இடையில்தான் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறுகின்றது. வில்பத்து அழிக்கப்பட்டிருக்கின்றது என்று இந்த மதிப்புக்குரிய தேரர் கூறிய செய்திப் பத்திரிகையில் வெளியாகியிருக்கின்றது. இந்த தேரர்கள் மக்களுக்கு வழங்கிய காணிகளில் அரச மரக்கன்றுகளை நாட்டினார். அந்தக் காணிகளின் உறுதிகளை நான் இங்கு கொண்டு வந்திருக்கின்றேன். இந்தக் காணிகளினுள் பலாத்காரமாக அப்பாவி தேரர்களுடன் சென்று இந்த வேலையைச் செய்திருகின்றார்கள். அப்போது அவ்விடத்தில் பிரச்சினை தோன்றியது. பொலிஸார் வந்துதான் அதனை சமாதானப்படுத்தி வைத்தார்கள். எனவே அன்று மதிப்புக்குரிய தேரர் கூறி விட்டு இன்று வந்து வில்பத்து அல்ல என்றெல்லாம் கூறுகின்றார்.

(தொடர்ச்சி 14 இல்......)

எம்.எஸ். முஸப்பிர்

# சிங்கள முஸ்லிம் கலவரம்

சிங்கள மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பொன்னம்பலம் இராமநாதன் பெரும் பங்கு வகித்தார்.

பௌத்தமத போதனை மற்றும் மொழி அக்கறை ஆகியவற்றை பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் பல மேடைகளில் வற்புறுத்திப் பேசினார். அதையடுத்து 1910 ஆம் ஆண்டளவில் பௌத்த சிங்கள தேசிய உணர்வுகள் படிப்படியாக வளரத் தொடங்கின. சிங்கள பௌத்த உணர்வுகள் படிப்படியாக உருவாகத் தொடங்கிய போது, அந்த மொழி மதத்தைச் சேர்ந்த தலைவர்களும் உருவாகத் தொடங்கினார்கள்.

அவ்வாறு உருவாகிய பௌத்த சிங்களத் தலைவர்கள் முக்கியமானவர்களுள் அநாகரிக தர்மபால (1864–1933) அடங்குவர். இவருடைய இயற்பெயர் டொன் டேவிற். இவர் லிகிதராக பணிபுரிந்தார். இவர் மல்லிகா ஹேவா வித்தாரன மற்றும் டொன் கறோலிஸின் மகனாவார். இவரின் தந்தையாரான டொன் கறோலிஸ் புறக்கோட்டையில் ஒரு தளபாடக்கடை வைத்திருந்தார்.

அநாகாரிக தர்மபால மஞ்சள் அங்கியணிந்து, பிரமச்சாரியத்தை கடைப்பிடித்து, உலகியல் வாழ்க்கையின் சுகதுக்கங்களில் இருந்து விடுபட்டு வாழ்ந்து வந்தார். இவர் சிறந்த பேச்சாளராக இருந்தார். இவரது பேச்சை நிறையப் பேர் பின்பற்றினர். குறிப்பாக மத்தியதர வர்க்கத்தினரும், கிராமப் புறத்தவர்களும் பின்பற்றினர். அவர் பௌத்த மதத்தையும், சிங்கள தேசியத்தையும் காப்பாற்ற அயராது உழைத்தார்.

தர்மபால சிங்களவர்கள் பற்றி போதனை செய்யும் போது, சிங்களவர்கள் சிங்கத்தில் இருந்து தோன்றிய இனம். அவர்கள் உயர்ந்தவர்கள். ஆரிய வம்சத்திலிருந்து உதித்தவர்கள் என்பார். “உலகத்தில் எந்த ஓர் இனத்தினத்திற்கும் எங்களைப் போன்ற வரலாறு கிடையாது. இந்தப் பூமியிலே சிங்களவரைப் போல வெற்றிகரமான வரலாற்றைக் கொண்டவர்கள் வேறுயாரும் இல்லை,” என்று கூறினார்.

இந்தக் கூற்றுக்கள் எல்லாம் ஆதாரமற்ற புனைகதைகளைக் கொண்டவை. இந்த இனம் சம்பந்தப்பட்ட பேச்சுக்கள் எல்லாம் சிறுபான்மை இனத்திற்கு எதிரான பிரசாரமாகவே அமைந்தது. அக்காலத்தில் கம்பளைப் பௌத்த கோவிலின் பெரகர வருடாந்த ஊர்வலம் காசில்கில் வீதியில் உள்ள புதிய பள்ளிவாசலுக்கு 100 யாருக்கு முன்பு மேளதாளம் அடிக்க தடைசெய்யப்பட்டுள்ளதாக கண்டிய மாவட்ட அதிபர் அறிவித்தார்.

அதையடுத்து, கம்பளை புத்த கோவிலின் உரிமையாளர்கள் 1815 ஆம் ஆண்டு கண்டியர்களுக்கும் பிரித்தானியர்களுக்கும் இடையில் நடைபெற்ற ஒப்பந்தமான கண்டி சாசனத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு வழக்காட நீதிமன்றுக்குச் சென்றார்கள். அதையடுத்து கண்டி நீதிமன்றம் பௌத்த மதத்தினருக்குச் சார்பாக தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்புக்கு எதிராக அரசாங்கம் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. அதற்கு உச்சநீதிமன்றம் கண்டி மாவட்டத்தின் தீர்ப்பை இரத்துச் செய்தது.

அதையடுத்து உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து பௌத்த கோவில் உரிமையாளர்கள் பிரித்தானியாவிலுள்ள பிறிவிற் கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்தார்கள். அதே நேரத்தில் பௌத்தமத பிரசாரகாரர்கள் நாடு பூராகவும் சென்று, முஸ்லிம்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

அதையடுத்து புத்தரின் பிறந்த தினமான 28 மே 1915 ஆம் ஆண்டு வந்தது. அந்த பிறந்த தினத்தைக் கொண்டாட இரவு ஊர்வலமாகச் சென்றார்கள். இந்தக் கொண்டாட்டமும், ஊர்வலமும் காசில்கில் பள்ளிவாசல் அருகில் வந்ததும் குழப்பப்பட்டது. 25 ஆண்கள், வீடு உடைத்தார்கள், கலகம் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்கள்.




முஸ்லிம்களுக்கு எதிராக சிங்களவர்களின் தாக்குதல் மத்திய மாகாணத்தை அடுத்து மேல் மாகாணம் 6 யூன் 1915 ஆம் ஆண்டு வரை தீவிரமாகப் பரவிற்று. இதனால் முஸ்லிம்கள் நிறைய இழப்புக்களை சந்திக்க வேண்டி வந்தது.

அன்று கிடைத்த தகவல்களின்படி 86 பள்ளிவாசல்கள், 4075 கடைகள் உடைக்கப்பட்டன. 35 முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள். 198 பேர் காயமடைந்தார்கள். நான்கு பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். அத்துடன் கிறிஸ்தவர்களின் 17 தேவாலயங்களும் எரிக்கப்பட்டன.

அன்று தேசாதிபதியாக் இருந்த சேர்.றொபேட் சாள் மோர்ஸ் (1903–1916) மற்றும், காலணித்துவ செயலாளர் எட்வேட் ஸ்ரபஸ், இந்தக் கலவரத்தை பிரித்தானிய ஆட்சிக்கு எதிரானது என அறிவித்து, இராணுவச் சட்டத்தை பிரகடனப் படுத்தி முடிவுக்கு கொண்டுவர முயற்சித்தார்.

அந்தநேரம் பிரித்தானிய ஆட்சியாளர்கள் தேசத்துரோகிகள் எனக் கூறி பல சிங்களவர்களை கைது செய்தார்கள். அவர்களது வீடுகளையும் சோதனை செய்தார்கள்.

அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுள் டி.சி. சேனநாயக்க, அவரது சகோதரர்களான எப்.ஆர். சேனநாயக்க, டி.எஸ். சேனநாயக்க (இலங்கையின் முதல் பிரதமமந்திரி), டி.பி. ஜெயதிலக்க, டபிள்யூ.ஏ.டி. சில்வா, எப்.ஆர். டயஸ், பண்டாரநாயக்க, ஈ.ரீ.டி. சில்வா, டாக்டர் கஸியஸ் பெரைராயா, யோன். எம். செனிவரட்ண, எச். அமரசூரிய, டி.ஈ. வீரசூரியா, வண. ஜீ.டி. லணரோல், (எட்மனும் டாக்டரும் கேமாலித்த ரட்னேயும் அநாகரிக தர்மபாலாவின் சகோதரர்கள்), ஈ. ஏ. பி விஜயரட்ண, ‘ரி மெல், ஏ. எச். ஈ. மொளமொறே, ஏ. ஈ. குணசிங்க, பத்திரமுள்ள உணான்சே, எட்மன் டாக்டர், சி. எச். கேம வித்தாரரட்ண.

அநாகாரிக தர்மபால குழப்பங்கள் நடைபெற்றபொழுது கல்கத்தாவில் இருந்தார். அநாகரிக தர்மபாலவின் சகோதரரான எட்மன் கேவா வித்தா ரட்ண சிறைச்சாலையினுள்ளே காலமானார். அதேநேரம் பல சிங்களவர்கள் வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைத்து கொலை செய்யப்பட்டார்கள். இந்தக் கலவரத்தை அடக்க பஞ்சாப்பிலிருந்து இராணுவ வீரர்கள் அழைத்து வரப்பட்டனர். அந்த இராணுவத்தினரால் காணும் இடங்களில் எல்லாம் அப்பாவி சிங்களவர்கள் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியானார்கள்.

இந்தக் கலவரம் ஆரம்பமான காலத்திலேயே படித்த இலங்கையர்களை பிரதிநிதித்துவம் செய்த பொன்னம்பலம் இராமநாதன் உடல் நலம் குன்றியதால் அவரது கொடைக்கானலில் உள்ள ‘சிவன் அடி’ வாசஸ்தலத்தில் தங்கியிருந்தார். அந்தசமயம் அவரை பல சிங்களத் தலைவர்கள் நாட்டிலுள்ள பிரச்சினைகளை எடுத்துக் கூறி உடனடியாக நாட்டிற்குத் திரும்புமாறு வேண்டுகோள் விடுத்துக் கொண்டே இருந்தார்கள்.

அதையடுத்து இராமநாதன் உடனடியாக நாட்டிற்கு திரும்பினார். நாடு வந்த இராமநாதன் தேசாதிபதியைச் சந்திக்க நேரம் கேட்டார். ஆரம்பத்தில் சந்திப்புக்கான அந்தக் கோரிக்கையை நிராகரித்த போதும், இறுதியில் நேரம் ஒதுக்கப்பட்டது. இராமநாதன் காலணித்துவ செயலாளரான ஸ்ரப்ஸ் சையும் சந்தித்து கலவரம் நடைபெற்றதற்கான காரணங்களை தேசாதிபதிக்கு எடுத்துக் கூறினார்.

அதையடுத்த சட்டநிர்வாக சபையில் மொத்தமாக ஆறு பேச்சுக்களை வழங்கினார். அந்தப் பேச்சுக்களில், அரசாங்கம் கலவரம் அடக்க எடுத்த நடவடிக்கைகளை வன்மையாக கண்டித்தார். அத்துடன் உத்தியோகத்தர்களின் சர்வாதிகாரப் போக்கையும் சாடினார்.

இராமநாதன் சிறையில் அடைக் கப்பட்ட சிங்களத் தலைவர்களை சிறைக்குச் சென்று சந்தித்து, அவர்களிடம் நடந்த சம்பவம் தொடர்பாக தனித்தனியாக சத்தியக் கடதாசியையும் பெற்றுக் கொண்டார். அரசாங்கம் கலவரத்தை அடக்க கையாண்ட முறையே இந்த பாரதூரமான சம்பவம் நடைபெறக் காரணம் என அரசாங்கத்தையே குற்றம் சுமத்தினார்.

அப்பொழுது 21 ஒக்ரோபர் 1915 ஆம் ஆண்டு கல்கத்தாவில் வசித்து வந்த அநாகரிக தர்மபால பொன்னம்பலம் இராமநாதனுக்கு கடிதம் ஒன்று எழுதினார். அந்தக் கடிதத்தில் “ நாடாளுமன்றத்தில் நீங்கள் ஆற்றிய வரலாற்றுப் புகழ் மிக்க சொற்பொழிவுகளுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். இலங்கையிலிருந்து நீங்கள் எப்பொழுது வெளியேற்றப்படுகின்றீர்களோ, அன்றிலிருந்து ஏழைச் சிங்களவர்களுக்கு பாதுகாப்பளிக்க யாரும் இருக்கமாட்டார்கள். அந்தச் சிங்களவர்கள் வழிகாட்ட யாரும் இன்றி ஒடுங்கிப் போவார்கள். இன்றைய நிலையில் இலங்கையை இந்தியாவுடன் இணைக்க வேண்டும் என ஆர்ப்பாட்டம் செய்யவேண்டும். இந்தியாவின் பாதுகாப்பு இல்லாவிட்டால் இலங்கை வீழ்ச்சியுற்று விடும். இலங்கையை இந்தியாவின் கீழ் கொண்டுவந்து, மெட்ராஸ் அல்லது வங்காள மாவட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். அநீதியால் பாதிக்கப்படும் ஏழைச் சிங்களவர்களைப் பாதுகாக்க நீங்கள் முன்வரவேண்டும்,” என்று எழுதியிருந்தார்.


நாட்டிலே சிங்களவர்களுடைய நிலைமை மோசமடைந்ததை அடுத்து, அவர் பிரித்தானியா சென்று அங்குள்ள உயர் அதிகாரிகளுடன் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டும் என எண்ணினார். ஏற்கனவே அவரது உடல்நிலை பாதிப்படைந்திருப்பதால் அவரைப் பிரித்தானியப் பயணத்தைக் கைவிடுமாறு, அவரது பாரியார் மிகவும் வினயத்துடன் கேட்டுக் கொண்டார்.

ஆனாலும் சிங்களத் தலைவர்களை விடுவிக்க 30 ஒக்ரோபர் 1915 ஆம் ஆண்டு எம்.எம்.போல் லொக்காற் என்ற கப்பலில் பயணமானார். அக்காலத்தில் முதலாவது உலகயுத்தம் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கடற்பரப்புக்களில் ஜேர்மனியர்கள் வைத்திருந்த கண்ணிவெடிகளை எல்லாம் கடந்து இராமநாதன் சென்ற கப்பல் பிரித்தானியாவை அடைந்தது.

பிரித்தானியாவைச் சென்றடைந்து, “இலங்கைக் கலவரமும் 1915 ஆம் ஆண்டுக்கான இராணுவச் சட்டமும்,” என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை பிரித்தானிய மக்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் வெளியிட்டார். அக்காலத்தில் காலணியை நிர்வகிக்கும் செயலாளரான மோர்லோவை இராமநாதன் பலமுறை சந்தித்தார். அதுமட்டுமன்றி ஏனைய அமைச்சர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து, இலங்கை நிரவரம் பற்றி எடுத்துக் கூறினார்.

உடனடியாக இராணுவச் சட்டத்தை இரத்துச் செய்யும்படி கோரிக்கை விடுத்தார். சிங்கள மக்களுக்கு எதிராகப் பஞ்சாப்பிப் படையினரும், பொலிஸ்மா அதிபரான சேர்.ஹேர்பேட் டௌபிக்கின் தலை

(தொடர்ச்சி 23 இல்)



# நயப்புடை

# ஆட்டோகிராப் 2... நயன்?

தேசிய விருது பெற்ற படங்களை இய...
சேரன் கடந்த 2000ஆம் ஆண்டுக...
படங்களை இயக்கி வந்தார். அவரு...
வெளிவந்த பாரதி கண்ணம்மா, ...
வெற்றிக்கொடிகட்டு போன்ற பட...
அவலங்களை ஆணித்தரமாக எ...
அதேபோல் சேரன் எடுத்த தரமான ...
"ஆட்டோகிராப்". திருமணத்திற்கு ...
இளைஞன் தன்னுடைய முன்னாள் க...
தனது திருமண அழைப்பிதழை கொடு...
ஏற்படும் அனுபவங்களை நெஞ்சை ...
இயக்கியிருப்பார்.

ரசிகர்களின் பெரும் ஆதரவைப் ...
திரைப்படத்தின் இரண்டாம் பாகத்...
முடிவு செய்திருப்பதாகவும், இந்தப் ...
கதாபாத்திரத்தில் லேடி சுப்பர் ஸ்...
நடிக்கவுள்ளதாகவும் செய்திகள் ...
ஆட்டோகிராப் போன்ற படத்தில் ந...
திறமையான நடிகை நடித்தால் அந்த...
வரவேற்பு கிடைக்கும் என்ற எதிர்...



# சமூக சேவை நாயகி

சமந்தா தமிழில் விஜயுடன் "தெறி", சூர்யாவுடன் "24", தெலுங்கில் மகேஷ்பாபுவுடன் "பிரமோற்சவம்" என்று தமிழ் தெலுங்கில் "பிசி" யாக நடித்து வருகிறார். அதே நேரத்தில் சமூக சேவையிலும் ஆர்வமுடன் இருக்கிறார். இதுபற்றி கூறிய சமந்தா....

நான் முழு நேரமும் சமூக சேவை செய்ய விரும்புகிறேன். ஏழை மக்களுக்கு உதவ ஆசைப்படுகிறேன். அவர்களுக்கு உதவ எனக்கு வாய்ப்பு கிடைத்திருப்பது கடவுள் எனக்குத் தந்த கொடை. ஒருமுறை நான் முழுநேர சமூக சேவை செய்வதற்காக சினிமாவை விட்டு போய் விட நினைத்தேன். ஆனால் சினிமாவால்தான் பணமும், பிறருக்கு உதவ வாய்ப்பும், திறமையும் எனக்கு கிடைக்கிறது. நான் எனது திரைப்பட தொழிலை நேசிக்கிறேன். சினிமா மீது எனக்கு இருக்கும் அன்புக்கும் முடிவு இல்லை. இது எனது வாழ்க்கை.

இதன் மூலம் மகிழ்ச்சியும் நிறைவும் பெறுகிறேன். திரைப்பட தொழில் எவ்வளவு முக்கியமோ, அதுபோல் சமூக சேவை செய்வதும், மக்களுக்கு உதவுவதும் முக்கியம். ஒரே நேரத்தில் இரண்டு வேலைகளையும் செய்து வருகிறேன். திரைப்படத்தில் நடிப்பதன் மூலம் எனக்கு எல்லா வசதிகளும் கிடைக்கிறது. எனவே சினி-மாவில் இருந்தாலும் சேவை செய்து சமூக மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வது குறித்து சிந்தித்துக் கொண்டே இருக்கிறேன்.



# தர்க...


# வில்லனாகும் விமல்

கோலிவுட்டின் இளம் நாயகர்களில் ஒருவரான விமல் நடிப்பில் முடிவடைந்துள்ள "அஞ்சல" விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் தற்போது அவர் மாப்பிள்ள சிங்கம்" மற்றும் "மன்னார் வகையறா" ஆகிய படங்களில் நடித்து வருகிறார்

இந்நிலையில் சமீபத்தில் ஒரு பேட்டியில் கூறிய விமல், "கிராமத்துக் கதைகளில் நான் நடித்த படங்கள் தொடர்ந்து வெற்றி பெற்று வருவதால் தொடர்ந்து கிராமத்து கதையம்சம் கொண்ட படங்களில் நடிக்க ஆர்வம் காட்டி வருகிறேன். இந்நிலையில் ஒரு படத்தில் முழு வில்லனாக நடிக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு உள்ளது. இதுவரை நான் முயற்சிக்காத வில்லன் வேடத்தை நல்ல ஸ்கிரிப்ட் கிடைத்தால் நடிப்பேன்" என்று கூறியுள்ளார்.

ஏற்கனவே அரவிந்தசாமி, அருண்விஜய் ஆகிய ஹீரோக்கள் வில்லனாகியுள்ள நிலையில் விரைவில் விமலையும் வில்லனாக ரசிகர்கள் பார்க்கலாம்.

## 2இல்



ள இயக்கிய இயக்குனர்
ண்டுகளில் தரமான பல
அவருடைய இயக்கத்தில்
ம்மா, பொற்காலம்,
ற படங்கள் சமுதாய
ாக எடுத்துரைத்தன.
மான படங்களில் ஒன்று
திற்கு தயாராகும் ஒரு
ாள் காதலிகளை சந்தித்து
கொடுக்கச் செல்லும்போது
சை நெகிழும் வண்ணம்
ப்பார்.
வைப் பெற்ற இந்தப்
ாகத்தை இயக்க சேரன்
இந்தப் படத்தின் முக்கிய
பர் ஸ்டார் நயன்தாரா
கள் வெளிவந்துள்ளன.
தில் நயன்தாரா போன்ற
அந்தப் படத்திற்கு பெரும்
எதிர்பார்ப்பும் உள்ளது.








# பக்குவமடைந்த அனுஷ்கா

தமிழ் மற்றும் தெலுங்கு சினிமா உலகில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் அனுஷ்கா. 30 வயதைக் கடந்தும் பல முன்னணி நடிகர்களுடன் ஜோடி போட்டு நடித்து வருகிறார். இந்நிலையில், அவர் அளித்த பேட்டி வருமாறு, என்னை நாகார்ஜுனா தான் சினிமா உலகுக்கு அழைத்து வந்தார். சினிமா வாசனை இல்லாத குடும்பத்தில் இருந்து நான் சினிமாவுக்கு வந்ததால் முதலில் நடிப்பு என்பது கஷ்டமாகத் தெரிந்தது. சினிமாவில் உள்ள நெளிவு சுழிவுகளை நாகார்ஜுனா சொல்லிக் கொடுத்து புரிய வைத்தார்.

இப்போது சினிமாவில் எனக்கு பக்குவம் வந்துவிட்டது.

ஆக்ஷன் ஹீரோயினாக நடிப்பது மிகவும் கஷ்டம். சண்டைக் காட்சியின்போது எகிறிக் குதிப்பது, ஓடுவது போன்றவற்றை எளிதாக செய்துவிடலாம். அதன் பிறகு கை, கால்கள் வலிக்கும்போதுதான் அதில் உள்ள சிரமம் தெரியவரும். ஆக்ஷன் ஹீரோக்கள் எப்படி கஷ்டப்பட்டு நடிக்கிறார்கள் என்பதை இப்போது புரிந்துள்ளேன்.

எனக்கு அரசியல் தெரியாது. நான் அரசியலை விரும்பவில்லை. அதில் எனக்கு ஆர்வமும் இல்லை. வேறு நல்ல விஷயங்களில் ஈடுபடவே விரும்புகிறேன்.

எனது தோழிகள் அனைவருக்கும் திருமணமாகிவிட்டது. அவர்கள் கணவர், குழந்தை, குடும்பம் என்று வசிக்கிறார்கள். என் தோழிகள் என்னைப் பார்க்கும் போதெல்லாம் நீ இப்போதும் சின்னப் பெண்ணாகவே இருக்கிறாய் என்று சொல்வார்கள்.

யோகா செய்வதால்தான் அழகாக இருக்க முடிகிறது.

எனக்கென்று எதிர்கால திட்டம் எதுவும் இல்லை. வாழ்க்கையில் அவ்வப்போது என்ன நடக்கிறதோ அதற்கு ஏற்றாற்-போல் என்னை மாற்றிக் கொள்கிறேன். பக்குவப்படுத்திக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

# வில்பத்துவில் ...

நான் சவால் விடுத்த விடயமும் அது தான். வில்பத்து வனாந்தரத்தினுள் ஒரு அங்குல காணியிலேனும் நான் எமது முஸ்லிம் மக்களைக் குடியேற்றியிருப்பதாக நிரூபித்தால் நான் இந்தப் பதவியை இராஜினாமாச் செய்து அரசியலிலிருந்து ஒதுங்குவதாகவும் சவால் விட்டிருக்கின்றேன். அது மாத்திரமல்ல. வில்பத்து வனாந்தரத்தினுள் ஒரு அங்குல நிலமேனும் சுத்தப் படுத்தப்பட்டிருந்தால் அதனை நான்நிரூபிக்குமாறு சவால் விட்டிருந்தேன். அது பொய் என்றும், அது தவறு என்றும் இவ்விடத்திலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது. வில்பத்து நாசமாக்கப்பட்டுள்ளது, வில்பத்து காடு அழிக்கப்பட்டுள்ளது என்று தான் இந்நாட்டு மக்கள் இன்று வரையும் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

**ஹிரு தொலைக்காட்சி**–அமைச்சர் அவர்களே எந்த ஒரு சரணாலயமுமோ அல்லது வனப் பாதுகாப்பு வலயமோ ஏற்படுத்தப்படும் போது அதனைச் சூழவுள்ள சுற்றாடல் கட்டமைப்பு அந்தவனப் பாதுகாப்பு ஊட்டச்சத்துப் பிரதேசமாகப் பாவிக்கப்படுவதை பொறுப்புள்ள அமைச்சர் என்ற வகையில் நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா இல்லையா?

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – நிச்சயமாக... நிச்சயமாக நான் கூறுகின்றேன். வில்பத்து மாத்திர மல்ல இலங்கையிலுள்ள எல்லா வனாந்தரங்களும் வனஜீவராசி இடங்களும் அதனைச் சூழவுள்ள இடங்களும் கண்டிப்பாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கொள்கையிலேயே நானும் இருக்கின்றேன்.

ஹிரு **தொலைக்காட்சி**–நல்லது.

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – அதற்கு நான் எதிரானவனல்ல. இவை எமது சொத்து. இவை எமது வளங்கள். இது எமது தாய் நாடு. எனவே இவற்றை நாசப்படுத்துவதை அனுமதிக்க முடியாது. மதிப்புக்குரிய தேரர் அவர்களே! நீங்கள் எத்தனை தடவை அந்தப் பிரதேசங்களுக்குச் சென்றிருக்கின்றீர்கள் என்று கூற முடியுமா?

**பாஹியங்களை ஆனந்த சாகர தேரர்** –நான் எம். ஏ செய்தது களனி பல்கலைக் கழகத்தில்.

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்**–இல்லை.. நான் கேட்டதற்கு பதில்...?

**பாஹியங்களை ஆனந்த சாகர தேரர்** – பொறுங்கள். நான் பட்டப் படிப்பிற்கான செயற்திட்ட அறிக்கை தயாரிப்பதற்குத் தெரிவு செய்து வில்பத்துவைச் சூழவுள்ள தொல் பொருளியல் பிரதேசங்களையே. அந்தக் காலங்களில் சென்றிருக்கின்றேன். வில்பத்துவுக்கு கடந்த சனிக்கிழமையும் சென்று படங்கள் எடுத்துக் கொண்டு வந்தேன். இதற்கு முன்னர் ஊடகவியலாளர்களை அழைத்துக் கொண்டு சென்றிருக்கின்றேன். தனியாகவும் சென்றிருக்கின்றேன். அமைச்சர் ரிசாத் பதியுதீனின் குழுவினருடன் சென்றிருக்கின்றேன். எனவே இவ்வாறு பல தடவைகள் வில்பத்துவுக்குச் சென்றிருக்கின்றேன். என்னிடம் கேட்ட கேள்வி இது தான் போல.

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – நான் ஏன் இதனைக் கேட்டேன் என்றால் அது எனது சொந்தப் பிரதேசம். அங்கு ஏராளமான அர சியல்வாதிகள் உள்ளார்கள். எனினும் என்மீது மாத்திரமே இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருக்கின்றது. நானும் அந்த மக்களுடன் சேர்ந்து அகதியாக வந்தவன். இந்த அப்பாவி ஏழை மக்கள், இந நாட்டுக்காக அர்ப்பணிப்புச் செய்த மக்கள், தங்களது சொந்த ஊருக்குச் செல்லும் போது இவ்வாறான பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, அந்த அப்பாவி மக்களின் மீள்குடியேற்றத்தை தடுப்பதற்கு செய்யப்படும் ஒரு செயற்பாடே இது.

**ஹிரு தொலைக்காட்சி** – அமைச்சர் அவர்களே.....!

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – அன்று பிரபாகரன் முஸ்லிம் மக்களை விரட்டியதை விட பார தூரமான வகையில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து இந்த மக்களின் மீள்குடியேற்றத்தை தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு சதிதான் இவைகள்.

**ஹிரு தொலைக்காட்சி** – நல்லது. அமைச்சர் அவர்களே நாம் அந்த இடத்திற்குச் செல்வோம்.....

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – ஒரு போதும் செல்லவும் முடியாது, நிரூபிக்கவும் முடியாது வில்பத்து வனத்தினுள் முஸ்லிம் மக்கள் ஒரு அங்குலத்தையேனும் வெட்டவும் இல்லை, நாசப்படுத்தவுமில்லை அங்கு குடியேறவுமில்லை என்பது இங்கு தெளிவாகியிருக்கின்றது. அடுத்து, மதிப்புக்குரிய தேரர் அவர்கள் குறிப்பிட்டார்கள் வில்பத்துவை அண்டியுள்ள பிரதேசங்கள் வில்பத்து இல்லை என்று. (விகாரமஹாதேவி பூங்காவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பாஹியங்களை ஆனந்த சாகர தேரர் பேசிய அமைச்சர் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுகின்றார் என்ற ஒலி வடிவம் இந்நேரத்தில் அமைச்சரினால் போட்டுக் காட்டப்படுகின்றது)

**ஹிரு தொலைக்காட்சி** – நல்லது. அதனை நாம் பின்னர் பார்ப்போம். சரி. அமைச்சர் அவர்களே மீள்குடியேற்றத்தின் காரணத்தினால்தானே இந்த எல்லா பிரச்சினையும் தோன்றியது என நீங்கள் குறிப்பிடுகின்றீர்கள்......

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – எனக்கு



கொஞ்சம் நேரம் வழங்க வேண்டும். என் மீதே குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. வில்பத்து தொடர்பில் இவ்விடத்தில் படங்கள் காட்டி விளக்கப்பட்டதுதானே. வில்பத்துவில் சிறிய கிராமம் மறிச்சிக்கட்டியில் இருந்தது. மன்னார் வீதி பிழையானது என்றெல்லாம் மதிப்புக்குரிய தேரர் அவர்கள் குறிப்பிட்டார்கள்தானே? இவற்றிற்கு பதிலளிப்பதற்கு எனக்கு சற்று நேரம் வழங்குங்கள்.

**ஹிரு தொலைக்காட்சி** – சரி.

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – இங்கு என்னால் தெளிவு படுத்த முடியும். இதற்குத் தான் நீங்கள் அங்கு எத்தனை தடவைகள் சென்றிருக்கின்றீர்கள் என்று கேட்டேன். (இவ்விடத்தில் வில்பத்து தொடர்பான வரைபடம் ஒன்றை அமைச்சர் ரிசாத் பதியுதீன் காட்டி இதுதான் வில்பத்து என்று கூறுகின்றார். வில்பத்து என்று அமைச்சர் சுட்டிக் காட்டும் பகுதி பச்சை நிறத்தில் வர்ணம் தீட்டப்பட்டிருக்கின்றது) இங்கு நிறம் தீட்டப்பட்டுள்ள இந்த வில்பத்து பிரதேசத்தில் எமது சமூகத்தினர் எவரும் ஒரு அங்குலத்தையேனும் எடுக்கவில்லை. வில்பத்து வடக்கு என்பது மேற்பகுதி. இங்குதான் தற்போது குடியேற்றம் இடம்பெற்று வருகின்றது.

**ஹிரு தொலைக்காட்சி** – இது எங்கு எடுத்த வரைபடம்?

**அமைச்சர் ரிசாத் பதியுதீன்** – நிள அளவைத் திணைக்களத்தில் எடுத்தது.

**ஹிரு தொலைக்காட்சி** – நல்லது.

அமைச்சர் ரிசாத் பதியுதீன் – மதிப்புக்குரிய தேரர் அவர்கள் இந்த வீதி பற்றிக் குறிப்பிட் டார்கள். இந்த வீதி பற்றி நான் விரிவாகப் பேச வரவில்லை. இந்தப் பாதை தற்போதும் பாவிக்கப்படுகின்றது. அந்தப் பிரதேச மக்கள் வெளியேற்றப்பட்ட போதும் அந்தப் பாதையி னாலேயே மன்னார் புத்தளம் வீதியினாலேயே புத்தளத்திற்கு வந்தார்கள். எனினும் தற்ச யம் அந்த வீதியை மூட வேண்டும் என வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது. அந்த வழக்கு நீதிமன்றத்தில் போய்க் கொண்டிருக்கின்றது. இவ்வீதி தொடர்பில் நீதிமன்றம் எடுக்கும் தீர்மானத்திற்கு நானும் கட்டுப்படுகின்றேன். எனவே இந்த வீதி தொடர்பில் நான் அ[illegible]பேசவிரும்பவில்லை.

அடுத்து அங்கு ஒரு கிராமம்தான் இருந்தது என்று கூறப்பட்டதுதானே. அது அப்பட்டமான பொய்யாகும்.

ஹிரு தொலைக்காட்சி – அமைச்சர் அவர்களே! எங்களுக்கு சிறிய தெளிவு வேண்டும். இந்த வீதி வில்பத்து ஊடாகத் தானே போடப்பட்டது?

அமைச்சர் ரிசாத் பதியுதீன் – அதனைப் போட்டவர்களிடம்தான் கேட்க வேண்டும். அந்த வீதியானது B4 C3 என்று வர்த்தமாணியில் பிரசுரிக்கப்பட்ட வீதியாகும்.

ஹிரு தொலைக்காட்சி – வில்பத்து தேசிய வனாந்தரத்திற்கும், கல்லாறு வனத்தையும் இரண்டாகப் பிரித்தா இந்த வீதி போடப்பட்டுள்ளது?

அமைச்சர் ரிசாத் பதியுதீன் – மதிப்பிற்குரிய தேரர் அவர்கள் கல்லாறு தொடர்பில்.....

ஹிரு தொலைக்காட்சி – இல்லை நாம் தெளிவு பெற்றுக் கொள்ளவே கேட்கின்றோம்.

அமைச்சர் ரிசாத் பதியுதீன் – ஆம் அந்த வீதிதான். கல்லாறு சிலாவத்துறையிலிருந்து கல்லாறு, கொண்டச்சி, அந்த வீதி செல்கின்றது. மறிச்சிக்கட்டி, பாலைக்குழி, கரடிக்குழி, முள்ளிக் குளம் என்று கிராமங்களுக்கு மத்தியில் செல்லும் வீதி அது. அது எழுவன்குளத்திற்குச் செல்கின்றது.

ஹிரு தொலைக்காட்சி – அந்த வனாந்தரத்தை இரண்டாக்கிக் கொண்டுதான் இந்த வீதி செல்கிறது?

அமைச்சர் ரிசாத் பதியுதீன் – ஆம். நாம் வெளியேற்றப்பட்ட போது என் வயது 18. அந்தக் காலத்தில் அப்படி இருந்ததா இப்படி இருந்ததா என்று தெரியாது. நாங்கள் வரும் போது அச்சத்தில் ஓடிக் கொண்டுதானே வந்தோம். எமது பொருட்களை உறைகளில் நாம் சைக்கிள்களில், மோட்டார் சைக்கிள்களில், ட்ரக்டர்களில் அந்த வீதியால்தான் வந்தோம். விடுதலைப் புலிகள் வேறு வாகனங்களில் செல்வதற்கு எம்மை அனுமதிக்கவில்லை. இருந்தவர்கள் இந்த வீதியில் வந்தார்கள். மன்னார் பாலம் உடைக்கப்பட்டது. மீதமானவர்கள் கடல் வழியாக கல்பிட்டிக்கு வந்தார்கள்.

இங்கு மதிப்புக்குரிய தேரர் இந்த வில்லுகள் பற்றி குறிப்பிட்டார்கள். வேப்பம் வில்லு, மாவில்லு பற்றியெல்லாம் குறிப்பிட்டார்தானே. (இவ்விடத்தில் வில்பத்து வடக்கு தொடர்பான வரைபடம் ஒன்றை அமைச்சர் காட்டுகின்றார்) இது வந்து முசலி தெற்கு பகுதி. இது வில்பத்துவின் வடக்கு பகுதி. வில்பத்து என்பது கீழே இருக்கின்றது. இதற்கிடையில் மோதரகம்மாரு என்று ஒரு ஆறு இருக்கின்றது. முசலி தெற்கு பகுதிக்கும் வில்பத்துவுக்கும் இடையில் பபர் சோன் என்று ஒன்றரை கிலோ மீற்றர் இடைவெளியிருக்கின்றது. இதனுள் எதுவுமில்லை. அதற்கு பக்கத்தில் யாயடி என்ற குளம் ஒன்று உள்ளது. இது டீ. எஸ். சேனநாயக்காவின் காலத்தில் அங்கிருந்த அபூசாலிபு என்ற ஊர்த்தலைவரிடம் ஊர் மக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்த குளம் அமைக்கப்பட்டுள்ளது. அதுமாத்திரமல்ல. அங்கு பாலைக்குளி என்ற ஒரு பாரம்பரிய முஸ்லிம் கிராமம் ஒன்றும் உள்ளது. முள்ளிக்குளம் என்று பாரம்பரிய கத்தோலிக்க கிராமம் ஒன்றும் உள்ளது. மறிச்சிக்கட்டி என்ற முஸ்லிம் கிராமம் உள்ளது. கரடிக்குளி என்ற முஸ்லிம் பாரம்பரிய கிராமம் உள்ளது. இந்த கிராம மக்கள் நேற்று முன்தினம் குடியேற்றப்பட்டவர்கள் அல்ல. பல நூறு வருடங்களாக அங்கு வசித்து வந்திருக்கின்றார்கள். இவை அனைத்தும் பழைய கிராமங்கள். 1990ம் ஆண்டில் நாங்கள் இடம்பெயர்ந்த போது விடுதலைப் புலிகள் எமக்கு இரண்டு மணி நேர அவகாசமே தந்தார்கள். அவ்வாறு வரும் போது எத்தனை குடும்பங்கள் இருந்தர்கள் என்ற விபரங்கள் என்னிடம் உள்ளது. அப்போதைய வாக்காளர் இடாப்புக்களையும் இங்கு நான் கொண்டு வந்திருக்கின்றேன். எனவே இங்கு ஒரு கிராமம் மாத்திரமே இருந்தது என்று கூறுவது அப்பட்டமான பொய்க் குற்றச்சாட்டாகும். அவ்வாறு ஒவ்வொருவரும் கூறும் கதைகளை வைத்துக் கொண்டு முழு நாட்டு மக்களுக்கும் இருந்த கிராமங்களை இருக்காத கிராமங்கள் என்றும், வேறு பிரதேசங்களிலிருந்து கொண்டு வந்து நாங்கள் குடியேற்றுகின்றோம் என்று கூறுவது பெரிய தவறு. இங்கு மிருக பண்ணைகள் இருந்தது. எமது மக்கள் அங்கு வயல் வேளான்மை செய்திருக்கின்றார்கள், அதேபோன்று சேனைப் பயிர்ச்செய்கை செய்திருக்கின்றார்கள். இவை அனைத்தும் இந்தப் பிரதேசங்களில்தான் செய்யப்பட்டிருக்கின்றது. கல்லாறுவிலிருந்து மோதர கம்மாறு வரையில் முஸ்லிம் சமூகமும் அதேபோல ஒரு கிராமத்தில் கத்தோலிக்க மக்களும் அதேபோல கொண்டச்சி என்ற கிராமத்தில் என்று அனைத்திலும் மக்கள் வாழ்ந்து விவசாயச் செய்கையிலும் ஈடுபட்டிருக்கின்றார்கள். 2009ஆம் ஆண்டில் இந்த மக்கள் அகதி முகாம்களில் இருந்த நேரம் இந்த மக்களுக்கும் எமக்கும் தெரியாமல் இந்தக் காணிகள் வர்த்தமாணியில் வனப்பாதுகாப்பு பிரதேசத்திற்குரிய காணிகள் என்று பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

ஹிரு தொலைக்காட்சி – இந்தப் பகுதிகளில் ஏதேனும் ஒரு பிரிவினர் குடியேற்றப்பட்டிருக்கின்றார்கள் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்கள்தானே?

அமைச்சர் ரிசாத் பதியுதீன் – அந்தப் பிரதேசங்களிலிருந்து விடுதலைப் புலிகளால் விரட்டப்பட்ட சமூகம் அல்லது அவர்களது பிள்ளைகள்தான் அங்கு குடியமர்த்தப்பட்டிருக்கின்றார்கள்.

(தொடரும்)

# மரபுவழிப் புலமையாளனின் சிறுகதை தொகுப்பு "புதைமணல்"

'புதைமணல்' என்ற பெயரிலான சிறுகதைத் தொகுப்பு நூல் ஒன்று வெளிவந்துள்ளது. ம.பா.மகாலிங்கசிவம் அவர்களின் ஆக்கமாகி தெல்லிப்பழை கலை இலக்கியகளம் இந்நூலை வெளியீடு செய்துள்ளது. மகாலிங்கசிவம் அவர்கள் தமிழ் புலமைப்பாரம்பரியத்தில் பிறந்த நான்காவது தலைமுறையைச் சேர்ந்தவர். தமிழில் சிறப்புப்பட்டம் பெற்றவர். முதுமாணிப் பட்டமும் பெற்றுள்ளார். மதுரை பல்கலைக்கழகத்தில் இதழியல் முதுமாணி பட்டப் படிப்பில் ஈடுபட்டு வருகின்றார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளராகி பணியாற்றுகின்றார்.

புதைமணல் சிறுகதைத் தொகுதியில் பதின்மூன்று சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. பாடசாலையை மையப்படுத்தி எழுதப்பட்டவை. பல்கலைக்கழக வாழ்வை அடிப்படையாகக் கொண்டவை. போர்க்கால சூழலை அடிப்படையாக கொண்டவை. இயற்கை அனர்த்தத்தை அடிப்படையாகக் கொண்டவை. திருமண வாழ்வை அடிப்படையாகக் கொண்டவை. என்கின்ற வகைகளில் இச்சிறுகதைகளை பகுத்து நோக்க முடிகின்றது.

பல்வேறு வகைப்பட்ட அனுபவங்களைப் பெற்றுத் தருகின்ற சமுக நிறுவனமான பாடசாலையை மையப்படுத்தி எழுதப்பட்ட ஐந்து சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.


மாணவர்களுக்கு ஆசிரியர் தண்டனை வழங்குதல் அடித்தல் சரியானதா தவறானதா என்கின்ற இரு கோணங்களில் காணப்படும் சிந்தனைகளை மையப்படுத்தி (அ) தர்மம் என்ற சிறுகதை அமைகின்றது. தற்செயலாக இடம்பெறும் ஒரு செயலால் குழப்பமடையும் மனதோடு பாடசாலைக்கு செல்லும் ஒரு ஆசிரியர் ஒருவர் அக்குழப்ப நிலைக்கான காரணத்தைக் கண்டறிவதில் காட்டிய செயலால் தன் கடமையைச் சரியாகச் செய்ய முடியாமல் போனமையை உணர்த்துகின்ற வகையில் எழுதப்பட்ட சிறுகதையாக "ஏன்" என்னும் சிறுகதை அமைகின்றது. மாணவர்கள் அனைவரும் சமமானவர்கள் மாற்று ஆற்றல் உள்ளவர்களையும் ஆசிரியர் தன் சாணக்கியத்தால் சிறந்த முறையில் கற்பிக்க முடியும் என்ற கருவை அடிப்படையாகக் கொண்டு "சாணக்கியம்" என்ற சிறுகதை அமைகின்றது.

தன் தாய் போன்ற தோற்றம் உடைய ஆசிரியை மீது ஒரு மாணவி கொள்கின்ற ஆசை விருப்பமாக காதலாக மாறி தன் கல்வியில் முதன்மை நிலையை இழக்கின்ற நிலையில் அம்மாணவியை சரியான முறையில் வழிப்படுத்தி மீண்டும் முதன்மை நிலை அடையச் செய்யும் முயற்சியில் ஈடுபடும் ஓர் ஆசிரியரின் உயர்ந்த வழிகாட்டலை காட்டுகின்ற "கானல்" என்ற சிறுகதை இத்தொகுப்பில் இடம்பெறுகின்றது.

பருவம் அடைந்த பெண் மாணவி ஒருத்தி பாடசாலைக்கு வருகின்றபோது ஏற்படும் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவியின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் சிறுகதையாக "நீர்க்குமிழி" என்ற சிறுகதை அமைகின்றது.

இந்தவகையில் பாடசாலையை மையப்படுத்திய சிறுகதைகள் மாணவர்கள் ஆசிரியர்கள் இடையே நிலவுகின்ற தொடர்புகள் ஆரோக்கியமானதாக அமைய வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றனவாய் அமைந்துள்ளன.

பல்கலைக்கழக வாழ்வினை ஆரம்பிக்கும் ஒருவன் சமூகத்திற்கும் பயன்படும் வகையில் சமுகத்திற்கு தலைமை தாங்கும் ஒருவனாக வாழ வேண்டும். தனி உலகை சித்தரித்து விசுவாமித்திரன் என்ற பாத்திரம் இராமாயணத்தில் எவ்வாறு சிறப்புப் பெற்றதோ அதேபோன்று கணேஸ் என்ற பாத்திரம் பல்கலைக்கழக மரபை மீறி புதிய மரபை தோற்றுவிப்பதில் வெற்றி காண்கின்ற நிலைப்பாட்டை உணர்த்தும் விசுவாமித்திரன் என்ற சிறுகதை அமைகின்றது. இச்சிறுகதை பல்கலைக்கழக வாழ்க்கையை 'வெல்கம் பாட்டி' யை மையப்படுத்தி எழுதப்பட்ட கதையாக விளங்குகின்றது.




போர்க்கால சூழலை மையப்படுத்தி எழுதப்பட்ட சிறுகதைகளாக நான்கு சிறுகதைகள் அமைகின்றன.

கண்டி தலதாமாளிகை மீதான தற்கொலைத் தாக்குதலை மையப்படுத்தி எழுதப்பட்டதாக புகையிரதம் மீண்டும் வரும் என்ற சிறுகதை காணப்படுகின்றது. போர்க்கால சூழலில் போரின் வடுக்களை சுமந்து வாழ்ந்த மக்களுக்கு சிக்குன்குனியா என்ற நோய் ஏற்படுத்திய இன்னல்களை வெளிப்படுத்தும் வகையில் எழுதப்பட்ட சிறுகதையாக 'சிக்குன்குனியா' என்ற சிறுகதை காணப்படுகின்றது. சமகால வாழ்க்கை முறைகளை அரசியல் சூழ்நிலைகளை இராமாயணக் கதைப்பாத்திரங்கள் ஊடாக வெளிப்படுத்தும் வகையில் 'தூதுவன்' என்ற சிறுகதை காணப்படுகின்றது.

போர்க்கால சூழ்நிலையில் வாழ்க்கைத்துணையை இழந்து நிராதரவாய் நிற்கும் குடும்பம் ஒன்று சிதைவடைந்தமையை உணர்த்தும் வகையில் 'மூடநாரையும் கீரிப்பிள்ளையும்' என்ற சிறுகதை காணப்படுகின்றது.

போரின் வடுக்களை சுமந்து வாழ்ந்த மக்களை மேலும் துன்பப்படுத்துகின்ற வகையில் இயற்கை அனர்த்தம் ஆகிய 'சுனாமி' ஏற்படுத்திய தாக்கத்தை விளக்கும் சிறுகதை ஒன்று இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளது. 'புதைமணல்' என்ற சிறுகதை சுனாமி அனர்த்தத்தால் ஏற்பட்ட பாதிப்பினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளமையைக் காணலாம்.

திருமண வாழ்வில் தம்பதியினரிடையில் ஏற்படும் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டு சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

திருமணத்திற்கு முன்னர் ஏற்பட்ட காதலை மறக்க முடியாமலும் திருமண வாழ்க்கையைத் தொடர்ந்து நடாத்த முடியாமலும் அவஸ்தைப்படும் மன உணர்வினை 'நினைவுக்குமிழிகள் எவ்வாறு உடைந்து இன்பமான வாழ்வைத் தொடர்ந்தார்கள் என்ற விடயத்தை மிகச் சிறப்பாக கதை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

திருமண வாழ்வின் இன்பத்தை அனுபவிப்பதில் இருபாலாருக்கும் சமவாய்ப்பு காணப்படவேண்டும். வாய்ப்பு மறுக்கப்படுகின்ற சூழலில் கருத்து வேறுபாடுகள் தோன்ற இடமளிக்கும். அவ்வாய்ப்பினை ஏற்படுத்தும் சூழ்நிலைகளை சிறப்பாக சித்தரிப்பதாக 'அபௌர்ஷேசம்' என்ற சிறுகதை அமைந்துள்ளது.

இந்த வகையில் பல்வேறு தளங்களில் 'புதைமணல்' என்ற சிறுகதைத் தொகுப்பில் அமைந்துள்ள சிறுகதைகள் காணப்படுகின்றன. ஆசிரியர் எல்லோரும் புரிந்துகொள்ளக் கூடிய மொழிநடையில் கதைகளை அமைத்துள்ளார்.

'நீர் ஒரு டிக்கிறி கோல்டர் சின்ன வகுப்புக்குப் போட்டது கவலையோ'

'டிக்கிறி கோல்டர் எண்டா டிக்கிறி அடைப்பர் ஒண்டை வாங்கிக் கொழுவிப் போட்டு இருக்க வேண்டியதுதான்' என்று சாணாச்சியவர் சிறுகதையில் இடம்பெறும் பகுதி ஆசிரியரின் நகைச்சுவை உணர்வையும், மொழிநடையின் சிறப்பையும் உணர்த்தும் பகுதியாக அமைந்துள்ளமையைக் காணலாம்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் வீ.கருணாகரன் வாழ்த்துரையும், உதவிக் கல்விப் பணிப்பாளர் சிறிக்குமரனின் நூலாசிரியர் பற்றிய குறிப்புக்களையும், விரிவுரையாளர் நா.ராஜன் அவர்களின் அழகிய முகப்பு ஓவியங்களுடனும் இச்சிறுகதை தொகுதி வெளிவந்துள்ளது.

மரபுவழிப் புலமையாளனாகவும் கவிஞனாகவும் அறியப்பட்ட மகாலிங்கசிவம் அவர்கள் இச்சிறுகதைத் தொகுப்பின் ஊடாக தேர்ந்த சிறுகதை ஆசிரியராகவும் அடையாளப்படுத்தப்படுகின்றார் என்று ஆசிரியர் ரமேஸ் அவர்கள் வழங்கிய 'அணிந்துரை' பொருத்தியானதாக அமைந்துள்ளமையை புதை மணல் கதைத் தொகுதி ஊடாக அறிய முடிகின்றது.

பூ.நகுலன்
ஆசிரியர்
தெல்.யூனியன் கல்லூரி

## குட்டீஸ் பக்கம்




# சுவாமி விபுலானந்தர்

ஈழத்தில் சமயத்தை வளர்த்த பெரியார்களின் வரிசையில சுவாமி விபுலானந்தரும் குறிப்பிடத்தக்கவர் சைவத்தையும் தமிழையும் வளர்க்க பெரும்பணி புரிந்தார்.

மட்டக்களப்பு பிரதேசத்தின் தெற்கே உள்ள காரைதீவு எனும் ஊரில் சாமித்தம்பி என்பவருக்கும் கண்ணம்மையாருக்கும் மகனாக 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் பிறந்தார். தது ஆரம்பக் கல்வியை குஞ்சித்தம்பி ஆசிரியரிடமும் வசந்தராசப்பிள்ளை அவர்களிடமும் கற்றதோடு வைத்தியலிங்க தேசிகரிடம் நன்னூல், சூடாமணி நிகண்டு என்பவற்றைக் கற்றார்.

மயில்வாகனன் இளமையில் பெற்ற தமிழ்க்கல்வி அறிவினால் மதுரை தமிழ்ச்சங்கம் நடாத்திய பண்டிதர் பரீட்சையில் சித்தியெய்தினார். இப் பாடசாலையில் சித்தியெய்திய முதாவது இலங்கையர் என்ற பெருமை கிடைத்தது. தனது பதினாறு வயதில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட தேர்வில் முதன்மையாகத் தேறினார். பின் தான் படித்த புனித மைக்கல் கல்லூரியின் ஆசிரியராக கடமையாற்றினார். ஆங்கில பயிற்சி பெற்ற ஆசிரியராகவும் இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானமானிப் பட்டதாரியாகவும் தமிழ்ப் பண்டிதராகவும் உயர்ந்தார்.

1920 ஆம் ஆண்டு மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபரானார். 1922 ஆம் ஆண்டு மயில்வாகன்ர துறவியாகி தூய்மை வாழ்வு பெற சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்தார். அப்போது அவருக்கு பிரபோதசை தன்னியர் என்னும் பிரமச்சரிய நாமம் வழங்கப்பட்டது. 1924 ஆம் ஆண்டு சித்திரை மாதம் சுவாமி சிவானந்தா அவர்கள் பிரபோதசை தன்னியிருக்கு சுவாமி விபுலானந்தர் என்ற பெயரை வழங்கினார்.



மயில்வாகனர் பிறந்த காலப் பகுதியில் ஆங்கிலேயர் ஆட்சி நிலவியது. அக்காலத்தில் சைவசமயம் நலிவுற்றிருந்தது. நாவலரைப் போல மயில்வாகனனுக்கும் சைவத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டிய தேவை இருந்தது. அதனால் 1925 ஆம் ஆண்டு இலங்கை வந்த விபுலானந்த அடிகள், இந்து தமிழ்ப் பிள்ளைகள் தமது சூழலில் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்குடன் கல்விப் பணியாற்றினார்.

சைவத்தையும் தமிழையும் வளர்த்த விபுலானந்தரின் அரிய நூலாகிய யாழ் நூல் 1947 ஆம் ஆண்டு யூன் மாதம் ஐந்தாம், ஆறாம் திகதிகளில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இவ்வாறு பலதரப்பட்ட பணிகளை ஆற்றிய சுவாமி விபுலானந்தர் 1947 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதி இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

**சி.சிவானுஜா**
யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி

# வாரமொரு குறள்



*துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்*
*துப்பாய தூ உம் மழை.*

**பொருள்: யாருக்கு உணவுப் பொருள்களை விளைவித்துத்தர மழை பயன்படுகிறதோ, அவர்களுக்கே அந்த மழை அவர்கள் அருந்தும் உணவாகவும் ஆகி, அரிய தியாகத்தைச் செய்கிறது.**




# கவிதை

மலரே உன்றன்
வாழ்க்கையினை
மறையா தெனக்கு
உரைப்பாயோ
அலர உன்னை செய்தவாராய்
அறிய மணமும்
உரைப்பாயோ

பற்பல வண்ணம் தீட்டியவர்
யார்?
பார்க்க பகட்டாய் படைத்த
கலகல என்று சிரித்திடுவாய்
காற்று நிதமும்
கொடுத்திடுவாய்

அரித்த நல்ல பூம்கொடியை
அழகாய் உடலில் பூசியதாய்
சிரிக்கும் உந்தன்
செவ்வாய்க்கே
சீதஅமுதும் வளர்த்திடுவாய்

மோ.சாருந்தினி
தரம் - 07
யா/சிறுப்பிட்டி அரசினல் தமிழ் கலவன் பாடசாலை


## அவுஸ்ரேலியாக் கண்டம்

01. அவுஸ்ரேலியாக் கண்டத்தின் பரப்பளவு 78 இலட்சம் சதுரகிலோமீற்றர் ஆகும்.
02. அவுஸ்ரேலியாவின் எல்லைகளான
    வடக்கே - பசுபிக்
    கிழக்கே - பசுபிக்
    தெற்கே - அந்தாட்டிக்
    மேற்கே - இந்து
03. அவுஸ்ரேலியாவில் காணப்படும் பிரதான மலை பெரியபிரிப்பு மலை
04. அவுஸ்ரேலியாவிலுள்ள பிரதான தீவுகாளாவன
    நியூசிலாந்து
    தல்மோனியா
    கிறிஸ்மஸ் தீவு
    கங்காரு தீவு
05. இங்குள்ள பிரதான விரிகுடாக்களாவன காப்பென்டேரியன் விரிகுடா பெரிய அவுஸ்ரேலியன் வளைகுடா
06. அவுஸ்ரேலியாவில் திப்சன பாலைவனமும் காணப்படுகின்றது.

**ஜெ.கம்சாயினி**
யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி

# THE ANT AND THE DOVE

Once hot day, an ant was searching for some water. After walking around for some time, she came to a spring. To reach the spring, she had to climb up a blade of grass. While making her way up, she slipped and fell into the water.



She could have drowned if a dove up a nearby tree had not seen her. Seeing that the ant was in trouble, the dove quikly plucked off a leaf and dropped it into the water near the struggling ant. The ant moved towards the leaf and climbed up there. Soon it carried her safely to dry ground. Just at that time, a hunter nearby was throwing out his net towards the dove, hoping to drap it.

Guessing what he was about to do, the and quickly bit him on the heel. Feeling the pain, the hunter dropped his net. The dove was quick fly away to safely.

**A.Lathanhini**
Grade - 06
J/V.Girl's High School

# விடுகதை

01. உயிரில்லாத நீதிபதி ஒழுங்காய் தீர்ப்பு சொல்லுறார் - தராசு
02. அவனுக்கு வீடு மற்றவர்களுக்கு வலை - சிலந்தி வலை
03. தன்னுயிரைக் கொடுத்து மற்றவருக்கு வெளிச்சம் - மெழுகுவர்தி
04. அச்சு இல்லாத சக்கரம் அழகு காட்டும் சக்கரம் - வளையல்
05. செம்பு நிறைய தங்கமுத்து - மாதுளை
06. நீரில் தோன்றும் பூ ஆயிரம் பேர் சேர்ந்தாலும் எடுக்க முடியாது - நீர்க்குமிழி
07. பட்டுடுத்து பட்டுடுத்து பதினாறு பட்டுடுத்து வாறாளாம் தேவடியாள் - வெங்காயம்
08. பச்சை நிற காட்டுக்குள்ளே கறுப்பியும் சிவப்பியும் பார்த்தவுடன் சிரிக்கின்றனர் - ஈச்சம்பழம், ஈச்சங்காய்
09. பூக்கும் போது மஞ்சள் காய்க்கும் போது சிவப்பு பழுக்கும் போது கறுப்பு - பேரீச்சம்பழம்
10. பருப்புக்கறி மணப்பது ஏன் படைவீரன் சாவதேன் பெருங்காயத்தால்

**யோ.திவ்யா**
யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி

# தொடர் மொழிக்கு ஒரு மொழி

01. ஒரே நேரத்தில் எட்டு விடயங்களை அவதானிப்பவன் **அட்டவதானி**
02. கணவனை இழந்தவள் **விதவை**
03. மனைவியை இழந்தவன் **தபுதாரன்**
04. சிலை செதுக்குபவன் **சிற்பி**
05. மட்பாண்டம் தயாரிப்பவன் **குயவன்**
06. தாமும் பயன்படுத்தாமல் பிறருக்கும் கொடுக்காதவன் **ஊதாரி**
07. உதவி கேட்பவர்களுக்கு இல்லையெனாதவன் **வள்ளல்**
08. ஒன்றைப் பிரதி செய்து எழுதுவது **படியெடுத்தல்**
09. நிகழ்ச்சியொன்றை மேடையேற்றுவதற்கு முன் சரி பிழை பார்த்தல் **ஒத்திகை**
10. பொருட்களை இழந்தவன் **அகதி**
11. பிணம் சுடப்படும் இடம் **சுடலை**
12. யானை கட்டும் இடம் **பந்தி**
13. குதிரை கட்டும் இடம் **லயம்**
14. உப்பு விளையும் இடம் **உப்பளம்**
15. இரவில் கூடும் சந்தை **அல்லங்காடி**

**கா.யூலானி**
தரம் - 07
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

## மனந்திறக்கிறார் அனந்தி

# ஆறு மாதத்திற்குள் மீள்குடியமர்வு ஜனாதிபதியின் கூற்றுக்கு வரவேற்பு

1989ஆம் ஆண்டு வலிகாமம் வடக்கிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் முழுமையாக மீள்குடியமர்த்தப்படவில்லை. அண்மையில் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இடம்பெயர்ந்துள்ள வலிகாமம் வடக்கு மக்களை ஆறு மாதகாலத்திற்குள் குடியேற்ற உள்ளதாக தெரிவித்திருந்தார். முன்னைய அரசாங்கங்களால் இவ்வாறு அளிக்கப்பட்ட பல்வேறு வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் போனது தொடர்பாக எமது மக்களுக்கு நன்றாகவே தெரியும்.




நல்லாட்சி அரசுக்கு தலைமை வகிக்கும் ஜனாதிபதி எமது மக்களுக்கு வாக்குறுதி ஒன்றை அளித்துள்ளார். இந்த வாக்குறுதி வெற்று வாக்குறுதியாக அல்லாமல் நிறைவேற்றப்படவேண்டும். அவரின் இந்த வாக்குறுதியை நாம் வரவேற்கின்றோம். அவரின் செயற்பாடுகளைப் பொறுத்தே நல்லாட்சியின் தத்துவம் உணரப்படும்.

வலிகாமம் வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து நீண்டபல வருடங்களான நிலையில் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

மீன்பிடி, விவசாயத் தொழில்களையே அவர்கள் செய்து வந்த நிலையில் இடம்பெயர்ந்த பின்னர் அவர்கள் கூலிவேலைகளையே செய்து வருகின்றனர். இடம்பெயர்ந்தவர்களில் சிலர் தமது உறவினர் வீடுகளிலும் பலர் நலன்புரி நிலையங்களிலும் தங்கினர். அதில் சிலர் அரசியல் தஞ்சம் கேரி வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டனர்.

நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களின் பிள்ளைகளில் பெருமளவானோர் கல்வியை இழந்தநிலையில் உள்ளனர். தற்போதும் அந்தப் பிள்ளைகளை எவராவது நீங்கள் எந்த இடம் என்று கேட்டால் அவர்கள் தாம் தங்கியிருக்கும் நலன்புரி நிலைய பெயர்களையே கூறுகின்றனர். மயிலிட்டி, தையிட்டி, காங்கேசன்துறை போன்ற இடங்களில் வாழ்ந்த மக்களின் பிள்ளைகள் தற்போது தமது இருப்பிடத்தை முகாம் என அடையாளப்படுத்தப்படுவது எவ்வளவு வேதனையானது. எனவே அவர்களின் இந்த அவல வாழ்க்கை நீண்டுகொண்டிருக்கக்கூடாது.

நலன்புரி நிலையத்தில் அந்த மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள வீடுகள் உருக்குலைந்த நிலையிலுள்ளன. எந்தநேரமும் எவர் தலையில்விழுமோ என அச்சத்திலேயே அவர்கள் உள்ளனர். வாழ்வாதாரமில்லை, பிள்ளைகளுக்கு ஒழுங்கான கல்வி இல்லை. மழைவெள்ளத்திற்குள் அகப்பட்டு அவர்கள் சின்னாபின்னப்படுவதனை எமது அரசியல் தலைவர்கள் கண்டும் காணாமலும் உள்ளனர்.



அண்மையில் வளலாய் பகுதிக்குச் சென்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா அவர்கள் அந்த மக்களைப் பார்த்து நீங்கள் ஏன் இடம்பெயர்ந்தனீர்கள் என்று கேட்டுள்ளார். இவ்வாறு அவர் கேட்டது வேதனையான விடயம். என்ன நோக்கத்திற்காக இதை அவர் கேட்டாரோ தெரியவில்லை. ஆனால் இவ்வாறு அவர் கேட்டது ஏளனப்படுத்துவதாக அமைந்தது. ஏன் இடம்பெயர்ந்தவர்கள் என்றால் அவருக்கு அந்த மக்களின் துன்பம் தெரியவில்லை. நாம் ஏதோ பொழுதுபோக்கிற்காக இடம்பெயர்ந்து பூர்விக மற்றவர்களாக இருந்தது மாதிரியான கேள்வி அது.

இவர்கள் அனைவரும் இராணுவ நடவடிக்கைகளால் அவர்களது எறிகணை வீச்சிற்கு கொல்லப்பட்டவர்கள்போக மீதமானவர்கள் இடம்பெயர்ந்திருந்தனர். இந்த வரலாறுகூடத் தெரியாமல் ஏன் இடம்பெயர்ந்தீர்கள் எனக்கேட்பது ஒரு தலைமைக்குரிய கேள்வி அல்ல.ஆனால் நாங்கள் வேதனைப்பட்டோம். தமிழ் மக்களின் தலைவர் எனக் கூறும் ஒருவர் 89,90களில் நடந்த வரலாற்றைக்கூட தெரியமுடியாமல் இவ்வாறான கேள்வியை அந்த மக்களை நோக்கி கேட்டிருந்தார். அந்த மக்கள் மிகவும் அப்பாவியான மக்கள். நாங்கள் இராணுவம் அடித்ததனால் இடம்பெயர்ந்தோம் எனக் கூறினார்கள்.

ஆனால் இதைத்தான் அவர்கள் சர்வதேசத்திற்கும் கூறிக்கொண்டிருக்கிறார்கள். எனவே ஜனாதிபதி எமது மக்களை ஆறுமாதகாலத்திற்குள் மீள குடியமர்த்துவேன் என்ற கருத்தை செயற்படுத்தி நல்லாட்சி அரசின் நல்லெண்ணத்தை தமிழ்மக்களிடம் வெளிப்படுத்த வேண்டும்.

அத்துடன் வலிகாமம் வடக்கு மக்களை மட்டுமல்ல இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த அனைத்துப்பகுதி மக்களும் மீள குடியமர்த்தப்படவேண்டும்.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழரது பூர்விக நிலங்கள் முஸ்லிம் அரசியல்வாதிகளால் கபளிகரம் செய்யப்படுவது குறித்து நாம் பலமுறை மாகாணசபையில் பேசியும் எந்தவொரு நடவடிக்கையும் இல்லை. பாரிய காடுகள் அழிக்கப்பட்டு முஸ்லிம் குடியேற்றங்கள் மிகவும் நாசூக்காக செய்யப்பட்டுவருகின்றன. இதனைத் தட்டிக்கேட்பதற்கு எமது தலைவர்களுக்கு தெம்பில்லாமல் உள்ளது. ஆனால் அவர்கள் காணிப் பத்திரங்களைக்கூட பெற்றுக் கொண்டிருப்பதைக் காணலாம்.

முல்லைத்தீவிற்கு தற்போது வந்துள்ள முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தான் கிளிநொச்சியில் கடமையாற்றிய வேளை இராணுவத்திற்காக பல காணிகளை நாசூக்காக வழங்கியுள்ளார். இப்பொழுதும் முல்லைத்தீவிலும் சிங்கள மற்றும் முஸ்லிம் குடியேற்றத்திற்கு மிகவும் உறுதுணையாக செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்.

நாங்கள் வெறுமனே அரச அதிகாரிகளை மட்டும் குற்றம் சொல்லிக் கொண்டிருக்காமல் இவ்வாறான இயல்பற்ற நிலை ஏற்படுவதற்கு சர்வதேசமும் உந்துசக்தியாக உள்ளதென்ற குற்றச்சாட்டை நான் முன்வைக்கிறேன். அவர்கள் நல்லாட்சி அரசுடன் சேர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறார்களே ஒழிய நல்லாட்சி அரசின் குறைகளை அவர்கள் கண்டுகொள்ளவில்லை.

அத்துடன் கடந்த 2009இற்கு பின்னர் திட்டமிட்ட சிங்கள, முஸ்லிம் குடியேற்றங்களை தடுத்து நிறுத்துவது குறித்து மேற்குலகமும் சிந்திக்கவேயில்லை. ஆனால் எமது மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தங்களுடைய சொந்தக் காணிகளில் குடியேறுவதற்கு தமிழர் தரப்பு எவ்வித ஆட்சேபனையையும் தெரிவிக்கவில்லை.

ஆனால் எங்களுடைய இனத்தின் இனப்பரம்பலை குறைக்கும் நோக்கில் காடுகளை அழித்து சிங்களவர்களையும், முஸ்லிம்களையும் குடியேற்றுவதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். இது தொடர்பாக நாம் மாகாணசபையில் பலமுறை பேசியுமுள்ளோம். எனினும் அதிகாரமற்ற வெற்றுச்சபையை வைத்துக் கொண்டு எதுவும் நடக்கவில்லை.

இந்த நில ஆக்கிரமிப்பிற்கு எதிராக மக்கள் அகிம்சை ரீதியில் போராடினால்தான் இதற்கான தீர்வு கிடைக்கும்.

25 பேரைக்கொண்ட தமிழ்மக்கள் பேரவை உருவாக்கம் காலத்தின் தேவையென்றே நான் கருதுகின்றேன்.

எம்முடைய மக்கள் கடந்த காலங்களில் தமிழ்த்தலைமைகளால் ஏமாற்றப்பட்டது மட்டுமல்ல தற்போதும் ஏமாற்றப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். இந்தநிலையில் புதிதாக உருவாக்கம் பெற்றுள்ள தமிழ்மக்கள்பேரவையின் செயற்பாடுகள் பற்றி நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எனினும் என்னுடைய அறிவுக்கெட்டிய வகையில் இந்த தமிழ் மக்கள் பேரவை என்பது மாகாணசபை என்ன செய்தது எனக் கேட்கும் எதிர்க்கட்சிக்காரர்களுக்கு விடையளிக்கும் வகையில் அமைந்ததொன்றாகும். அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது மட்டுமல்ல அரசியல் தீர்வு என்று வரும்போது 13ஆவது திருத்தச்சட்டம்தான் தீர்வு என்று சர்வதேசம் கூறினாலும் அதை ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இல்லை.

13ஆவது திருத்தச்சட்டமென்பது மிதவாத போக்குகொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைவருமான அமிர்தலிங்கம் அவர்களால் குறைபாடுகள் எடுத்துரைக்கப்பட்டு மிகத் தெளிவாக நிராகரிக்கப்பட்ட ஒன்றாகும். விடுதலைப்புலிகளும் இதனை நிராகரித்த நிலையில் மிதவாத போக்குடைய தமிழ்த் தலைவரும் இதனை நிராகரித்த ஒன்றாக இது அமைகின்றது.

எனவே மக்களுடன் மிகவும் நெருங்கிப்பழகுகின்ற சிவில் சமூகம் குறிப்பாக புத்திஜீவிகள் தமிழ் மக்கள் பேரவையில் பங்குகொண்டிருக்கினறனர். எனவே தமிழர்களுக்கான தீர்வை எட்டுவதற்கு இவர்களின் ஆலோசனைகள் முக்கியமானவையாகும்

குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் மத்தியில் செல்வதில்லை. அதேபோன்று அவர்களுக்கு அடுத்த நிலையிலுள்ள மாகாண, பிரதேசசபை உறுப்பினர்களும் மக்கள் மத்தியில் செல்வதில்லை. எனவே கிடைக்கும் தீர்வுகூட கிடைக்காமல் போய்விடுமென்ற தோற்றப்பாட்டை எமது தலைமைகள் மக்கள் மத்தியில் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறார்கள். காலத்தை தவறவிட்டு விட்டோம் என்றெல்லாம் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவ்வாறில்லை. நாங்கள் நியாயமான ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை எட்டவேண்டுமென்ற கோரிக்கைகள் மக்கள் மத்தியில் வரவேண்டும்

எனவே இவ்வாறான ஒரு பேரவை அமைக்கப்பட்டமை அது

(தொடர்ச்சி 23 ஆம் பக்கம்)

# வடக்கில் நீரிழிவு நோய் அதிகரிக்கக் காரணம்?

நீரிழிவு நோய் உலகையே அச்சுறுத்தும் வகையில் மிகப்பெரும் பிரச்சினையாக உருவெடுத்து நிற்பது உங்களுக்குத் தெரியும். உலகளாவிய அளவில் ஏறத்தாழ 400 மில்லியன் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னமும் 15 ஆண்டுகளில் இந்தத் தொகை 600 மில்லியன்களைத்தாண்டும் என்று எதிர்வு கூறப்படுகிறது.

உலகுடன் ஒப்பிடும்பொழுது இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் இதன் தாக்கம் மிக அதிகமாக இருக்கிறது. இலங்கையிலே நாடளாவிய ரீதியில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி 10.3 வீதமான மக்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. இந்த ஆய்வில் நாட்டின் வடக்கு கிழக்குப்பகுதிகள் உள்ளடக்கப்படவில்லை.

### நீரிழிவு நோயின் பாதிப்பு

ஆனால், யாழ்ப்பாணத்திலே அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படிவளர்ந்தவர்களில் 16.4 வீதமானவர்கள். நீரிழிவுநோயினால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்திருக்கிறது. இலங்கையில் நடாத்தப்பட்ட ஆய்வுகளின்படி 2030 ஆம் ஆண்டளவில் 13.5 வீதமான மக்களுக்கு நீரிழிவு ஏற்படும் ஆபத்து இருக்கிறது என்று எதிர்வு கூறப்படுகின்றது. ஆனால் யாழ்ப்பாணத்தில் நீரிழிவு நோயாளர்களின் தற்போதைய விகிதாசாரம் 16.4 வீதமாகும்.



யாழ். போதனா வைத்தியசாலையின் அனைத்துப் பிரிவுகளுக்கும் வரும் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வெளிநோயாளர் பிரிவு, கிளினிக் கண் சிகிச்சைப்பகுதி, சிறுநீரகசுத்திகரிப்புப்பகுதி, சத்திர சிகிச்சைப் பகுதி, இருதய சிகிச்சைப் பகுதி, வைத்திய விடுதிகள் என எல்லாப் பிரிவுகளிலும் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையத்தில் மட்டும் 1534 நோயாளர்கள் பதியப்பட்டு சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். இலங்கையின் ஏனைய நீரிழிவு சிகிச்சை நிலையங்களுடன் ஒப்பிடும்போது இங்கேதான் அதிகூடிய எண்ணிக்கையான மக்கள் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள்.

இவ்வாறாக வடபகுதியிலே நீரிழிவு நோயாளர்களின் வீதம் ஒப்பீட்டளவில் அதிகரிக்கக் காரணம் என்ன? இதற்கு பல காரணங்கள் உள்ளன.

### முதியவர்களின் எண்ணிக்கை

எமது பகுதியில் வாழும் முதியவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகமாகும். அதாவது வடபகுதியில் வாழும் மக்களின் சராசரி வயது இலங்கையில் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும்பொழுது அதிகமாகும். காரணம் பல இளம் சமூகத்தினரை போரால் இழந்துவிட்டோம். பல இளம் தலைமுறையினர் இடம்பெயர்ந்து பிற நாடுகளுக்குச் சென்றுவிட்டனர். சென்றுகொண்டும் இருக்கிறார்கள். எனவே இங்கு வயது கூடியவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதால் நீரிழிவுநோயாளர்களின் வீதமும் அதிகரித்துக் காணப்படுகிறது.

### ஆரோக்கியமற்ற உணவுமுறை

அத்துடன் வடபகுதி மக்களுக்குத்தான் பிறநாடுகளில் வசிக்கும் உறவினர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு தடவையும் இலங்கைக்கு வரும்பொழுது கிலோக் கணக்கில் சொக்லேட்டுக்களையும் இனிப்பு வகைகளையும் எடுத்து வருகிறார்கள். இதன் காரணமாக ஆண்டுதோறும் பல்லாயிரம் கிலோ கண்டோஸ், இனிப்பு வகைகள் வடபகுதிக்கு வந்தவண்ணம் இருக்கின்றன. இவற்றை வீணாக்கக்கூடாது என்ற நோக்கில் எமது மக்கள் அவற்றை உண்டு நோயாளிகள் ஆகிக் கொண்டிருக்கிறார்கள். இதுவும் இங்கு நீரிழிவு அதிகரிக்கக் காரணமாக அமைகிறது.

இதற்கு மேலதிகமாக நாம் ஆரோக்கியமற்ற உணவு முறைக்கு பழக்கப்பட்டிருக்கிறோம். வெள்ளை அரிசிச் சோறு, பொங்கல், அவல், பிரசாதம், பாயாசம், கற்கண்டு. மோதகம், றொட்டி, மென்பானங்கள் என சீனி, மா என்பவை அதிகமுள்ள உணவுமுறைக்கு அடிமைப்பட்டிருக்கிறோம்.

உடற்பயிற்சிக்கு என்று நேரம் ஒதுக்குவதில்லை. இவை காரணமாக அதிகரித்துவரும் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்து இருக்கிறது.

எனவே நீரிழிவு தடுப்பு நடவடிக்கைகள் அனைத்து மட்டங்களிலும் உத்வேகம் பெற வேண்டிய தேவை இருக்கிறது.

Dr.சி. சிவன்சுதன்,
வைத்தியநிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.

# நீரிழிவு நோயாளர்களும் இன்சுலினும்

இன்சுலின் என்றால் என்ன? எமது உடல் உறுப்பாகிய சதையியினால் சுரக்கப்படும் ஓர் ஓமோன் ஆகும். இது உடலின் குளுக்கோசின் செறிவைப் பேணுவதற்கு முக்கிய பங்காற்றுகிறது. இந்த இன்சுலின் ஓமோனானது ஒருவரில் சுரக்கப்படுவது குறைவாகவோ அல்லது சுரக்கப்படும் தொழிற்பாட்டில் தடை ஏற்படும்போதோ அவரில் குருதிக் குளுக்கோசின் செறிவு சீராக இருக்காது. இந்நிலையைத்தான் நீரிழிவு நோய் என அடையாளப்படுத்துகிறோம்.

இந்த நிலையில் ஒரு நீரிழிவு நோயாளிக்கு இன்சுலின் தொழிற்பாட்டைக் கூட்டுவதற்கு மாத்திரைகளும், இன்சுலின் ஊசி மருந்தும் சிபார்சு செய்யப்படுகிறது. இங்கு இன்சுலின் பாவிக்கும் நோயாளி ஒருவர் இன்சுலின் மருந்தை எவ்வாறு பேணுவது என்பது பற்றியும், ஊசி (Syringe) சிறிஞ்சுகள் என்பவற்றை எவ்வாறு தெரிவு செய்வது என்பது பற்றியும் பார்ப்போம்.

ஊசி என்றால் பெரும்பாலானோர பயப்படுகிறார்கள். ஆனால் தற்போது மிகவும் மெல்லிய ஊசிகளுடன் கூடிய இன்சுலின் சிறிஞ்சுகள் கிடைக்கின்றன. அத்துடன் இன்சுலின் பேனா என்னும் நவீனப்படுத்தப்பட்ட உபகரணமும் கிடைக்கின்றது. இவை குறைந்த வலியுடன் போடக்கூடியதாகவும், பாதுகாப்பானதாகவும் இலகுவில் கொண்டு செல்லக் கூடியதாகவும் உள்ளன.

பொதுவாகக் கிளினிக்குகளில் பெறும் இன்சுலின் மருந்தைப் பெரும்பாலானோர் சட்டைப் பொக்கற்றுக்களிலும் கைப்பைகளிலும் வீட்டுக்குக் கொண்டு செல்கிறார்கள். இது தவறானது. ஏனெனில் இன்சுலின் மருந்தானது பொதுவாக 2–8°C வெப்பநிலையில் பாதுகாக்கப்படவேண்டியது. சூழல் வெப்பநிலையில் அதிகநேரம் இன்சுலினை வைத்திருந்துவிட்டு பின் அதனை குளிர்சாதனப் பெட்டியில் வைத்தாலும் அதன் செயற்பாடு குறைந்துதான் இருக்கும்.

எனவே கிளினிக்குகளில் பெறப்படும் இன்சுலின் மருந்தைச் சரியான முறையில் கொண்டு சென்று சரியான முறையில் பேணிப் பாதுகாக்கவேண்டும்.

முதலில் கிளினிக்குகளில் பெறும் இன்சுலினை எவ்வாறு வீட்டுக்குக் கொண்டு செல்வது என்பது பற்றிப் பார்ப்போம். ஒரு சிறிய சுடுநீர்ப் போத்தலினுள் சிறியளவுஐஸ்கட்டிகளைப் போட்டு அதனுள் இன்சுலின் மருந்துக்குக் குப்பியை வைத்துக்கொண்டு செல்லலாம். இது ஒரு பாதுகாப்பான முறையாகும். எவ்வளவு நேரம் சென்றாலும் இன்சுலின் மருந்துக்குப்பியைக் குளிர்சாதனப் பெட்டி வசதியுள்ளவர்கள் அதனுள் வைத்துப் பாதுகாக்கலாம். குளிர்சாதனப் பெட்டியில் வைத்துப் பாதுகாப்பது சிறந்த முறையாகும்.

குளிர்சாதனப் பெட்டி வசதியில்லாதவர்கள் பின்வரும் முறையிலும் பாதுகாக்கலாம். வாயகன்ற ஒரு மண் பானையையும், அதனுள் வைக்கக் கூடியதான இன்னோர் சிறிய மண் பானையையும் வாங்கிக்கொள்ள வேண்டும். வாயகன்ற பானையுள் அரைவாசிக்கு நீர் விட்டுச் சிறிய பானைக்குள் இன்சுலின் குப்பியை வைத்து அதனை நீருள்ள பானைக்குள் வைத்து



மூடிப்பாதுகாக்கலாம். இதுவும் ஓரளவு பாதுகாப்பான முறையாகும்.

இனி, இன்சுலின் ஊசி எப்படி போடுவது என்பது பற்றிப் பார்ப்போம். இன்சுலின் ஊசி போடுவதற்கு உகந்த சரியான சிறிஞ்சுகளை, ஊசிகளைத் தெரிவுசெய்ய வேண்டும். மருந்துக் கடைகளில் 296 x 1/23 அளவுடைய ஊசி பொருத்திய இன்சுலின் சிறிஞ்சுகளைக் கேட்டு வாங்குங்கள். இவை மெல்லிய ஊசிகளையுடைய சிறிஞ்சுகள் ஆகும். அத்துடன் ஊசி போடுவதற்குத் தேவையான பஞ்சுத் துண்டுகள், ஸ்பிரிட் என்பவற்றையும் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

முதலில் உங்கள் கைகளைச் சவர்க்காரம் பாவித்துக் கழுவித் துப்பரவான துவாயினால் துடைத்துக் கொள்ளவேண்டும். பின் இன்சுலின் குப்பியை உள்ளங்கையில் வைத்து மெதுவாக உருட்ட வேண்டும். பின ஊசியையும் சிறிஞ்சையும் பைக்கற்றிலிருந்து வெளியே எடுத்து இன்சுலின் குப்பியின் வாயைத் துப்பரவு செய்து விட்டு, சிறிஞ்சின் உட்தண்டை (Piston) பின்னோக்கி இழுத்து, தேவைப்படும் இன்சுலின் அளவில் விடுக. பின், இன்சுலின் மருந்துக் குப்பியின் இறப்பர் மூடி யினுடாக ஊசியைச் செலுத்தி சிறிஞ்சின் உட்தண்டை முன் தள்ளித் தேவையான இன்சுலினைச் சிறிஞ்சினுள் நிரப்புதல் வேண்டும். இப்போது ஊசியை இன்சுலின் மருந்துக் குப்பியிலிருந்து வெளியே எடுத்து ஊசிபோடும் பகுதியை (Sprit) ஸ்பிரிட்டால் துப்பரவு செய்து மிகவும் கெட்டியாகத் தோலைக் கிள்ளிப் பிடித்துக்கொண்டு கிடை மட்டத்திலிருந்து 45 கோணத்தில் தோலினூடாக ஊசியைச் செலுத்த வேண்டும். பின் பிஸ்ரனை முன் தள்ளி இன்சுலினைச் செலுத்த வேண்டும். ஊசியை ஏற்றிய பிறகு 5 செக்கன்கள் கழித்த பின்பே ஊசியை வெளியே எடுத்தல் வேண்டும். ஒருவர் ஒரு ஊசியையும் சிறிஞ்சையும் 2–3 நாட்களுக்குக் கவனமாகப் பாதுகாத்துப்பாவிக்கலாம்.

நீரிழிவு நோயாளி, தானே தனக்கு ஊசி போடுபவராக இருந்தால் வயிற்றுப் பகுதி, தொடைப் பகுதி என்பவற்றில் தொடர்ந்து ஒரே இடத்தில் போடாமல் சுழற்சி முறையில் ஊசியைப் போட்டுக் கொள்ளலாம். வேறொருவர் மூலம் ஊசிபோட்டுக் கொள்பவராக இருந்தால் மேல் கைப்பகுதியிலும், புட்டப் பகுதியிலும் போட்டுக் கொள்ளலாம். மேலதிக விபரங்கள் தேவையானோர் யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள நீரிழிவு மையத்துடன் தொடர்புகொண்டு விரிவான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

- செ. தவச்செல்வம்-
தாதிய உத்தியோகத்தர்,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ்.போதனா வைத்தியசாலை

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# லங்கா ராணி ...

கதையைப் பார்த்தீங்களே. நல்ல மனிதனுடைய மனத்தில் இருந்து இது வருமே. இந்த எல்லாரும் ஒன்று என்கிற பேச்சு வெறும் நுனி நாக்குத் தேன் பாருங்கோ" கொழும்பில் உள்ள தமிழர்கள் பலர் யூ.என்.பி கட்சிக்கே வாக்களித்தனர். இலங்கையின் மற்ற கட்சியான சிறிமாவோ கட்சியினர் ஒழிப்புடன் மாத்திரம் நின்றுவிடாது இறக்குமதிக் கட்டுப்பாடுகளால் தமிழ் வியாபாரிகளையும் பல இன்னல்களுக்கு உள்ளாக்கினர். இதேபோல் மேல்மட்டத்திலிருந்த மற்றவர்களும் பாதிக்கப்பட்டனர்.

நாகலிங்கம் தொடர்ந்தார், "நாங்கள் கண்மூடித்தனமாக நடக்கப்படாது பாருங்கோ. ஒரு காலத்தில் வெள்ளைக்காரன் இருந்தான். உத்தியோகத்திற்குப் போனோம், கடைகளைப் போய்ப் போட்டோம், பாதுகாப்பாக இருந்தது. அந்தப் பாதுகாப்பு இப்ப இல்லைப் பாருங்கோ. வெள்ளைக்காரனும் ஏதோ எங்களிலை உள்ள அன்பிலேயே கொண்டு போய்விட்டவனே? நாங்கள் கெட்டித்தனமாகப் படிச்சம், வேலை செய்தம், அது ஒரு பக்கம், நான் இல்லையெண்டு சொல்லமில்ல. இன்னொரு விஷயம் பாருங்கோ. அவன்கள் எங்களைக் கொண்டு போய் நடுவில வைச்சுக்கொண்டான்கள். அது எங்களுக்குத் தெரியயில்ல. எங்களுக்கென்ன வயிற்றுப் பிழைப்புத்தானே.


இந்த விடயங்களை நாகலிங்கம் மிக நுட்பமாகச் சுட்டிக்காட்டினார். நாகலிங்கம் ஒல்லியானவர், அதிக உயரமில்லை. துவாய்த் துண்டைக் கழுத்தில் போட்டுக் கொண்டு அதை அடிக்கடி தூக்கிவிட்டுக் கொண்டார். ஒரு சுருட்டை எடுத்துப்பற்ற வைத்துக்கொண்டு தொடர்ந்தார். "இவங்கள் மக்கள் மக்கள் எனஎத்தனை நாளைக்கு ஏமாத்துறது. 71 ஆம் ஆண்டில் வந்தது அத்தோடு முடிஞ்சு போச்சுதென்று நினைக்காதையுங்கோ. இவன்களால ஒரு விரலைக் கூட முதலாளிக்கெதிராக உயர்த்த முடியாது பாருங்கோ. கொஞ்ச நாளைக்குப் பளபளப்பாக இருக்கும். நீங்கள் யூ.என்பி, யூ.என்.பி என்று சொல்லுறீங்கள். இதென்ன முதல் முறையாகவா வந்திருக்கு. இதற்கு முந்தின டட்லி சேனநாயக்காவின்ர அரசாங்கம் 65இல் வந்தது தானே. அதுவும் தொடக்கத்தில் இப்படித்தான். பசுமைப் புரட்சியென்ன, வெளிநாட்டு மூலதனமென்ன, அதென்ன இதென்ன பராக்கிரமபாகுவென்ன, இந்தா தமிழர்களுடைய பிரச்சினையெல்லாம் தீர்ந்து போச்சுது, இப்படி எத்தனை வண்டவாளங்கள். பிறகு எழுவதில அரசாங்கம் கவிண்டு போன பிறகு தான் அந்த அரசாங்கத்தைப் போல ஒரு புஸ்வாணம் இலங்கைச் சரித்திரத்திலேயே இல்லையெண்டு தெரிஞ்சது. அவங்கட ஆட்சியில உருவான கொந்தளிப்புத்தான் சிறிமாவோ வந்ததும் வெடிச்சுது. அது முதலில் வந்தது பாருங்கோ. இனி வாறது அவ்வளவு லேசானதாக இருக்காது." நாகலிங்கம் சுருட்டை வாயில் வைத்து மூன்று முறை புகையை இழுத்து இழுத்து ஊதிவிட்டுத் தொடர்ந்தார்.

"இதில இருக்கிறவன்கள் முதலாளிகளின்ர ஆட்கள்தான். அவன்கள் என்ன இந்த முதலாளிகள் இல்லாமல் செய்ய வேண்டுமென்கிறதுதானே?"

கொழும்பு வியாபாரி இடைமறித்து "அவன்கள் தமிழருக்கு எதிர்பாருங்கோ."

"எனக்கெல்லாம் தெரியும் பாருங்கோ. என்ர கடைக்கு முன்னுக்கு இருந்து தான் கதைப்பான்கள். எல்லாம் நான் தூக்கி வளர்தததுகள்தான். தமிழன் வந்து கொள்ளையடிக்கிறான். அவனை விரட்ட வேணும் எண்டுதான் சொல்லுவான்கள். நீங்களே பாருங்கோ, இண்டைக்குக் கொழும்பில நகைக்கடைகள், மொத்த விற்பனையாளர் எல்லாம் எங்கட ஆட்கள்தான். அதிலும் இந்த நகைக்கடைக்காரர்கள் அவை இவையெண்டு, அவைகளுக்கு இந்தியாவில் ஒரு கால் இலங்கையில் ஒரு கால். சம்பாதிச்சு என்னத்தைச் செய்யிறது. போய் லட்சம் கோடியெண்டு சீதனம் கொடுத்துத் தங்களின் பிள்ளைகளுக்குக் கலியாணம் பண்ணி வைக்கிறான்கள். அப்ப அவனுக்கு ஆத்திரம் வராமல் என்ன வரும்."

நாகலிங்கம் நிறுத்திவிட்டுப் புகையை இழுத்தார். மேசை மேலிருந்த சரவணன் யன்னல் வழியாக வெளியே பார்த்தான். மழை தொடர்ந்து தூறிக் கொண்டிருந்தது. நேரம் நான்கு மணியாகியிருந்தது. மேல்தளத்தில் யாரும் தென்படவில்லை.




மாணவத் தொண்டர்கள் தேனீரைக் கீழ்த்தளத்திற்குக் கொண்டு செல்வதற்காகத் தயாராகிக் கொண்டிருப்பது சரவணனுக்குத் தெரிந்தது. நாகலிங்கம் தொடர்ந்தார்.

"அது முடியவில்லைப் பாருங்கோ. திரும்பி வரும்."

கொழும்பு வியாபாரி இடைமறித்தார். "ஜே.ஆர்.லேசுப்பட்ட ஆளில்லை. இப்போ வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கெல்லாம் வேலை கிடைக்கப் போகுது. அதுகளுக்குப் பிறகு இந்தப் பிரச்சினைகளெல்லாம் தீர்ந்து போயிடும் பாருங்கோ. இந்த ஆளுக்கு வெளிநாட்டில் நல்ல செல்வாக்கு இருக்கு. கடன்கள் நிறையக் கொடுக்கிறான்கள். யப்பன்காரன் தாங்கள் என்ன வேணுமெண்டாலும் தாறம் எண்டு சொல்லுகிறான்களாமே."

"சும்மா விடுங்கோ. யப்பான்காரன் யப்பான்காரன். உங்களுக்கு உலக அரசியல் அவ்வளவு விளங்குவதில்லைப் பாருங்கோ. மூண்டாவது உலக யுத்தம் வரப்பாக்குது. நாங்கள் கண்மூடித்தனமாக அரசியல் நடத்திக்கொண்டிருந்தமெண்டால் முதல் அணுக்குண்டு இலங்கைக்கு மேலதான்." இப்படி ஒரு குண்டை தூக்கிப்போட்டுவிட்டு நாகலிங்கம் தொடர்ந்தார் "இந்தக் கடன் பாருங்கோ, இந்தக் கப்பலைக் கொண்டு போய் நிற்பாட்டிப்போட்டு இறங்குகிறதுக்கு ஏணியை இறக்கிவிட்டமாதிரி. இந்தக் கடன்களால தான் இறங்கிவாறது. அதுவரும் அது வராமல் விடாது அந்த உயிர்ப்பலி..." நாகலிங்கம் இழுத்தார். "அந்த உயிர்ப்பலி சும்மா விடாது பாருங்கோ. என்ன ஒண்டு இரண்டா பதினையாயிரத்துக்கு மேலே எண்டு சொல்றாங்க. நாங்கள் இந்த நேரத்தில் கவனமாக இருக்கவேணும். இது வரும் என்கிறது இவன்களுக்குத் தெரியும் பாருங்கோ. வெள்ளைக்காரன் செய்தது மாதிரி இவங்களுக்குத் தெரியும் பாருங்கோ. வெள்ளைக்காரன் செய்தது மாதிரி இவங்களும் எங்களை நடுவில தூக்கி வைத்திருக்கப் பார்க்கிறாங்கள். அப்படி வைச்சிக் கொண்டு எங்களுக்கு மேலே ஏவி விடுவான்கள். எத்தனை நாளைக்கெண்டு ஏவி விடுகிறது. நாங்களும் கண்மூடித்தனமாக ஒட்டிக்கொண்டிருந்தால் அது வந்து எங்களையும் சேர்த்து அடிச்சுக்கொண்டு போகும், இல்லாவிட்டால் என்ன இவன்களுக்கு எங்கள் மேல் கரிசனையே இருக்குது?" நாகலிங்கம் கொழும்பு வியாபாரியின் முகத்தைப் பார்த்தார்.

"இவங்களை நாங்கள் எவ்வளவுக்கு நம்பிப் போகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அடுத்து வருகின்றவன்கள் எங்களுக்கு எதிராக நின்று கொண்டு வருவான்கள். தமிழனை ஒழிக்க வேண்டுமெண்டு கூறிக்கொண்டு வருவான்கள்: அதுதான் இலங்கையில் அரசியலாகப் போயிட்டுது. இந்த வத்துகாமத்தில ஐம்பது கடைகளை எரிச்சான்களாம். முன்னுக்கு நிண்டு செய்தது முழுக்க இவங்கடை ஆட்கள்தானாம். எங்கையும் அப்படித்தானாமே. என்னத்தைச் சொன்னாலும் நாங்கள் வேற அவர்கள் வேற. இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்க முன்பே தனிச் சிங்களம் என்று சொன்ன ஆள் பாருங்கோ. இந்த ஜே.ஆர்.பிறகு ஐம்பத்திஆறில பண்டாரநாயக்காவும் செல்வநாயகமும் ஒப்பந்தம் என்று வெளிக்கிட நாட்டைத் தமிழனுக்குக் கொடுத்திட்டான் என்று கொழும்பில் இருந்து கண்டிக்குப் பாதயாத்திரை போன ஆள் பாருங்கோ இந்த ஜே.ஆர்.நல்லா இனிக்கப் பேசுற சொற்கள்தான், நான் இல்லையென்று சொல்லவில்லை. சும்மா இந்தக் கட்சி அரசியல் இருக்குமட்டும் எங்கடை உதவி தேவைப்படுகிறது. அது முடிஞ்ச உடன நீ யாரோ நான் யாரோ."

"எங்கடை ஆட்களும் தானே செய்யினம்" கொழும்பு வியாபாரி குறுக்கிட்டார்.

"எங்கட ஆட்கள் கீழே நின்றுகொண்டு செய்யினம். அவன்கள் மேலே நின்று கொண்டு செய்கிறான்கள். எல்லாரும் சேர்ந்துதான் நாசமாக்கிறான்கள்." நாகலிங்கம் தொடர்ந்தார்.

இந்தக் கட்சி அரசியல் இருக்குமட்டும் அப்படித்தான். பிரிக்க ஏலுமான அளவு பிரிச்சு வெறி ஏத்தி ஒருத்தனை ஒருத்தனோடு மோதவிட்டு எல்லாத்தையும் நாசமாக்கி, கண்டதுகளையும் கிளறிவிட்டு, அதே நேரத்தில் மக்கள் மக்கள் என்று கத்திக் கொள்வான்கள். பிரச்சினைகள் இப்படிக் கிளப்பி விட்டுப் போட்டு யானைதான் பலமான மிருகம்: அதால ஏலாதது ஒன்றுமில்லை, யானைக்குப் போடுங்கள் என்கிறார்கள். எனி கையில்லாம என்ன செய்யப் போறீங்க, கைக்குப் போடுங்க எண்டு அவையள் மற்றப் பக்கத்தால, யானைக்குப் போட்டுப் பார்த்தான்கள். சரிவரவில்லை. பிறகு கைக்கு. இப்படியே பிறகு இந்தா யானைக்கு. மாறி மாறி களைச்சுப்போன சனம் என்ன செய்யும் எத்தனை நாளைக்கெண்டு."

நாகலிங்கம் புகையை இழுத்துவிட்டுக் கொண்டு சுருட்டை வாயில் வைத்துக் கொண்டே தொடர்ந்தார்.

"எத்தனை நாளைக்குச் சனத்தை ஏமாற்றுகிறது? கட்சி மாறி மாறி களைத்துப் போன சனம் எனி போதும் எண்டு சொல்லிக் கொண்டு கட்சிகளுக்கு மேலதான் ஏறும். இப்படிப் பிரிச்சு பிரிச்சு சனத்தை மோத

**"இவங்கள் மக்கள் மக்கள் என எத்தனை நாளைக்கு ஏமாத்துறது. 71 ஆம் ஆண்டில் வந்ததுஅத்தோடு முடிஞ்சு போச்சுதென்று நினைக்காதையுங்கோ. இவன்களால ஒரு விரலைக் கூட முதலாளிக்கெதிராக உயர்த்த முடியாது பாருங்கோ. கொஞ்ச நாளைக்குப் பளபளப்பாக இருக்கும். நீங்கள் யூ.என்பி, யூ.என்.பி என்று சொல்லுறீங்கள். இதென்ன முதல் முறையாகவா வந்திருக்கு. இதற்கு முந்தின டட்லி சேனநாயக்காவின்ர அரசாங்கம் 65இல் வந்தது தானே. அதுவும் தொடக்கத்தில் இப்படித்தான். பசுமைப் புரட்சியென்ன, வெளிநாட்டு மூலதனமென்ன, அதென்ன இதென்ன பராக்கிரமபாகுவென்ன, இந்தா தமிழர்களுடைய பிரச்சினையெல்லாம் தீர்ந்து போச்சுது, இப்படி எத்தனை வண்டவாளங்கள்.**

விடவும் வேணும் அதேநேரத்தில ஒரேயடியாகப் பிரியவும் கூடாது. இருந்திங்கு அடிபட்டுக்கொண்டு குத்துப்பட்டுக்கொண்டு கிடக்க வேணும். இதுதான் இவங்கள் மற்றப் பக்கத்தால எல்லாரும் ஒன்று எல்லாரும் ஒன்று என்று சத்தம் போடுகிறது. அப்பதானே தாங்கள் தான் எல்லாத்துக்கும் ராசா என்று இருக்கலாம்." சற்று நேர அமைதிக்குப்பின் கொழும்பு வியாபாரி கூறினார்.

"கடவுள் பக்தி, கடவுள் பக்தி. அது இல்லாமல் போனதாலதான் இந்தக் கேடெல்லாம்" கொழும்பு வியாபாரி தனது தீர்ப்பை வெளியிட்டார். நாகலிங்கம் சற்றும் நிதானம் இழக்காதவராக.

"சும்மா விடுங்கோ. கடவுள் பக்தி, கடவுள் பக்தி. கடவுள் கடவுள் எண்டு கடவுளையும் கும்பிட்டுக்கொண்டு பாட்டுக்களையும் பாடிக்கொண்டு கோயில்களையும் கட்டிக்கொண்டு அடியும் வாங்கிக்கொண்டு இவங்கட வித்தைகளையும் பார்த்துக்கொண்டு எத்தனை நாளைக்கு இப்படியே சும்மா இருக்கிறது" என்று கூறிவிட்டு கொழும்பு வியாபாரியை உற்று ஒரு பார்வை பார்த்தார். வெண்கலம் ஒலித்தது போல் இருந்தது அவருடைய கூற்று.

"சும்மாவே இருக்கிறம்" என்றார் கொழும்பு வியாபாரி.

"சும்மா இருக்காமல் வேற என்ன செய்யிறம்?"

தனது வாதங்களை மேலும் தொடர விரும்பாதவர்போல் கொழும்பு வியாபாரி கேட்டார்.

"அப்ப இதுகளுக்கு என்ன செய்யலாம் சொல்லுங்கோ"

கொழும்பு வியாபாரி வளத்தில் வந்திருப்பதை உணர்ந்து கொண்ட நாகலிங்கம் அதைக்காட்டிக்கொள்ளாமல் இருப்பதற்கு முகத்தில் எவ்வித அசம்பாவிதங்களும் ஏற்படா வண்ணம் பார்த்துக்கொண்டு

(தொடரும் .....)

# பெண்கள் மீதான வன்முறை

ஒரு நோக்கு

## முறை தவறிய உடலுறவு

சட்டத்தினால் வரையறுக்கப்பட்டவாறு இரத்தத்தினால் அல்லது திருமணத்தினால் நெருக்கமான உறவினைக் கொண்ட நபர்களுக்கு இடையிலான பாலியல் உடலுறவை முறை தவறிய உடலுறவு குறிப்பிடுகின்றது. சட்டபூர்வ தத்தெடுத்தல் தருணங்களிலும் முறை தவறிய உடலுறவு பிரயோகிக்கப்படுகின்றது. மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு குடும்ப உறவே முக்கியமானதாகும்.

## எது முறை தவறிய உடலுறவில் அடங்குகின்றது?

சட்டத்தின் பிரகாரம், பின்வரும் ஏதாவது வழிகளில் உறவைக் கொண்டுள்ள இன்னொரு நபருடன் பாலியல் உடலுறவை நபர் ஒருவர் கொண்டுள்ள சூழ்நிலைகளில் முறை தவறிய உடலுறவு வரையறுக்கப்படுகின்றது:

குற்றத்தை இழைப்பவரும், பாதிக்கப்பட்டவரும் இன்னொருவரிலிருந்து நேரடியான வழித்தோன்றல் (அதாவது தந்தை/மகள்).

சுவீகாரப் பெற்றோராக, சுவீகாரத் தாத்தாவாக குற்றமிழைப்பவர் விளங்குவதுடன், பாதிக்கப்பட்டவர் சுவீகாரப் பிள்ளையாக, சுவீகாரப் பேரப்பிள்ளையாக இருத்தல்.

ஆணின் கூடப்பிறந்த சகோதரியாக அல்லது ஒன்றுவிட்ட சகோதரியாக அல்லது சுவீகாரத்தின் மூலம் சகோதரியாக பாதிக்கப்பட்டுள்ள பெண் இருத்தல்.

அவர்களில் யாராவது ஒருவரில் இருந்து வழித்தோன்றலொன்றான பெண்

பெண்ணின் கூடப்பிறந்த அல்லது ஒன்றுவிட்ட அல்லது சுவீகாரத்தினால் சகோதரரான ஆண்

கூடப்பிறந்த அல்லது ஒன்று விட்ட அல்லது சுவீகாரத்தினால் அல்லது இருவரில் ஒருவரிலிருந்து வழித்தோன்றலான பாதிக்கப்பட்டவரின் சகோதரரின் அல்லது சகோதரியின் (அதாவது பெறாமகன்/மருமகன்) மகனான ஆண்.

இன்னொரு தாயின் மூலம் தனது கணவரின் மகனான ஆண் (அதாவது கணவரின் மகன்)

தனது இறந்த மகளின் அல்லது பேத்தியின் அல்லது தாயின் அல்லது பாட்டியின் கணவரின் மகனான ஆண்.

## முறை தவறிய உடலுறவை மீட்டு முறையிடுதல்

அங்கீகாரம் பெற்ற மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரிமிருந்து விரைவிலேயே மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ளுங்கள். ஏதாவது தலைமயிர், உடல் திரவங்கள், தசைநார்கள் மற்றும் வேறு சான்று இருந்தால், அவற்றைச் சேகரிப்பதற்கான கடமையொன்றை மருத்துவ உத்தியோகத்தர் கொண்டுள்ளார். ஏதாவது பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் இருந்தால் சட்ட மருத்துவ உத்தியோகத்தருக்கும், பொலிசுக்கும் அறிவிப்பதற்கான கடமையொன்றை மருத்துவ உத்தியோகத்தர் கொண்டுள்ளார்.

அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்யுங்கள்.

பாதிக்கப்பட்ட, தப்பிப்பிழைத்தவர் 18 வயதுக்கு குறைந்தவர் என்றால், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு (தொடர்பு) சம்பவம் முறையிடப்பட வேண்டும்.

பொலிஸ் முறைப்பாடொன்றைச் செய்வதற்குமுன், பொலிஸ் நிலையத்தில் பெண்கள், சிறுவர் பிரிவொன்று (தொடர்பு) இன்னதா என விசாரியுங்கள் அல்லது ஆண் கான்ஸ்டபிள் ஒருவருக்குப் பதிலாக பெண் கான்ஸ்டபிள் ஒருவருடன் பேசுவதற்கு விரும்பினால் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைக் கேளுங்கள். சம்பவத்தின் சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

வாக்குமூலத்தில் கைச்சாத்திடுவதற்கு முன் அதை வாசிப்பதை உறுதி செய்யுங்கள்.

வாக்குமூலமொன்றைப் பெறுவதற்கு மேலதிகமாக, உடலிரீதியான சான்றினைப் பொலிசார் சேகரிப்பதுடன், யாரேனும் சாட்சிகள் இருந்தால் அவர்களுடனும் பேசுவார்கள்.

உங்கள் விடயத்தின் சூழ்நிலைகளைப் பொறுத்து, அதிகளவு மணித்தியாலங்களை பொலிசாரின் விசாரணை எடுக்கும். சில கேள்விகள் எல்லை மீறுவதாக இருக்கும் என்பதுடன், உங்கள் மீதான தாக்குதல் பற்றிய விபரங்களை அந்த உத்தியோகத்தர்கள் பல தடவைகள் விசாரிப்பார்கள். குற்றமிழைத்தவருக்கு எதிரான மிகப் பலமான சாத்தியத்திலான வழக்கை தாக்கல் செய்வதற்காக துல்லியமாக ஒவ்வொரு விபரத்தையும் பெறுவதற்கான அவசியம் இருப்பதனால், விரிவான விதத்தில் விசாரணை இடம்பெற்றாலும், அது அனேகமாக நியாயப்படுத்தப்படுகின்றது.

இது சாத்தியமான விரைவில் உங்களால் நினைவில் வைத்திருக்கக் கூடிய ஒவ்வொரு விபரத்தையும் எழுதுவதற்கு உதவுகின்றது. இதனால் நீங்கள் விபரங்களைப் பொலிசாருக்கு பரிமாறிக் கொள்ளலாம்.

முறைபிடும் நடை முறையின் ஊடாக சில தாபனங்கள் ஆதரவை வழங்குகின்றன. உங்கள் சந்தேகங்களையும், கேள்விகளையும் அவை தெளிவுபடுத்தும். சேவை வழங்குநர்கள் சென்று. சட்டங்கள் சென்று.

## முறை தவறிய உடலுறவு மீதான சட்டம்

முறைதவறிய உறவு மீதான சட்டம் 1995ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க குற்றவியல் சட்டக்கோவையின் (திருத்தம்) பிரிவு 364 'அ' இல் காணப்படுகின்றது. ஏதாவது பின்வரும் வழிகளில் இன்னொரு நபருடன் பாலியல் உடலுறவை நபர் ஒருவர் கொண்டிருந்தால், அது முறை தவறிய உறவை அடக்கியிருக்கும்:

குற்றத்தை இழைப்பவரும், பாதிக்கப்பட்டவரும் இன்னொருவரிலிருந்து நேரடியான வழித்தோன்றல் (அதாவது தந்தை/மகள்).

சுவீகாரப் பெற்றோராக, சுவீகாரத் தாத்தாவாக குற்றமிழைப்பவர் விளங்குவதுடன், பாதிக்கப்பட்டவர் சுவீகாரப் பிள்ளையாக, சுவீகாரப் பேரப்பிள்ளையாக இருத்தல்.

ஆணின் கூடப்பிறந்த சகோதரியாக அல்லது ஒன்றுவிட்ட சகோதரியாக அல்லது சுவீகாரத்தின் மூலம் சகோதரியாக பாதிக்கப்பட்டுள்ள பெண் இருத்தல்.

அவர்களில் யாராவது ஒருவரில் இருந்து வழித்தோன்றலொன்றான பெண்

பெண்ணின் கூடப்பிறந்த அல்லது ஒன்றுவிட்ட அல்லது சுவீகாரத்தினால் சகோதரரான ஆண்

கூடப்பிறந்த அல்லது ஒன்று விட்ட அல்லது சுவீகாரத்தினால் அல்லது இருவரில் ஒருவரிலிருந்து வழிந்தோன்றலான பாதிக்கப்பட்டவரின் சகோதரரின் அல்லது சகோதரியின் (அதாவது பெறாமகன்/மருமகன்) மகனான ஆண்.

இன்னொரு தாயின் மூலம் தனது கணவரின் மகனான ஆண் (அதாவது கணவரின் மகன்)

தனது இறந்த மகளின் அல்லது பேத்தியின் அல்லது தாயின் அல்லது பாட்டியின் கணவரின் மகனான ஆண்.

குற்றத்தை இழைப்பவரும், பாதிக்கப்பட்டவரும் இன்னொருவரிலிருந்து நேரடியான வழித்தோன்றல் (அதாவது தந்தை/மகள்).

சுவீகாரப் பெற்றோராக, சுவீகாரத் தாத்தாவாக குற்றமிழைப்பவர் விளங்குவதுடன், பாதிக்கப்பட்டவர் சுவீகாரப் பிள்ளையாக, சுவீகாரப் பேரப்பிள்ளையாக இருத்தல்.

ஆணின் கூடப்பிறந்த சகோதரியாக அல்லது ஒன்றுவிட்ட சகோதரியாக அல்லது சுவீகாரத்தின் மூலம் சகோதரியாக பாதிக்கப்பட்டுள்ள பெண் இருத்தல்.

அவர்களில் யாராவது ஒருவரில் இருந்து வழித்தோன்றலொன்றான பெண்

பெண்ணின் கூடப்பிறந்த அல்லது ஒன்றுவிட்ட அல்லது சுவீகாரத்தினால் சகோதரரான ஆண்

கூடப்பிறந்த அல்லது ஒன்று விட்ட அல்லது சுவீகாரத்தினால் அல்லது இருவரில் ஒருவரிலிருந்து வழிந்தோன்றலான பாதிக்கப்பட்டவரின் சகோதரரின் அல்லது சகோதரியின் (அதாவது பெறாமகன்/மருமகன்) மகனான ஆண்.

இன்னொரு தாயின் மூலம் தனது கணவரின் மகனான ஆண் (அதாவது கணவரின் மகன்)

தனது இறந்த மகளின் அல்லது பேத்தியின் அல்லது தாயின் அல்லது பாட்டியின் கணவரின் மகனான ஆண்.

## முறை தவறிய உடலுறவுக்கான தண்டனை

முறை தவறிய உடலுறவுக்கு குறைந்தபட்சம் ஏழு (7) வருடக் கடூழியச் சிறைத்தண்டனை என்பதோடு அது 20 வருடங்களுக்கு நீடிக்கப்படலாம்.

இளவயதுத் திருமணம் பெண்பிள்ளைகளின் அடிப்படை உரிமைகளின் மீறலொன்றாகும். இது இப் பிள்ளைகள் மீது அவை அளவுக்கதிகமானதும் அத்துடன் உணர்வு ரீதியிலானதுமான தாக்கங்களைக் கொண்டிருக்க முடியும். அனேகமாக இளவயதுத் திருமணத்திற்கு இலங்கை பிரபலமாக உள்ள அதேவேளை, பல் எண்ணிக்கையிலான காரணிகளின் நிமித்தம் சில பகுதிகளில் இத்தகைய சம்பவங்களின் சான்று வெளிப்படுகின்றது. இத்தகைய பாலியல் துஷ்பிரயோகத்துடனும், சுரண்டலுடனும் முகங்கொடுக்கப்படும் போது பொருத்தமானதும், போதியளவிலானதுமான ஆதரவைப் பிள்ளைகள் பெறுவதை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பொன்றை நாம் கொண்டுள்ளோம்.


ஹரினி அமரசூரிய

முறை தவறிய உடலுறவுக்காக முயற்சித்தலுக்கு இரண்டு (2) வருடங்கள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படுகின்றது.

## முறை தவறிய உடலுறவு மீதான சட்ட எல்லைகள்

இலங்கையில், முறை தவறிய உடலுறவின் பரப்பெல்லைக்குள் உடலுறவு நடவடிக்கை மட்டுமே உள்வருகிறது. இந்த உறவுகள் முறையிலான யாரேனும் நபர்களிலான ஏனைய வடிவிலான பாலியல் துஷ்பிரயோகங்களுக்கான உதாரணங்கள்:

*பாலியல் ரீதியிலாகத் தொடுதல்
*வாய்மொழி மூலமாகத் தூண்டுதல் அல்லது துஷ்பிரயோகம்
*உடல் தூண்டுதல்கள்
*பொருத்தமற்ற நெருக்கம்
*பிள்ளையொன்றின் பாலுறுப்புக்களைக் கிளர்ச்சியுற வைத்தல் அல்லது தொடுதல்.
*சிறுவர்கள் குளிக்கும் போது அல்லது உடை மாற்றும் போது உள்ளே செல்லுதல்.


இவை முறை தவறிய உடலுறவுக் குற்றத்தின் கீழ் வரமாட்டா. இத்தகைய செயல்கள் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகங்கள் அல்லது பாலியல் ரீதியான தொந்தரவுகள் ஆகிய சட்டங்களின் கீழ் தண்டிக்கப்படக் கூடியவை.

வழக்கொன்றைத் தொடர்வதற்கு சட்டமா அதிபரின் எழுத்து மூலமான சம்மதம் பெறப்படல் வேண்டும். இந்த ஏற்பாடு வேறு தெரிவுகள் (உதாரணம்: ஆற்றுப்படுத்துதல், தற்காலிகமாக பாதுகாப்பான இடமொன்றுக்கு அகற்றுதல்) ஆராயப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாகக் கருதப்படுவதுடன், வழக்கைத் தொடர்வதில் ஒரு கவனமான வழக்குசார்ந்த மதிப்பீட்டையும் பின்தொடர்கின்றன.

நம்பிக்கை கொள்வதற்கான, முழு ஆளாக விளங்குவதற்கான இயலாமை, பயப்பிராந்தி, மற்றும் நெருங்கிய உறவைமீதே அச்சம் ஆகியனவே துஷ்பிரயோகத்திலிருந்து எழக்கூடிய உணர்வுபூர்வமான பிரச்சனைகளில் சிலவாகும்.

தொடரும்

பாலியல் வல்லுறவை 1995 இன் தண்டனைச் சட்டக் கோவையின் திருத்தம் மீள்வடிவமைத்திருந்த போதிலும், பாதிக்கப்பட்ட, தப்பிப்பிழைத்தவரின் வாக்குமூலத்தை உறுதிப்படுத்துவது அவசியம் என சில நீதிமன்றங்கள் தொடர்ந்துமே அனுமானிக்கின்றன. எனவே, பாதிக்கப்பட்ட, தப்பிப்பிழைத்தவரின் உறுதிப்படுத்தப்படாத சாட்சியம் மீது பாலியல் வல்லுறவு மீதான குற்றத்தீர்ப்புக்கள் செல்லுபடியாக்கலாம் என்பது சட்டத் திருத்தங்களினால் தெளிவாக ஒன்றிணைக்கப்பட வேண்டும் என சுட்டிச் சொல்லப்படுகின்றது.


சாவித்திரி குணசேகர

# தன்வினை

## (தொடர்கதை - 8)

காந்தி

கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர். அது நாங்கள் தீர்மானிக்கிறது இல்லை. சொர்க் கத்தில நிச்சயிக்கப்படுவது. ஏதோ அந்தப் பருவம் வரேக்க பார்ப் பம் எண்டு கந்தப்பர் மேலும் தொடர்ந்தார். அதற்குள் அங்குஇரண்டு மோட்டார் சைக்கிள்கள் வந்து நின்றன.அதில்மூன்று ஆண்களும், ஓர் பெண்ணும் வந்து இறங்கினர். வந்து இறங்கி சற்று நேரத்தில் இன்னுமொரு மோட்டார் சைக் கிளில் இன்னும் இரு ஆண்கள் வந்திறங்கினர். மம்மல் இருட்டு என்பதால் அங்கு வந்தவர்களில் ஒருவர் இன்ஸ்பெக்ரர் காதுக்குள் ஏதோ சொன்னார். சரி சரி எனக் கூறிவிட்டு அதில் ஓர் ஆணையும் பெண்ணையும் ஜீப்பில் ஏறச் சொன்னார்கள். வெளிச்சமற்று ஒளிச்சு நின்ற அந்த வாகனத்தில் பயந்து பயந்து அவர்கள் இருவரும் ஏறினார்கள்.

மறுகணம் பொலிஸ்ரேசனை நோக்கி சிட்டாக பறந்தது. பொலிஸ் வாகனத்துக்கு பின்னால் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் பின் தொடர்நதன. ஆனாலும் மிக விரைவாக பொலிஸ்ரேசனுக்கு அனைவரும் வந்து சேர்ந்தனர். வந்து இறங்கியதும் வெளிச்சத் தில் பார்த்தனர். கந்தப்பர் மிகவும் ஆவலாக அந்த முகங்களைப் பார்த்தார். அதற்குள் மின்சாரம் திடீரென நிற்க பொலிஸ்காரர் தனது கையில் இருந்த ரோச லைட்டில் வெளிச்சத்தைப் பிடித்து பிள்ளை உன்ர பெயர் என்ன எனக் கேட்டார். அந்த பெண் மௌன மாக இருந்தாள். அடுத்து தம்பி உன்ர பெயர் என்ன என பையனைக்க கதை கேட்க கேசவன் என்று அந்தப் பதில் வந்தது. உனக்கு என்ன வயது எனக் கேட்க இருபத்துஒன்று என்ற பதில் சற்றும் பயமின்றி வந்தது. எந்த ஊர் எனக் கேட்க நான் முருகேசு மாஸ்ரர் வீட்டு ஒழுங்கைக்கு பக் கத்து தெருவில இருக்கிறனான் எண்டு பதில் வந்தது. அப்ப நீர கூட்டியந்த பொண்ணு யார்? எனக் கேட்க பொடியன் மௌனமாக இருந்தான். அவாவோட பெயர் என்ன என பொலிஸ்காரர் கேட்க அதற்கும் மௌனமாக இருந்தான். அந்தப் பொண்ணு எந்த ஊர் என்ற கேள்விக்கு மீண்டும் மௌனமே பதிலாக இருந்தது. ரோச்சைப் பிடித்து பெடியனுக்கு இரண்டு சாத்து சாத்தி கேட்கோணும்போல கந்தப்பரின் மனம் துடித்தது. ஆனால் அது பொலிஸ்ரேசன். அவ ருடைய மனத்துடிப்பை புரிந்து கொண்ட பொலிஸ்காரர் பொடிய னுக்கு இரண்டு அடிபோட்டால் ஐயோ அம்மா என்று கத்தியபடி ஐயோ சேர் அடியாதைங்க நான் உண்மையை சொல்லுறன். அதற் குள் நின்று போயிருந்த கரண்ட் வர வெளிச்சம் வந்தது. வெளிச் சத்தோடு வெளிச்சமாய் கந்தப்பண் ணையின் தேடலுக்கும் வெளிச்சம் வரவே தன்மகள் என்பதைக் கண்டவுடன் கந்தப்பர் ஓடோடிச் சென்று மகளைப் பிடித்து தனது துன்பத்தைச் சொல்லி அழுதார். ஆனால் அவள் கல்லாய் நின்றிருந் தாள். தன்னோடு வருமாறு அவர் பிடித்து இழுத்தார். ஆனால் அவள் மறுத்துவிட்டாள். தான் உங்களோடு வருவதைவிட நான் தற்கொலை செய்வது மேலானது என்றாள். அவரைப் பிரிந்து என்னால் ஒரு நிமிடம் கூட இருக்க முடியாது. அப்பிடி நீங்க கூட்டிக்கிட்டு போனா நான் கட்டாயம் சாவன் எனக் கத்தி னாள்.


கந்தப்பண்ணையும் பதிலுக்கு நீ அவனோட போனா உன்ர தங் கச்சிமாரோட நானும் சாகப்போறன் பரவாயில்லையா இதுதான் உன் கடைசி முடிவா எனக் கேட்க, ஆமா நான் அவனோடதான் போகப் போறன். நீங்க செத்தா எனக்கென்ன என மிகவும் துடுக்குத்தனமாகக் கேட்டாள்.

காதல் கண்ணை மறைக்கும் என்ற உண்மை ஒருபுறமிருக்க கந்தப்பர் கொம்மா நீ வெளிக்கிட் டதில இருந்து கொஞ்சமும் கண் ணுக்கு ஓயாம அன்னம் தண்ணி இல்லாம அழுது கொண்டிருக்கி றாள். அதுக்காண்டியாவதும் இப்ப நீ வாபுள்ள உன்னுடைய காலில விழுந்து கெஞ்சிக் கேட்கிறன். தயவுசெய்து வா என அவர் மிகவும் இரக்கமாகக் கேட்டார். ஆனால் அவரது மகள் “பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்பது போல” கல் மனம் படைத் தவளாய் இரக்கமின்றி அவாவை யார் அழச்சொன்னது. நான் சாகவா ஓடிப்போனான் சந்தோசமாய் வாழத் தானே ஓடிப் போனேன் என மறுத் துக் கூறினாள். அதற்குள் பொலிஸ் காரன் வந்து ஐயா நீங்க கொஞ்ச நேரம் வெளியால இருங்க நான் கதைக்கிறன் எனக் கந்தப்பரை வெளியால அனுப்பிவிட்டு, மாஸ் ரரை மட்டும் மறித்து வைத்துக் கொண்டு கந்தப்பரின் மகளோடு கதைக்க ஆரம்பித்தார்.

பிள்ளை இஞ்சவா நீ 16 வயசு பிள்ளை 18 வயசுக்கு மேலதான் சட்டப்படி திருமணம் செய்யலாம். அதுவரைக்கும் நீ யாரை நம்பி போறாய். 16 வருசம் வளர்த்த பெற்றாரையே நீ ஏமாத்திட்டு போறாய் எண்டா உன்னை இந்த இரண்டு வருசத்தில இவன் ஏமாத்தினா என்ன செய்வாய். ஊர் உலகத்தில எத்தனை பிள்ளையள் இப்ப நடுத்தெருவில நிக்குதுகள். ஏன் எண்டா சட்டப்படி பதிவு செய்யாம தாலியைக் கட்டி குடும் பம் நடத்தி கருத்துமுரண்பாட்டால பிரிஞ்சு, அல்லது அவன் வேற பொட்டையை தேடிப்போய் பிரிஞ்சு சென்றா சட்டப்படி எந்த நடவடிக் கையும் செய்ய இயலாது. இதை நீ புரிய வேணும். இதைவிட நாங்க சட்டப்படி கேஸ் பைல் பண்ணினா நீ இரண்டு வருசம் சிறுவர் சீர்திருத்த பள்ளியிலும் பாலியல் சிறுவர் துஸ்பிரயோகத் துக்குகாண்டி உன்ன கூட்டிப் போனவர் இரண்டு வருசம் கடூ ழிய சிறைத்தண்டனையும் அனுப விக்க வேணும். இது உனக்கு விருப்பம் என்றா நீ விரும்பி னவரோடதான் சேர்வன் எண்டு போய் பொலிஸ்ரேசன் சிறையில இரு. இல்லை எண்டா இப்பவே கொப்பரோட போ என இன்ஸ்பெக்ரர் கூற முருகேசு மாஸ்ரரும் ஓம் புள்ளை நீ யோசிச் சுச் செய் நீ எடுக்கிற முடிவில கொப்பா கொம்மான்ர மானம் மட்டுமல்ல பள்ளிக்கூட மானமும் தங்கி இருக்குது. நாளைக்கு இது கள் பேப்பரில வந்தா எல்லாற்ற மானமும் கப்பலேறிடும். நீ கொஞ் சம் யோசி. இரண்டு வருசத்தால நான் ஒருமாதிரி கொப்பரை சம்ம திக்க வைக்கிறன். இப்ப நீ கொப் பரோட போ என சமாதானம் கூறினார்.

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பதுபோல அவளது மனதில் சற்று அசைவு தென்பட்டது. அதற்குள் அந்த பொடிப்பயல் ஏதோ சைகையைச் செய்ய அவள் மீண்டும் மறுத்தாள். உடனே பொலிஸ்காரன் அவனை மிரட்டுவதற்காய் தம்பி பொலிஸ் நினைச்சா உன்னை வெளியில வரா தபடி எத்தின கேசும் போடலாம் அது முக்கியமில்ல. அந்த புள்ள படிச்சு நல்ல நிலைக்கு வந்தா நாளைக்கு அது அரசாங்க உத்தி யோகம் பார்த்தா அதுக்கப்புறமும் உன்னை விரும்பிச் செய்தா உன் குடும்பம் சந்தோசமாய் இருக்கும். இதை நீயா புரி, இல்லை நான் லாடன்கட்டித்தான் உனக்குப் புரிய வைக்க வேணும் எண்டாலும் புரிய வைக்கலாம். சட்டப்படி உன்னைத் தண்டிக்க எனக்கு உரிமை இரு க்கு ஏனண்டா நீ 16 வயது பிள்ளையை கடத்தி இருக்கிறாய். அவளே விருப்பப்பட்டு வந்தாலும் நீ கூட்டிக்கிட்டு போனது துஸ்பிர யோகசெயல் என இன்ஸ்பெக்ரர் கூற, சரி சரி நீர் அப்பாவோட போம் என பொடியன் வழி யனுப்ப கந்தப்பரோடு பெட்டை புறப்பட்டு வீட்டுக்குச் சென்றது. இன்ஸ்பெக்ரரும் பொலிஸ்காரரும் பொடியனுக்கு புத்திமதி சொல்லிப் பார்த்தார்கள். சரிவரவில்லை

(தொடரும் .....)


No-05, NC Road, Trincomalee.
TP- 026 2222298, Fax- 0262221179.
www.jewellanka.8m.com


(07 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# திருமலையில் தமிழ் ...

இந்தவகையில் ஏனைய நிலச் சொந்தக்காரர்களான திருகோண மலை தமிழர்கள் மறைமுகமாக ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்.

தபக.இயக்கத்திற்கு நிலங்களை குறைந்த விலையில் விற்கத் தயாரில்லாதவர்களும், தமது நிலங்களை விற்பனை செய்ய விரும்பாதவர்களும் த.ப.க.இயக்கத்தின் மீது நம்பிக்கை கொள்ளாதவர்களும் மேற்படி வாக்குறுதி மீது நம்பிக்கை கொண்டனர், அல்லது நம்ப வைக்கப்பட்டனர், இந்த நம்பிக்கையின் அடிப்படையில் நிலச் சொந்தக்காரர்கள் தமது நிலங்களை தபக.இயக்கத்திற்கு வழங்க முன்வந்தனர். எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது தாம் ஏமாற்றப்படுவோமென அவர்கள் அறிந்திருந்தால் தமது நிலங்களை ஒருபோதும் த.ப.க.இயக்கத்திற்கு வழங்க முன்வந்திருக்கமாட்டார்கள்.

இவ்விதமாக கொள்வனவு செய்யப்பட்ட நகர்ப்புற உள்துறைமுக வீதி 5 ஏக்கர் நிலத்தில் 1959 சித்திரைத் திங்கள் 27ஆம் நாள் (10-05-1959) சுபமுகூர்த்தத்தில் வடபுலத்தை பாரம்பரியமாகக் கொண்ட கொழும்பு வாழ் உயர் மட்ட தமிழர்கள் புடைசூழ தமிழரசுக் கட்சி தலைவர்களின் கனல் பறந்த வீரவசனங்களுக்கு மத்தியில திருகோணமலை தமிழர்களின் மகிழ்ச்சி ஆரவாரம் வானைப்பிளக்க தமிழ் பல்கலைக்கழகத்திற்கான கல்நாட்டு விழா மிகக் கோலாகலமாக நடந்தேறியது. இவ்விழாவில் உரையாற்றிய த.ப.க.இயக்கத்தின் பிரதானிகள், தமிழ் பல்கலைக்கழகத்தின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிடுகையில் 1918 ஜுலை 24ம் திகதி இஸ்ரேல் நட்டின் ஹிப்ருஸ் பல்கலைக்கழகத்துக்கு அடிக்கல் நாட்டிய டாக்டர் செயின் வீஸ்மன் வெளிப்படுத்திய கருத்தினை முன்னுதாரணமாக எடுத்துக்கூறி அங்கு திரண்டிருந்த மக்களை உற்சாகப் படுத்தினர். "சுதந்திரமாகச் செயல்படும் வாய்ப்பும் யூதர்களின் விழிப்புணர்வை பெருக்குவதற்கு ஒரு பல்கலைக்கழகமும் இருந்தால் எம்முடைய முக்கிய தேவைகளை முற்றாகப் பெறத்தக்க நிலையை நாம் அடைவோம் இதனை யூதர்களாகிய நாம் அறிவோம்" என்ற செயின் வீஸ்மனின் கருத்தை மேற்கோள்காட்டி அவின் வழிகாட்டலில் அறிவியல், கலாச்சார வேட்கைகளை நிறைவேற்றும் ஒப்புயர்வற்ற மத்திய நிலையமாக தமிழ் பல்கலைக்கழகம் ஒன்றின் தேவையை நாம் உணர்கின்றோம். தமிழ் பல்கலைக்கழக கால்கோள் விழா இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் தங்களிடத்தில் தாமே கொண்டுள்ள நம்பிக்கையைக் காட்டும் பெருஞ்செயலாகும். தமிழ் மக்கள் இவ் அரும் பெரும் பணியை செய்வதற்கு முன்வந்தமை ஒன்றுபட்டு உறுதிபூண்டலின மக்கள் தாங்களே தங்களுக்கு ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவ முடியும் என்பதை மெய்ப்பிக்கிறது, என தமிழ் மக்களுக்கு இடித்துரைத்தனர். இக் கருத்தியலான த.ப.க இயக்கம் மீதான அற்ப சொற்ப அவநம்பிக்கைகளையும் முற்றாகத் துடைத்தெறிந்தது.

தமிழ் பல்கலைக்கழக இயக்கத்தினர் கட்டிமுடிக்க திட்டமிட்டிருந்த தமிழ் பல்கலைக்கழகத்தின் தோற்றமானது பின்வருமாறு அமையுமென தெரிவிக்கப்பட்டது. பரந்த புற்றரைகளில் நீரூற்றுகள், முற்றங்கள், உருவச்சிலைகள் கொண்ட ஒரு மத்திய உள்ளீடு, மரங்களும் தூண்களும் நிறைந்த சாலை, உள்துறைமுக வீதியுடன் இணையும் உள்ளீட்டைச் சுற்றி கலை, விஞ்ஞானம், இயந்திரவியல், ஆகிய துறைகளுக்கான கட்டிடங்கள், சபாமண்டபம், நிர்வாகக் கட்டிடம், நூல்நிலையம், சிற்றுாண்டிச்சாலை, என்பன. முற்றத்தின் முற்பகுதியில் பரிசோதனைச்சாலைகள், கலைக்கூடங்கள், துணை அறைகள் ஆகியன ஓர் அடித்தளத்தை கொண்டனவாகவும் இலகுவில் நடந்து செல்லக்கூடியவையாகவும் அமையும். இக்கட்டிடத் தொகுதி சூரியவெளிச்சத்தையும், கடற்காற்றையும் பெறத்தக்க கடற்பரப்பை நோக்கியதாக அமையும் எனத் தமிழ் பல்கலைக்கழக கட்டிட அமைப்பு தொடர்பாக வெளியிடப்பட்ட கைநூலில் தமிழ் பல்கலைக் கழக இயக்கத்தினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ் பல்கலைக்கழக இயக்கம் மீதாகவும் அதன் இலக்கான தமிழ்ப் பல்கலைக்கழகம் கட்டப்படுவது தொடர்பாகவும் இலங்கை வாழ் தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையானது மேற்படி அமைப்பின் தேவைக்கும் அதிகமான நிதியை மேலும் மேலும் வாரிவழங்க தமிழ் மக்களை ஊக்குவித்தது. ஆனால் மிகக்குறுகிய காலத்துள் இலங்கை வாழ் தமிழ் மக்கள் தமிழ் பல்கலைக்கழக இயக்கத்தினரால் ஏமாற்றப்பட்டமையே வரலாறாகியது. சிங்கள பேரினவாதத்துடன் போட்டி போட்டு தமிழ் தேசிய பிழைப்புவாத அரசியல் சக்திகளாலும் தமிழ் பாமரமக்கள் ஏமாற்றப்படுவது தொடர்வரலாறாகி வருகிறது என்பதே உண்மையாகும்.

1959இல் தமிழ் பல்கலைக் கழகத்துக்கான கல் நாட்டு விழா தொடர்பாக த.ப.க இயக்கத்தினரால் வெளமிடப்பட்ட துண்டுபிரசுரத்தின் பிரதி.

1961 சித்திரைத் திங்களில் தமிழ் பல்கலைக்கழகத்தின் முதலாவது க்ல்வி ஆண்டு ஆரம்பமாகும் என த.ப.க.இயக்கத்தினரால் அறிவிக்கப்பட்டது. 1959க்கும் 1961க்கும் இடைப்பட்ட 3 வருட காலம் தமிழ் பல்கலைக்கழகத்திற்க்கான கட்டிடப்பணிகள் தெட்டுக்கூடப் பார்க்கப்படாமலே கழிந்தது. சுருக்கமாகச் சொல்வதானால், இந்த மூன்று வருடகால இடைவெளியில் தமிழ் பலகலைக்கழக கட்டிட நிர்மாணத்திற்காக நாட்டப்பட்ட அடிக்கல்லின் தடயமே அழிந்து போமிருக்கக் காணப்பட்டது.

1966ல் அதிகாரத்தில் இருந்த ஐ.தே.க தலைமையிலான தேசிய அரசு உயர் கல்விச் சட்டம் ஒன்றினை நிறைவேற்றியது. இச்சட்டமானது, தனியார் பல்கலைக்கழகங்களை தடை செய்தது. தமிழ் பல்கலைக்கழக நிர்மாணத்திற்கான கலநாட்டு விழா இடம்பெற்ற 1959க்கும்,1966க்கும் இடைப்பட்ட 8வருட காலம் தமிழ் பல்கலைக் கழக நிர்மாணம் தொடர்பாக எதுவித அக்கறையும் கொண்டிராதவர்களகன தமிழ் பல்கலைக் கழகத்தினர் மேற்படி சட்டமூலத்தை சாட்டாகக் கொண்டு தமிழ் பலகலைக்கழக திட்டத்தை கைவிட்டனர்.

தமிழ் பல்கலைக்கழக நிர்மாணம் நடைபெறப்போவதில்லை என்பது நிட்சயமானதும் பேராசிரியர்களான A.W.மயில்வாகனம், A.சின்னத்தம்பி ஆகிய இருவரும் தமிழ் பல்கலைக்கழகம் என்ற நன்நோக்கில் ஒரு வகை தியாகமாக ஆகக்குறைந்த விலையில் தமது நிலங்களை தபக.இயக்கத்திற்கு வழங்கி ஒத்தாசை புரிந்த திருக்கோணமலை பூர்வீகக் குடி மக்களின் நிலங்களை, அவர்களுக்கு கொடுத்த வாக்குறுதிக்கிணங்க மீளவும் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என வாதிட்டனர். அவர்களின் நியாயமான வாதத்தை தபக இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களில் ஒரு பிரிவினர் ஏற்கமறுத்தனர். இதனையடுத்து தமிழர் தாயகத்தின் மத்திய பிரதேசமான திருக்கோணமலையில் தமிழ் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவி தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை உறுதிசெய்திட இதயபூர்வமாக உழைத்த பேராசிரியர்கள் இருவரும் தபக. இயக்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இவ்விடயத்தில் முன்னணி வகித்தவர் த.ப.க. இயக்கத்தின் திருக் கோணமலை பிரதேச பிரதிநிதியும், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர்களில்,

இங்கு முக்கியமாக கவனிக்கத்தக்க விடயம் என்னவெனில் 1966ன் உயர்கல்வி திருத்த சட்ட மூலத்திற்கு காரணமான ஐ.தே.க தலைமையிலான தேசிய அரசின் பங்காளிக் கட்சியாக தமிழரசுக் கட்சியும், அ.இ. தமிழ் காங்கிரஸ் கட்சியும் அங்கம் வகித்தமையாகும். தமிழரசுக் கட்சி சார்பாக தேசிய அரசில் அமைச்சராக பதவி வகித்தவர் மு.திருச்செல்வமாகும், அ.இ. தமிழ் காங்கிரஸ் கார்பாக மு.சிவசிதம்பரம் உபசபா நாயகராக பதவி ஏற்றிருந்தார். இந்த வகையில் உயர் கல்வி சட்டமூலத்தில் தமிழரசுக் கட்சியும், அ.இ தமிழ் காங்கிரஸ் கட்சியினரும் பங்காளிகளாவர். அன்றைய காலகட்டத்தில் தனியார் பல்கலைக்கழக நிறுவனமாக தபக இயக்கம் தவிர்ந்த வேறு தனியார் பல்கலைக்கழக நிறுவனங்கள் எவையும் தோற்றம் பெற்றிருந்ததற்கான சான்றுகள் எவையும் இருந்ததாகத் தெரியவில்லை. இந்த நிலையில் மேற்படி சட்ட மூலத்தின் நேரடித் தாக்கம் தமிழ் பல்கலைக் கழக இயக்கத்தை நோக்கியதாகவே காணப்பட்டது. இவ்விதமான சூழலில் தமிழரசுக் கட்சி ஐ.தே.க. தலைமையிலான தேசிய அரசுக்கான தனது ஆதரவை தெடர்ந்ததானது அதன் சுத்துமாத்து அரசியலுக்கு உறுதியான சாட்சியமாகும். மறுபுறமாக எட்டு வருட காலமாக தமிழ் பல்கலைக்கழகத்தின் பெயரால் இலங்கை தமிழ்மக்களை ஏமாற்றிக் கொண்டிந்த த.ப.க. இயக்கத்தின் மோசடியை மூடிமறைக்க உதவியது அல்லது நியாயப்படுத்தியது எனச்சொல்லலாம். எது எவ்வாறாயினும் தமிழ் பல்தலைக்கழகத்தை எதிர்பார்த்து பணத்தை வாரிக் கொட்டிய தமிழ் மக்கள் வடபுல பாரம் பரியத்தை சார்ந்த கொழும்புவாழ் உயர்மட்ட தமிழர்கள் சிலரால் மிகச் சுலபமாக ஏமாற்றப்பட்டதே வரலாறாகியது 1959 இற்கும் 1966இற்கும் இடைப்பட்ட காலத்தில் த.ப.க.இயக்கம் சாதித்தது என்ன

மேற்படி எட்டு வருடகால இடை வெளியில் கொழும்பு வெள்ளவத்தை அலக்சாண்டர் வீதியில் த.ப.க.இயக்கத்தின் பணிமனை தேவைக்காக பெருந்தொகை வாடகையில் பெறப்பட்டிருந்த மூன்று மாடிகட்டிடத் தெகுதியில், "நாவலர் அக்கடமி" என்ற பெயரில் இங்கிலாந்து உயர்கல்வி பரிட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கு பிரத்தியேகமான வகுப்புகள் நடாத்தப்பட்டன. அன்றைய காலகட்டத்தில் மேற்படி உயர் கல்விக்கு உரியவர்களாகக் காணப்பட்டவர்கள் வட புல பாரம்பரியத்தைக் கொண்ட கொழும்புவாழ் உயர்மட்ட தனவந்த தமிழர்களின் பிள்ளைகளேயாகும். மேற்கூறப்பட்ட வகுப்புகளுக்கு தேவையான விஞ்ஞான ஆய்வுகூடம், உயர்கல்விக்குத் தேவையான நூலகம், ஆகியன "நாவலர் மண்டபம்" என்ற பெயரில் நிறுவப்பட்டது. இச்செயல்பாடுகள் மூலம் கொழும்புவாழ் உயர்மட்ட தமிழ் சமூகத்திற்கு பாரிய சேவையாற்றப்பட்டது. ஆக நடுத்தர, பாமர தமிழ்மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் தமிழ் பல்கலைக்கழகம் ஒன்றிற்காக வாரி வழங்கிய பணத்தில் பெரும்பகுதி மேற்கூறப்பட்ட தேவைக்காக செலவு செய்யப்பட்டது. த.ப.க.இயக்கத்தின் ஆரம்பமே கொழும்புவாழ் உயர்மட்ட தமிழர்களின் நலன் கரதியதென்பதாகும்.

எட்டு வருடகாலமாக தமிழ் பலகலைக்கழகம் கட்டிமுடிக்கப்படாமையும் மேற்கொண்டு தமிழ் பல்கலைக் கழகம் நிர்மாணிப்பதை உயர்கல்விச் சட்டம் தடுத்திருந்ததை அறிந்து கொண்ட நிலச்சொந்தக்காரர்கள் பலரும், தமக்கு வழங்கியோர் பலரும் தமக்கு ஏற்க்கெனவே கொடுத்த வாக்குறுதிக்கிணங்க, தமது நிலங்களை மீளக்கையளிக்கும்படி த.ப.க.இயக்கத்தினரை நிர்ப்பந்திக்கத் தொடங்கினர்.

(தொடரும்)


## தினச்செய்தி விளம்பரக் கட்டணம்

**Thinacheithi Weekly Newspaper Advertisement Rate Card**

| PagesSizes | (col /cm) | Black & White | Color |
|---|---|---|---|
| Full page | 08x40 | 40000 . 00 | 50000 . 00 |
| Half page | 08x20 | 20000 . 00 | 25000 . 00 |
| Qatar page | 04x20 | 10000 . 00 | 12500 . 00 |
| Per col /cm | 01x01 | 95 . 00 | 160 . 00 |

| | | |
|---|---|---|
| **Front Page** | | |
| Front strip ad | 10x5 | 10000 . 00 |
| Front height ad | 4x15 | 12000 . 00 |
| Per col /cm | 8x8 | 15000 . 00 |
| **Ear space** | | |
| Front Page | 8x8 cm | 25000 . 00 |
| Back page | 8x8 cm | 20000 . 00 |

**Obituary/ Death notice / Birthday greeting/ Wedding notice & greeting/ Invitation**

**Per col/cm 1x1 Black&White 60.00 Color 110.00**

**Election Notice & Meeting**

**Per col/cm 1x1 Black&White 120.00 Color 200.00**

**Classified Advertisement:**

***First 20 words 150.00 Additional word 10.00***

T.P : 021 7539300
Fax : 021 2242139
E-mail : thinacheithiadvt@gmail.com
Web : www.thinacheithi.com / lk

(11 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# சிங்கள முஸ்லிம்...

மையிலான பொலிஸாரும் நடாத்திவரும் அட்டகாசம் பற்றி எடுத்துக் கூறினார்.

இலங்கையிலுள்ள பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக எதிர்ப்பலைகள் கிளம்பிற்று. இந்திய நாடாளுமன் றத்தில் கேள்விகள் எழுப்பப்பட்டன. பொன்னம்பலம் இராமநாதன் பிரித் தானியாவில் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் பலனாக இலங்கைத் தேசாதிபதி சேர். றொபோட் சாள் மோர்ஸ் பிரித்தானியாவிற்கு திருப்பி யழைக்கப்பட்டார். இலங்கையில் நிலைத்து நின்ற இராணுவச் சட் டமும் இரத்துச் செய்யப்பட்டது. மேலும் மறியலில் அடைத்து வைக்கப்பட்ட சிங்களத் தலைவர் கள் எல்லாம் விடுதலை செய்யப் பட்டனர்.

இலங்கையின் புதிய தேசாதிபதி யாக சேர். ஜோன் அன்டேசர் (1916 – 1918) நியமிக்கப்பட்டார்.

இராமநாதனின் முயற்சியை சிங்களவர்கள் பெரிதும் பாராட்டி னார்கள். வெற்றிகரமாக சிங்களத் தலைவர்களை விடுதலை செய்த பின் பி அன் ஓ மாலவா கப்பலில் 17 பெப்ரவரி 1916 ஆம் ஆண்டு இராமநாதன் நாடு திரும்பினார்.

துறைமுகத்தில் வந்திறங்கிய இராமநாதனை வரவேற்க சிங்களத் தலைவர்கள் அடங்கிய ஒரு வர வேற்புக்குழு அமைக்கப்பட்டது. ஏ.ஈ.. குணசிங்க, ஏ.டபிள்யூ.பி ஜெயதிலக்க, ஆர்.ஈ.டபிள்யூ பெரோ, பி.என் ஜெயநெற்றி மற்றும் லய னெல் கொத்தலாவள ஆகியோர் துறைமுக வாசலில் மாலைகளு டன் வரவேற்ற காத்திருந்தனர்.

துறைமுகத்தின் வெளியே வந்த இராமநாதனை சிங்களத் தலை வர்கள் தமது தோளில் சுமந்து அவரது கொல்லுப்பிட்டியவிலுள்ள வாசஸ்தலத்திற்கு ஒரு வீரனைப் போல ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள்.

(08 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# பிரபாகரனும் – பாலசிங்கமும்...

இருந்தது. இந்தச் சந்திப்பின் மூலம் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்துகொண்டார்கள் என்றும், இருவருக்கும் இடையில் பரஸ்பரம், அன்பு, புரிந்து ணர்வுகள் உருவாக்கத் தொடங்கியதாகவும், அடேல் தனது புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தார்.

சென்னை வந்த பாலசிங்கம் 15 முக்கிய தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு அரசியல் வகுப்புக்கள் நடாத்தினார். அவர் உமா மகேஸ்வரன் பிரபாகரனுக்கு இடையிலான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண் டார். ஆனால் அவரது முயற்சி பலனளிக்கவில்லை.

அப்பொழுது அவர் உமாவையும், ஊர்மிளாவை யும் பார்த்து அவர்களது தவறை உணர்ந்து ஏற்றுக் கொண்டு மன்னிப்புக் கேட்டு, மணம் முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். அதற்கு உமா மகேஸ்வரன் கடுமையாக மறுத்தார். அந்த நேரத்தில் தான் ஊர்மிளாவை ஒரு விடுதலை புலி உறுப்பினர் பிரபாகரன் முன் அழைத்து வந்தார்.

கோபமடைந்த பிரபாகரன் அவரை மன்னிக்க முடியாது எனக் கூறி, ஊர்மிளாவின் காலடியில் காறிதுப்பி விட்டுச் சென்றார். அதன் பின் ஊர மிளா சிலகாலம் வாழ்ந்து, பின் புற்றுநோயினால் காலமானார்.

பிரபாகரன் கூறியது போல உமா மகேஸ்வரன் விடுதலைப் புலிகள் தலைமையிலிருந்து இராஜினாம செய்து விலகவில்லை. அவரை இயக்கத்தின் மத்திய குழு பதவி நீக்கம் செய்தது. ஆனால் தொடர்ந் தும் நான்கு மாதகாலமாக தான் தான் விடுதலைப் புலிகளின் தலை வர் என்று உமாமகேஸ்வரன் கூறி வந்தார். அப்பொழுது உமாவின் சில நம்பிக்கையான போராளிகள், உமா மகேஸ்வரனுடன் சேர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயு தங்களை களவாடிக் கொண்டு தலை மறைவாகி விட்டனர்.

(17 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# ஆறு மாதத்திற்குள்...

காலத்தின் தேவையும் கட்டாய முமாகும். இது உருவாக்கப்பட் டமை மக்களுக்கு மகிழ்ச்சியான விடயமே. ஆனால் ஓரிரண்டுபேர் இதனை மோசமாக விமர்சிப்பத னையும் நாம் காண்கிறோம். எங் களது மாகாண அரசை சூழ ஒரு புத்திஜீவிகள் வட்டம் வேண்டும். அதற்கமைய அவர்களின் ஆலோ சனையை பெற்றுக்கொள்ள முயன்ற எமது முதல்வரை பலர் நாகரிக மற்றவகையில் பல்வேறு விமர்ச னங்களை செய்கின்றனர். அதனை மக்களும் புரிந்து கொண்டுள்ளனர்.

என்னைப் பொறுத்தவரையில் முதலமைச்சர் இணைத்தலை வராக உள்ள தமிழ் மக்கள்பேர வையின் உருவாக்கம் என்பது காலத்தின் தேவையும் கட்டாயமு மாகும்.

(தொடரும்)

# அறிவியல் தகவல்கள்

2ஆம் உலகப்போரில் ஐக் கிய அமெரிக்கா வெற்றி பெற்ற பின்னர் அதனை அமெரிக்கர்கள்



ஐஸ்கிறீம் உடனே கொண்டாடினர். 1946ஆம் ஆண்டு அமெரிக்கப் பிரஜை ஒருவரின் ஐஸ்கிறீம் கொள்வனவு 5 கலன்கள்.

1771ஆம் ஆண்டில் போலந்து இராச்சியமானது, ஐரோப்பாவில் ரஷ்யாவை அடுத்து மிகப் பெரிய நாடாக விளங்கியதுடன், சனத் தொகையில் பிரான்ஸ் நாட்டிற்கு அடுத்த ஸ்தானத்திலிருந்தது. ஆனால் 25 ஆண்டுகளில் போல ந்து இராச்சியமானது பல்வேறு பாகங்களாக பிரிவடைந்துவிட் டது.

உலகில் சமாதான தருணங் களிலும், யுத்த தருணங்களிலும் வெவ்வேறு விதத்தில் தேசியக கொடியினை பறக்கவிடும் ஒரே நாடு பிலிப்பைன்ஸ் ஆகும். பிலிப் பைன்ஸ் நாட்டின் தேசியக்கொடி யானது நீலம் மற்றும் சிவப்பு நிறங்களைக் கொண்டிருக்கின்றன.

சமாதான தருணங்களில் நீல நிறப்பாகமானது மேற்பாகத்திலி ருக்குமாறு தேசியக்கொடி பறக்க விடப்படும் அதேவேளை யுத்த தருணங்களில் சிவப்பு நிறப்பாகமா னது மேற்பாகத்திலிருக்குமாறும் பிலிப்பைன்ஸ் நாட்டில் தேசியக் கொடி பறக்கவிடப்படும்.

ஒரு நாளில், பெண்ணொரு வர் சராசரியாக 7000 சொற்களைப் பேசுகின்றார், ஆனால் ஆணொரு வர் சராசரியாக 2000 சொற்களையே பேசுகின்றார்.

உலகில் ஒரேயொரு புகையி ரத நிலையத்தினைக் கொண்ட ஒரே நாடு சிங்கப்பூர் ஆகும்.

உலக நீர்ப்பரம்பலில் 46வீத வகிபாகத்தினை பசுபிக் சமுத்திரம் வகிக்கின்றது. மேலும், அத்தி லாண்டிக் சமுத்திரம் 23.9வீதம், இந்து சமுத்திரம் 20.3வீதம், ஆர்ட்டிக் சமுத்திரம் 3.7வீதம் வகிபாகத்தினை வகிக்கின்றன.

பூமியின் மேற்பரப்பு 196,950,711 சதுர மைல்கள் (510,100,000 சதுர கிலோமீற்றர்கள்) ஆகும்.

சீன நாட்டில் அண்ணளவாக 200 குடும்பப் பெயர்களே பயன் படுத்தப்படுகின்றன.

கத்தரிக்கோலினைக் கண்டு பிடித்தவர் உலகப் புகழ்பெற்ற ஓவியர் லியனாடோ டாவின்சி ஆவார்.

உலகின் முதல் 100 பணக் காரர்களின் கடந்த வருட வரு மானம், உலகில் கடுமையான வறுமையில் இருக்கும் ஏழை மக்களின் மோசமான வறுமையை ஒழிக்கத் தேவையான பணத்தை விட நான்கு மடங்கு அதிகமா கும் என சர்வதேச தொண்டு நிறுவனமான ஒக்ஸ்பாம் கூறியுள் ளது.

கடந்த 2012ஆம் வருடத்தில், உலகின் முதல் 100 பணக்காரர்க ளின் மொத்த வருமானம் 240 பில்லியன் அமெரிக்க டொலர்களா கும். அதற்கு மாறாக உலகில் மிகவும் மோசமான வறுமையில் இருக்கும் மக்கள் ஒரு நாளைக்கு ஒன்றேகால் டொலருக்கும் குறை வான பணத்திலேயே வாழ்கின்ற னர்.

**யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல பத்திரிகை நிறுவனமொன்றிற்கு பணிநிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**01. கணக்காளர்**

இத்துறை சார்ந்து அனுபவமும் திறமையும் உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும். அனுபவம், தகுதிக்கேற்ற வகையில் ஊதியம் வழங்கப்படும்.

**02. விநியோக முகாமையாளர்**

பத்திரிகை விநியோகத்தில் அனுபவம் உள்ளவர் விண்ணப்பிக்கலாம்

**03. பக்க வடிவமைப்பாளர்கள்**

(Corel Draw, Photoshop, Pagemaker, In Designing) அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

**04. உதவி ஆசிரியர்கள் - ஒப்புநோக்குநர்**


*பத்திரிகைத்துறையில் முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது*

*விண்ணப்பங்களை 31.01.2016 க்கு முன் அனுப்பி வைக்கலாம்.*

முகவரி : தில்லைகட்டி லேன் சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

# உலகிலேயே மிகப் பெரிய இரத்தினக்கல் இலங்கையில்

இந்த இரத்தினக்கல்லின் பெயர் அலெக்சாண்ட் றைய்ற் (Alexandrite). இலங்கையிலுள்ள இந்தக் கல்லின் எடை 429.60 கரட். இதுவே தற்சமயம் உலகில் மிகப்பெரிய இரத்தினக்கல். இதன் பெறுமதி ரூபா 600 - 700 கோடிக்கு மேலென்று இரத்தினக்கல் விற்பன்னர்கள் கூறுகின்றார்கள்.




இன்றைய இரத்தினக்கல் சந்தையில் இயற்கையாக விளைந்த 1 கரட் அலெக்சாண்ட்றைய்ற் இரத்தினக்கல்லின் விலை, அமெரிக்கா டாலர் 15000/= ஆகும். 1 கரட்டுக்கு மேற்பட்ட ஒரு கல்லிற்கான விலை அமெரிக்கா டாலர் 50,000 முதல் 75,000 டொலர் வரை போகின்றது.

10 கரட்டுக்கு மேற்பட்ட அலெக்சாண்ட்றைய்ற் இரத்தினக்கற்களை விலை மதிக்க முடியாமல் இரத்தினக்கல் விற்பன்னர்கள் தடுமாடுகின்றார்கள்.


இலங்கையிலுள்ள இரத்தினக்கல்லின் பெறுமதி 600 - 700 கோடி. இலங்கையிலுள்ள இந்தக் கல் இரத்தினபுரியில் அகழ்ந்தெடுக்கப்பட்டது என்று தெரிய வருகின்றது.

அலெக்சாண்ட்றைய்ற் இரத்தினக்கல்லைப் பொறுத்தளவில் இரவில் ஒரு நிறமாகவும், பகலில் ஒரு நிறமாகவும் காணப்படும். அதுதான் அந்தக் கல்லின் சிறப்பு. இலங்கையிலுள்ள அலெக்சாண்ட்றைய்ற் இரத்தினக்கல் பகலில் பச்சையாகவும், இரவில் சிவப்பு சேர்ந்த கபிலம் (Reddish-Brown) நிறமாகவும் ஒளிப்பதாக இந்தக் கல்லை ஆராய்ந்த விற்பன்னர்கள் அறிவித்துள்ளார்கள்.

அலெக்சாண்ட்றைய்ற் என்ற இந்த இரத்தினக் கல் மிகவும் அரியதாகும். இது முதல் முதலில் ரஷ்யாவில் 1830 ஆம் ஆண்டு யூரல் மலையில் அகழ்ந்த போது கண்டுபிடிக்கப்பட்டது. எனவேதான் இந்தக் கல்லுக்கு அலெக்சாண்ட்றைய்ற் என்று அன்றைய ரஷ்யா மன்னரான ஷார்.(Czar) அலெக்சாண்டர் II இன் பெயர் சூட்டப்பட்டதாகும். யூரல் மலைத்தொடரில் இந்த அலெக்சாண்ட்றைய்ற் கற்கள் தீர்ந்துவிட்டன.

அங்கே இரத்தினக்கல் இல்லாமல் போனதையடுத்து, 1987 ஆம் ஆண்டு அலெக்சாண்ட்றைய்ற் கல் பிறேஸில் நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அலெக்சாண்ட்றைய்ற் கற்கள் மடகஸ்கார், மியான்மார் (பர்மா), சிம்பாவே, இலங்கை ஆகிய நாடுகளிலும் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன. இந்த இடங்களில் நிறமாறக் கூடிய கற்களே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி, இலங்கையில் மட்டுமே இந்த மிகப்பெரிய அலெக்சாண்ட் றைய்ற் கல்லு கண்டுபிடிக்கப்பட் டுள்ளது.

இந்த அலெக்சாண்ட்றைய்ற் இரத்தினக்கல் சுவிற்சலாந்து. அமெரிக்கா ஆகிய இடங்களில் பரிசோதிக்கப்பட்டு உலகத்திலேயே மிகப் பெரிய கல் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.


இதுவே இலங்கையிலுள்ள கரட் 429.60 எடையுள்ள அலெக்சான்ட்றைய்ற் கல்லாகும்.

இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஜன. 03, 2016 அன்று வெளியிடப்பட்டது.